

# வெளியில் எல்லாம் பேசலாம்

தெணியான்

# வெளியில் எல்லாம் பேசலாம்

சிறுகதைத்தொகுதி

தெணியான்

வெளியில் எல்லாம் பேசலாம்

நூலாசிரியர் : தெணியான்
முதற்பதிப்பு : 2023 தை
வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய், இலங்கை
உரிமை : க.மதன்
வடிவமைப்பு : க.பரணீதரன்
நூலாக்கம் : பரணீ அச்சகம், நெல்லியடி
பக்கங்கள் : 96
விலை :400/-
ச.தே.பு.நி.இல : 978-624-5881-67-3

Veliyil ellam pesalam

Author :Theniyan
First Edition : 2023 January
Copy Rights : K.Mathan
Publication : Jeevanathy, Kalaiaham, Alvai, SriLanka
Design : K.Bharaneetharan
Printers : Baranee Printers, Nelliady
Pages : 96
Price : 400/-
ISBN : 978-624-5881-67-3

ஜீவநதி வெளியீடு - 252

சாகித்திய ரத்னா தெணியானின்
81 ஆவது அகவை நாளை
முன்னிட்டு
இந்நூல் அவரது படைப்புக்களை நேசிக்கும்
க. மதன் அவர்களது நிதி அனுசரணையில்
வெளியிடப்படுகின்றது

# வரலாற்றை சீரமைக்கும்
# படைப்பாளன் தெணியான்

*சாதிய ஒடுக்குமுறை என்பது காலம் காலமாக, காலத்திற்கு ஏற்ப முகமூடி அணிந்து நம் மத்தியில் நிலைத்திருக்கும் ஒரு சமூக அநீதி. நீண்ட காலமாக தொடர்ச்சியாக நடந்துவந்த போராட்டங்களின் பலாபலனாக, சில உரிமை களை மீட்க முடிந்தபோதும், இன்னும் பழைய ஒடுக்குமுறைகள் புதிய வடிவங்களில் தோற்றம்கண்டு வருகின்றன.*

*அன்றொரு காலம், சாதிய அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்கள், ஈவிரக்கமற்ற முறையில் சுரண்டப்பட்டு, கல்வி போன்ற அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில், முதலாளித்துவம் தான் சாதிய ஒடுக்குமுறைக்கு மூலகாரணி என கற்பிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி களின் ஆதரவுடன், ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக புரட்சி, போராட்டங்களை முன்னெடுத்து, அடிப்படை உரிமைகளை மீட்டு எடுத்தனர். கல்வி கற்று தம் திறன்களை வெளிப்படுத்தினார்கள். பொருண்மீயரீதியில் வளம் பெற்றார்கள். வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொண்டார்கள். ஆயினும் ஒடுக்குமுறைகள் முற்றாக நீங்கிய பாடில்லை. சமத்துவம், சமநீதி கிடைத்ததாக கூறிவிடமுடியாது. இந்த சமூக ஆய்வுகள் மூலம் நாம் ஒரு உண்மையை கண்டு கொள்ளலாம். அதாவது புற உலகில் எந்தெந்த வடிவங்களில் மாற்றங்களை நிகழ்த்தினாலும், அக உலகை சீரமைக்காத வரையில், சாதி பற்றிய கருத்துலகில் ஆழமான மாற்றங்கள் நிகழாமல் சாதி சமத்துவம் சாத்தியமில்லை. உண்மையான சமத்துவம் என்பது சமூகங்களுக்கிடையேயான உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில் தான் சாத்தியமாகும்.*

*ஒருவர் மற்றவருக்குச் சமம் என்ற கண்டிப்பான ஒரு அடிப்படை யில் மக்களைத் திரளாக்காத எதுவும் தேசியத்திற்கு எதிரானது. இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் ஒரு மதவெறியர் தேசியவாதியாக இருக்க முடியாது. ஒரு ஆணாதிக்கவாதி தேசியவாதியாக இருக்க முடியாது. ஒரு பிரதேசவாதி அல்லது ஊர்வாதி தேசியவாதியாக இருக்க முடியாது. ஒரு சாதிவாதி தேசியவாதியாக இருக்க முடியாது. தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையையும் உள்ளடக்கிய ஒன்றுதான். சமூக விடுதலை இல்லாத தேசிய விடுதலை எனப்படுவது முற்போக்கானது அல்ல.*

சமூகங்கள் ஒத்திசைவுடன், ஒருவர் ஒருவரின் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், கௌரவத்தையும் மதித்து, தேசத்தின் பொறுப்புகளை பகிர்ந்து, தேசத்தின் மேம்பாட்டுக்கு உழைத்து, பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ்ந்தால், இந்த சாதி வேறுபாட்டால் எழும் பல்வேறு முரண்பாடுகள் நீங்கும். இந்த அன்புறவின் ஆழமான அர்த்தத்தையும், முக்கியத்துவத்தை யும் உயர் சாதி என கூறிக்கொள்வோர் புரிந்து கொள்ளும் போதுதான் சாதிய வெறியும் அதனால் எழும் அடக்குமுறைகளும் அகன்றுவிட வாய்ப்புண்டு.

இலக்கியங்கள் கலைக்காக அல்ல; அவை மக்களுக்காக படைக்கப் பட வேண்டும். இலக்கியங்கள் சமூக உலகத்தின் மீதும் சமூக இயக்கத்தின் மீதும் தாக்கத்தை விளைவிக்கின்றன. சமூக மாற்றத்திற்கு உந்துசக்தியாக விளங்குகிறது. இலக்கியங்கள் மனித விழிப்புணர்வுக்கும் விடுதலைக்கும் பாதை அமைத்து கொடுக்கும் பணியை முதன்மையானதாக கொண்டிருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட சமூகத்தில், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் ஒரு எழுத்தாளன் வாழ்கிறான். தான் வாழும் சமூகத்தையும், அந்த சமூகத்தின் வாழ்நிலை சிக்கல்களையும், போராட்டங்களையும் எழுத்தாளன் புறம் தள்ளிவிட முடியாது. வரலாற்றிலிருந்து அவன் ஒளிந்து கொள்ளமுடியாது. அவன் அவற்றை எழுத வேண்டும். அந்த எழுத்துக்கள் அந்த சமூகத்தின் வாழ்நிலையை ஊடுருவி நிற்க வேண்டும். மாயையிலும், பழமையிலும், பொய்மையிலும் சிறைப்பட்டு கிடக்கும் சமூகத்தாரை சிந்திக்க தூண்டி, செயற்பட வைக்க வேண்டும். சமூக விடுதலையை இலக்காக கொண்டிருக்கவேண்டும். இந்த வகையில் எழுத்தாளனுக்கு சமூகப் பற்றுணர்வு அவசியம், அர்ப்பணிப்பு அவசியம், ஈடுபாடு அவசியம். எழுத்துக்கள் சமூக அரசியல் ஈடுபாடு கொண்டதாக அமையவேண்டும்.

சொற்களுக்கு அபாரமான ஆற்றல் உண்டு. அவை வாசகனின் உள்ளத்தை ஊடுருவி பற்றிக்கொள்கின்றன. அவனது இருண்ட மனக் குகைக்குள் வெளிச்சம் பாய்ச்சுகின்றன. மாயைகளை போக்குவதுடன் அவற்றின் மீது கட்டப்படும் கனவுகளை சிதைத்து உள்ளத்தை சீரமைக் கின்றன. எழுத்துக்கலையானது அரசியல் விழிப்புணர்வை தூண்டி மனித விடுதலைக்கு வழிகாட்டி விடுகிறது. சமூக உணர்வுடன், சமூக விடுதலைக் காக எழுதுபவன், தனது இருப்பிற்கும் மற்றவர்களின் வாழ்விற்கும் பொருள் கொடுக்கிறான். மனித இருப்பு நிலைக்கு அப்பால், சமூக வாழ்நிலைக்கு அப்பால், அழகுணர்ச்சிக்காக எழுதுபவன், கலையுணர்விற்காக, நித்திய விழுமியங்களை தேடி எழுதுவதில் அர்த்தமில்லை. அது சமூகத்தின் ஒடுக்குமுறையாளர்களை, அதிகாரவர்க்கத்தினரை திருப்தி படுத்தும் படைப்புகளாகும். அந்த எழுத்துக்கள், சமூக ஒடுக்குமுறையை நியாயப் படுத்துவதாக அமைந்துவிடும். காலத்தின் மூச்சாக வாழ்வியக்கம் அசைகிறது. அந்தக் காலத்தையும், அந்தக் காலமாக விரியும் வாழ்வையும்,

அந்த வாழ்வாக அவிழும் இன்னல்களையும், விளைச்சல்களையும் நுட்பமாக சித்தரிக்கும் கலை இலக்கிய படைப்புகள் உன்னதமானவை.

தான் பிறந்த மண், தான் பிறந்த சூழல், தான் உறவுகொள்ளும் சமூகம், தான் வாழும் காலம் என்ற ரீதியில் வாழ்க்கையே ஒரு எழுத் தாளனது படைப்புத் தளமாகிறது. வாழ்க்கை பட்டறிவை மூலப் பொருளாக கொண்டு இலக்கியம் படைப்பவனே சிறந்த எழுத்தாளன். ஒடுக்கப்படும் மக்கள் சமூகத்தில் இருந்தே, வரலாற்றை சீரமைக்கும் மாமனிதர்கள் பிறப்பெடுக்கிறார்கள். அவர்களே வரலாற்றை படைக் கிறார்கள். வரலாற்றின் வழிகாட்டியாக தம் தடங்களை ஆழமான பதிவாக விட்டு செல்கிறார்கள்.

தெணியான் என நாம் அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கும் கந்தையா நடேசு ஒரு அற்புதமான கலைஞன். இவர் இந்த மண்ணை நேசித்தார். இந்த மண்ணில் வாழும் மக்களை நேசித்தார். இந்த மண்ணில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை தனது இலட்சிய மாக வரித்துக் கொண்டு எழுதியது மட்டுமல்ல, தன் எழுத்துக்களுக்கு இலக்கணமாகவும் வாழ்ந்தவர். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை மூலப் பொருளாகக் கொண்டு இலக்கியம் படைத்தவர். ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாட்டு மரபில் வேரோடி நிற்பதால் அவரின் படைப்புகளுக்கு அலாதியான வீச்சும் வலிமையும் உண்டு. சதையும், குருதியுமாக இந்த மண்ணின் பண்பாட்டுப் படிமங்கள் அவரது படைப்புகளுக்கு உயிர் கொடுத்தன.

ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களையும், ஏக்கங்களையும், ஒடுக்குமுறையின் கோர வடிவங்களையும் அழுத்தமாக உணர்த்திக் காட்டுவதுடன், ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசம்மிகு கொதிப்புணர்வை யும் அவரது படைப்புகள் தட்டி எழுப்பிவிடுகின்றது. ஒடுக்கப்படும் மக்களை, அக, புற விடுதலையை நோக்கி உந்தி தள்ளுகின்றன. அவரது இலக்கிய பணியின் முக்கியத்துவம் இதிலே தான் தங்கி இருக்கின்றன. எமது மண்ணின் சாதிய ஒடுக்குமுறையையும், அது காலத்திற்கு காலம் எடுக்கும் நுட்பமான வடிவங்களையும் தோலூரித்துக் காட்டி, ஒடுக்கப்பட்ட மக்களை விழிப்படையச் செய்ததில் அவரது பங்கு கணிசமானது. அவரது படைப்புகள் இலக்கியத்திற்கு மட்டுமல்ல, மனித வாழ்விற்கும் வளமையும் செழுமையும் சேர்க்கின்றன. அவரது இன்னொரு இலக்கிய படைப்பு வெளிவருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**க.மதன்**

# நன்றியுடன்...

*எனது தந்தையார் தெணியான் அவர்களின் ஆறாவது சிறுகதைத் தொகுப்பாக "வெளியில் எல்லாம் பேசலாம்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பு வெளி வருகின்றது. எனது தந்தையின் நாவல்கள், சிறகதைத் தொகுப்புகள், கட்டுரைத் தொகுதிகள் என இருபத்தைந்து வரையான நூல்கள் அவர் வாழ்ந்த காலத்தில் வெளிவந்திருக்கின்றன. அவரது மறைவுக்குப்பின்னர் வெளிவருகின்றது இந்நூல். "பிணைப்பு" என்ற சிறுகதை மூலம் 1964 ஆம் ஆண்டு இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்த எனது தந்தையார் சுமார் 58 ஆண்டுகள் இலக்கியப்பணி ஆற்றி 150 இற்கு மேற்பட்ட சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என பல்வேறு படைப்புகளைத்தந்து "சாகித்ய ரத்னா" போன்ற பல உயரிய விருதுகளைப் பெற்று வாழ்ந்து மறைந்திருக்கின்றர். "தெணியான்" என்னும் நாமம் தமிழ் இலக்கிய உலகில் என்றுமே ஒரு பேசுபொருளாக மிளிர்கின்றவாறு வாழ்ந்து மறைந்திருக்கின்றார். அவரது 150 இற்கு மேற்பட்ட சிறுகதைகளில் இன்னும் பல சிறுகதைகள் தொகுக்கப்பட வேண்டியுள்ளன. அது போலவே தொகுக்கப்பட வேண்டிய பல கட்டுரைகளும் உள்ளன. அந்த வகையில் இதுவரை தொகுக்கப்படாத சிறுதைகளில் ஜீவநதி சஞ்சிகையில் வெளிவந்த 8 சிறுகதைகளும், மல்லிகை சஞ்சிகையில் வெளிவந்த 4 சிறுகதைகளும் சேர்த்து 12 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

*இத்தொகுதியானது எனது தந்தையாரின் ஒரு தீவிர வாசகன் கனடா நாட்டில் வாழும் திரு க.மதன் அவர்களின் அனுசரணையுடன் வெளிவருகின்றது. ஒரு எழுத்தாளரின் படைப்புகள் அவரது ஒரு வாசகனாலேயே நூலாக்கம் செய்யப்படுவது அந்த எழுத்தாளனுக்கு கிடைத்த ஒரு பெரிய அங்கீகாரம் என நான் கருதுகின்றேன். எனது தந்தையாருக்கு கிடைத்த கௌரவிப்புக்களுக்கு இது ஈடு இணையானது. திரு க.மதன் அவர்களின் சமூகம் பற்றிய ஆழமான பார்வையையும் எனது தந்தையார் மீதான தரிசிப்புக்களையும் இந்நூலில் உள்ள தனது உரையில் மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். அவரது முழு அனுசரணைக்கும் சிந்தனைக்கும் செயலூக்கத்திற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தந்தையார் சார்பாகவும் எமது குடும்பம் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இச்செயற்பாடுகளுக்கு இணைப்புப்பாலமாக செயற்பட்டு வருகின்ற ஆசிரியர் திரு மா.செல்வதாஸ் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள்.*

*மேலும் எனது தந்தையார் வாழ்ந்த காலத்திலேயே மேலும் தொகுப்புகளை நூல்களாக்கி ஜீவநதி பதிப்பகம் வெளியிட்டு வந்துள்ளது. பல கௌரவிப்புகளை ஜீவநதியின் பிரதம ஆசிரியர் க. பரணீதரன் அவர்கள் காலமறிந்து மேற் கொண்டுள்ளார். எனது தந்தையார் மீது மிகவும் அக்கறையும் அன்பும் கொண்ட திரு க. பரணீதரன் அவர்கள் எனது தந்தையாரின் மறைவுக்குப்பின்னரும் அவரது படைப்புகளை தொகுத்து வெளிக்கொணர வேண்டும் என்பதில் இன்றும் முழுமூச்சாகச் செயற்பட்டு வருகின்றார். தரமான ஒரு இலக்கியவாதியாக மாத்திரமல்லாது படைப் பாளர்களின் படைப்புகளுக்கு ஓர் ஆவணக் காப்பகமாகவும் அவர் செயற் பட்டு வருகின்றார். எனது தந்தையாரின் பிறந்த தினத்தில் இவ்வெளியீடு செய்யப்பட வேண்டும் என்பது என் தந்தை மீது அவர் கொண்ட அன்பை மேலும் வெளிப்படுத்துகின்றது. இந்நூலினை சிறப்பாக பதிப்பாக்கம் செய்து வெளியீடு செய்கின்ற ஜீவநதி பதிப்பகத்திற்கும் அதன் பிரதம ஆசிரியர் திரு க. பரணீதரனுக்கும் எனது தலையாய நன்றிகள்.*

*தொடர்ந்தும் தொகுக்கப்படாத எனது தந்தையின் படைப்புகள் வெளிவர என்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு எனது தந்தையாரின் இலக்கியத் தடத்தில் நானும் பயணிப்பேன் என்று கூறி இந்நூல் வெளிவருவதில் தொடர்புற்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.*

**அன்புடனும் நன்றியுடனும்**

**க.ந.ஆதவன்**

**(மூத்தமகன்)**

# உள்ளே...


- ஆத்ம பந்தம்
- மரணத்தின் ஓலம்
- அணையாச்சுடர்
- விபசாரன்
- தோற்ற மயக்கங்கள்
- நோயாளி
- பூவும் பொட்டும்
- இங்கிலிஸ் வாத்தியார்
- அறாதவேர்
- அவள் அல்ல இவள்
- உறவுகளைத்தேடும் ஆவிகள்
- வெளியில் எல்லாம் பேசலாம்

## தெணியானின் நூல்கள்

நாவல்கள் ∴ குறுநாவல்கள்

1. விடிவை நோக்கி – வீரகேசரி வெளியீடு, கொழும்பு, 1973
2. கழுகுகள் – நர்மதா வெளியீடு, சென்னை, 1981
3. பொற்சிறையில் வாடும் புனிதர்கள் – முரசொலி வெளியீடு, யாழ்ப்பாணம், 1989
4. மரக்கொக்கு – நான்காவது பரிமாணம் வெளியீடு, கனடா, 1994
5. காத்திருப்பு – பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 1999
6. கானலில் மான் – பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 2002
7. சிதைவுகள் – மீரா பதிப்பகம், கொழும்பு, 2003
8. பனையின் நிழல் – மயூரன் நினைவு வெளியீடு, அல்வாய், 2006
9. வெந்து தணிந்தது – குறுநாவல், ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய், 2018
10. தவறிப் போனவன் கதை – கொடகே சகோதரர்கள் வெளியீடு, கொழும்பு, 2010
11. குடிமைகள் – ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய், 2013 இரண்டாவது பதிப்பு, கறுப்புப் பிரதிகள், சென்னை, 2016
12. ஏதனம் – பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 2016
13. மூவுலகு – கொடகே சகோதரர்கள் வெளியீடு, கொழும்பு, 2018

சிறுகதை தொகுப்புகள்

1. சொத்து – என்.சி.பி.எச் வெளியீடு, சென்னை, 1984
2. மாத்துவேட்டி – மல்லிகைப்பந்தல் வெளியீடு, யாழ்ப்பாணம், 1996
3. இன்னொரு புதிய கோணம் – பூமகள் வெளியீடு, கொற்றாவத்தை, 2007
4. ஒடுக்கப்பட்டவர்கள் – பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 2010
5. தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள் – ஜீவநதி கலை அகம், அல்வாய், 2012

கட்டுரைத் தொகுதிகள்

1. இன்னும் சொல்லாதவை வாழ்வனுபவங்கள், எழுத்து வெளியீடு, மதுரை, 2011
2. பூச்சியம் பூச்சியமல்ல – இலக்கிய அனுபவங்கள், என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை, 2013
3. நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி – குமரன் புத்தக நிலையம், கொழும்பு, 2012 இரண்டாவது பதிப்பு, என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை, 2014
4. மனசோடு பழகும் மல்லிகை ஜீவா – ஹப்பி டிகிடல் சென்ரர் கொழும்பு, 2014
5. பார்க்கப்படாத பக்கங்கள் ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய், 2015

# ஆத்ம பந்தம்

அப்பு இன்னும் வரவில்லை.

அப்பு இப்படி வராமல் இருக்க மாட்டார்

அவருக்கு இயலாத உடல் நிலையிலும் மெல்ல மெல்ல நடந்து அவர் எப்படியும் வந்து சேர்ந்து விடுவார்.

விடுமுறை நாட்களில் நான் வீட்டில் நிற்பேன் என்பது அவருக்கு தெரியும். சனிக்கிழமைகளில் அவர் தவறாது இங்கு வந்து சேருவார். அன்று முடியாது போனால் ஞாயிறு நிச்சயமாக எதிர்பார்க்கலாம். காலை ஒன்பது மணிக்கும் பத்து மணிக்கும் இடையில் வந்து விடுவார்.

அப்பு வரும் நேரம் நான் எங்கே, என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் மனம் அவர் குரலை எதிர் பார்த்துக் காத்திருக்கும்.

அவர் வரும்போது படலை திறக்கும் சத்தத்துடன் சேர்ந்து, “பிள்ளை” என உரிமையுடன் அழைக்கின்ற குரல் கேட்கும்.

அந்தக் குரலின் பின்னே மெதுவா மெதுவா அவர் அடி எடுத்து முற்றத்துக்கு வருவார்.

அப்புவை முதன் முதலில் நான் கண்டபோது, பார்ப்பதற்கு மிகப் பரிதாபமான தோற்றத்தில் அவர் நின்றார்.

நாலுமுழ வெள்ளை வேட்டி அப்பு அரையில் கட்டியிருந்தார். அது பெயருக்குத்தான் வெள்ளை வேட்டி. அழுக்குக்குமேல் அழுக்குப் படிந்து அதன் நிறம் காவியாக மாறிப்போய்க் கிடந்தது. அந்த வேட்டியை தூக்கி முழந் தாளுக்கு மேல் மடித்து, தொடை தெரியக் கட்டியிருந்தார். வேட்டி நிறத்தை ஒத்த சிட்டைத் துண்டொன்றை வேட்டிக்கு மேல் சுற்றி இருந்தார். தலைமுடி வளர்ந்து கற்றையாகி சுருண்டு தொங்கிக் கொண்டிருந்தது. பல நாட்கள் மழிக்காத தாடி, மீசை கன்னங்களில் அடர்ந்து

கிடந்தது. மார்பில் மொசு மொசென்று வளர்ந்த ரோமம் குப்பையாகச் செறிந்திருந்தது. நெற்றியில், மூக்கில் துளித்துளியாக வியர்வை அரும்பி நின்றது. ஒட்டிச், சுருங்கிப்போன வயிறு, உலர்ந்து கிடக்கும் வெற்றிலைச் சாயம் படிந்த உதடுகள், முகத்தில் பசிக்களை, கண்களில் ஏக்கமுமாக நின்றார்.

அப்புவின் தோற்றம் எனக்கு நெஞ்சை நெகிழ வைக்கிறது.

இந்த அப்புவுக்கு மனைவி இல்லையா? மக்கள் இல்லையா? அல்லது இருந்தும் அவர்கள் கவனிக்காது விட்டுவிட்டார்களா?

எனக்குள் நான் ஒரு தடவை கேட்டுக் கொள்கிறேன்.

அப்பு முதுகைச்சற்று வளைத்துக் குறுகிநின்று கையைநீட்டி "பிச்சை போடுங்கோ தாயே..." என்கின்றார்.

அப்புவின் பணிவு எனது மனசைத் தொடுகின்றது. "ஐயோ பாவம்" என நினைத்துக் கொண்டு "வாறன் நில்லுங்கோ...!" எனச் சொல்லிக் கொண்டு திரும்பி உள்ளே வருகின்றேன்.

அம்மா அடுக்களைக்குள் உட்கார்ந்து காய்கறிகள் வெட்டிக் கொண்டிருக்கின்றா.

"அம்மா, ஒரு அப்பு வந்து நிற்குது"

"ஒரு பத்து ரூபா எடுத்துக்குடு பிள்ளை"

நான் எதிர்பார்த்தது போல அம்மா சொல்லுறா.

இன்றைய விலைவாசி உயர்வில், இதை விடக் குறைவாகக் கொடுப்பற்கு அம்மா நினைப்ப தில்லை.

ஆனால் எனக்கு மனதில் திருப்தி இல்லை, அசையாது அம்மா முன் நிற்கிறேன்.

அம்மா என்னை விளங்கி வைத்திருக்கின்றா. தலை நிமிர்ந்து ஒரு தடவை என் முகத்தைப் பார்க்கின்றா.

நான் மெல்லச் சிரிக்கின்றேன்.

இந்தச் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, "சரி... உன்ரை விருப்பம்போல குடு" என்கிறா.

நான் இருபது ரூபா நோட்டொன்றை எடுத்து வந்து, "இந்தாங்க..." என அப்புவிடம் நீட்டுகிறேன்.

அப்பு அந்தக் காசை கையில் வாங்கிப் பார்க்கின்றார். அவர் முகம் பட்டென மலர்கிறது. மறுகணம் ஆச்சரியமாக என்னைப் பார்க்கின்றார்.

ஒரு ரூபா... இரண்டு ரூபா... அல்லது ஐந்து ரூபா நாணயத்தை அவர் எதிர்பார்த்திருப்பார். அவர் எதிர்பார்த்ததுக்கு மாறாக இப்படிப் பெரிய நோட்டு கையில் கிடைத்திருப்பது கண்டு அதிசயப் படாமல் இருக்க முடியவில்லை.

அவர் நன்றியுடன் என்னை நோக்குகின்றார்.

உதட்டில் சிறிய கீற்றாகப் புன்னகை நெளிய, அனுதாபத்துடன் நான் அவரைப் பார்க்கின்றேன்.

அப்பு மன நிறைவுடன் திரும்பிப் போய் விடுவார் என்பது எனது எதிர்பார்ப்பு. ஆனால் அப்பு நின்ற இடத்தில் இருந்து இம்மியும் அசையாது அப்படியே நிற்கின்றார்.

அப்பு மனதுக்குள் ஏதோ ஒரு போராட்டம்,

அவர் பார்வை அதைச் சொல்கிறது,

சில கணங்களின் பிறகு அவர் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும், என்முகத்தைக் குறிப்பாகப் பார்க்கின்றார். துயரப் பெருமூச்சொன்று அவர் நெஞ்சில் இருந்து வெளிவருகின்றது. பின்னர் குரல் தளதளக்க, “அம்மா...” என மெல்ல அழைக்கின்றார்.

“என்ன சொல்லுங்கோ...!” பரிவுடன் கேட்கின்றேன்.

“பெரிய களையாக் கிடக்கு... ஒரு தேத்தண்ணி தந்தால் புண்ணியம் கிடைக்கும் தாயே!”

“இருங்கோ வாறன்...” அவசரமாக நான் உள்ளே திரும்பி வருகிறேன்..

அடுக்களைக்குள் நுழைந்து விரைவாக தேநீர் தயாரித்து முடிக்கிறேன். அதை ஒரு குவளையில் ஊற்றி, கையில் தூக்கும்போது, “தின்ப தற்கு ஏதாவது குடுக்கலாமே...!” என்ற எண்ணம் மனதில் எழுகின்றது.

இப்பொழுது என்ன உணவு வீட்டில் இருக்கப் போகிறது?

மதிய வேளைக்குரிய சமையல் செய்து முடிக்கும் வரை அம்மாவுக்கு வேலை நெருக்கடி. அந்த அவசரத்தில் காலை உணவு உண்பதற்கு, பெரும்பாலும் அம்மா மறந்து போவது வழக்கம். இதை மனதில் வைத்துக்கொண்டு, “அம்மா சாப்பிட்டு விட்டியளா...?” என வினவுகிறேன்,

அம்மா என்னைப் புரிந்து கொண்டு, சட்டென திரும்பிப் பார்க்கின்றா. பின்னர், “பணிஸ் கிடக்கு... எடுத்துக் கொண்டுபோய்க் குடு” என்றவ, தொடர்ந்து வேலையைக் கவனிக்கிறா.

நான் தேநீருடன் பணிஸைக் கொண்டு வந்து அப்புவிடம் கொடுக்கின்றேன்.

அப்பு ஆவலுடன் கைகளை நீட்டி வாங்குகின்றார். அவர் கைகள் இரண்டும் மெல்ல நடுங்குகின்றன.

அவர் நிலத்தில் மெல்லக் குந்தி இருக்கின்றார். தேநீர்க் குவளையை நிலத்தில் வைத்துவிட்டு, பணிஸைப் பிய்த்துப் பிய்த்து, தேநீரில் தொட்டுத் தொட்டு, அவக் அவகென்று வேகமாக உண்ணுகின்றார். பின்னர் குவளையுடன் தூக்கி மடமடவென்று தேநீரைக் குடித்து முடிக்கின்றார்.

அரையில் சுற்றிக் கட்டிய சால்வைத் துண்டை அவிழ்த்தெடுத்து, முகத்தில் அரும்பி நிற்கும் வியர்வையை நன்றாகத் துடைத்து விட்டுக்

*கொள்ளுகின்றார். பின்பு, முன்னர்போல அதைக் கட்டிக் கொண்டு தலை குனிந்த வண்ணம் சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருக்கின்றார். மனதில் அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ! நெடுமூச்சொன்று நெஞ்சின் ஆழத்தில் இருந்து வெளியேறுகின்றது. அவர் விழிகள் லேசாகக் கலங்கு கின்றன. சற்று நேரம் கழித்து தலையைத் தூக்கி என்னை நோக்குகின்றார்.*

*பசிக்களை நீங்கிப்போன தெம்பு அந்த முகத்தில் தென்படுகிறது. வான்மழையில் திடீரென நனைந்த பயிர்போல, இப்போது அவரிடம் ஒரு மலர்ச்சி தெரிகிறது.*

*நன்றி அவர் பார்வையில் இழைகிறது.*

*நிலத்தில் கைகளைவைத்து ஊன்றி மெல்ல நிமிர்ந்தெழுந்து நிற்கின்றார்.*

*“ஆச்சி, நீங்கள் நல்லாய் இருக்கவேணும் தாயே!” வாயார வாழ்த்தி விட்டு, திரும்பி மெல்ல மெல்ல நடந்து வெளியே போகிறார்.*

*அப்பு படலையைத் திறந்து செல்லும்வரை நான் அவரைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றேன். கண்களில் இருந்து அவர் மறைந்த பிறகு; அப்பு பாவம்; என நினைத்த வண்ணம் உள்ளே வருகின்றேன்.*

*அன்று வந்துபோன அப்பு வாரம் தவறாமல் வந்து கொண்டி ருந்தார்.*

*அப்புவைக் கண்டுகொண்டால் எனக்கு உள்ளத்தில் ஒரே உற்சாகம்.*

*கல்லூரியில் தோழிகள் தங்கள் பாட்டன்மார் பற்றிப் பெருமை யாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.*

*“தாத்தாவுக்கு இப்பவும் நான் நல்ல செல்லம்”*

*“என்ரை அப்பப்பாவுக்கு எல்லாம் நான் செய்து கொடுத்தால் தான் திருப்தி. அம்மா... மருமேள் செய்கிறதை அவர் விரும்பிறதில்லை.”*

*“எனக்கு என்ன தேவை எண்டாலும் உடனே தாத்தா வாங்கித் தருவார்”*

*“தாத்தாவுக்குச் சுகமில்லை என்றால் ஸ்கூட்டியிலை நான்தான் ஏத்திக் கொண்டு போகவேணும்”*

*“ஒவ்வொரு பென்ஸனுக்கும் பொக்கட்மணி ஆயிரம் ரூபா அப்பப்பா தருவார்”*

*அவர்கள் சொல்லச் சொல்ல, கேட்டுக் கேட்டு எனக்கு மனம் ஏங்கும்.*

*நான் வீட்டுக்கு வந்து அம்மாவிடம் விசாரிப்பேன்.*

*“என்ரை தாத்தாவும், அப்பப்பாவும் எப்ப செத்தவை... அம்மா!”*

*“அது... கொப்பா என்னைக் கட்டிறதுக்கு முந்தி”*

*நான் சிறிது நேரம் மௌனமாக இருக்கின்றேன். பிறகு அம்மா விடம் வினவுகிறேன்:*

“அவைக்கு... இங்கவாற அப்புவின்ரை வயதிருக்குமே”

“அப்பிடித்தான் இருக்கும்”

“அப்ப... இந்த அப்பு... என்ரை தாத்தா... அப்பப்பா... மாதிரித் தானே!

“ஓமோம்...”

“அப்பு... தாத்தா... அப்பப்பா...” எனக்குள் சொல்லிக் கொள்ளுகின்றேன்.

அப்பு வரும் வேளையில் எல்லாம் அவரை எதிர்பார்த்திருந்து, உபசரித்து உணவு கொடுத்து, தேநீர் கொடுத்து, காசும் கொடுப்பேன்.

அப்போது எனக்குள்ள அக்கறையை அம்மா அவதானித்து வைத்திருக்கின்றா. அவ ஒருதினம் அப்பாவிடம் சொன்னா”

“பிள்ளைக்கு ஒரு பேரன் கிடைச்சிருக்கிறார்”

“நானும் அவதானித்திருக்கிறேன்”

“கிழவன் வந்தால் தன் பேரனைக் கண்டது போல பிள்ளைக்கு ஒரே கொண்டாட்டம்”

“இது உணர்வோடு சம்பந்தப்பட்ட விஷயம். தன்ரை பேரன்மாரை இந்தக் கிழவரிலே பிள்ளை காணுகின்றாள். தன்ரை மனக்குறையை ஈடு செய்கிறாள். பிள்ளைக்கு மனமகிழ்ச்சியைக் கொடுத்தால் அது நல்லது தானே!”

இப்படியும் சொல்லுவார், வேற மாதிரியும் கதைப்பார். இந்த அப்பா, ஒரு வித்தியாசமான ஆள். எனது மன மகிழ்ச்சிக்காகத் தான், அப்புவுக்கு நான் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளுகின்றாரோ என எனக்குள் ஒரு சந்தேகம். அப்பா சில சமயங்களில் கூறும் மாறுபட்ட கருத்துக்கள் அப்படித்தான்.

“பிச்சை குடுக்கிறது பிழையான காரியம். நாங்கள் கொடுக்கிற தாலே தான் வந்து நின்று, இரந்து கை நீட்டுகின்றார்கள். உடல் வலிமை உள்ளவன் உழைத்து வாழாமல் கையேந்திப் பிச்சை கேட்கிறான். பிச்சை எடுப்பதை ஒரு தொழிலாகச் செய்கிறார்கள். நகரப் பகுதிகளில் ஒருவன் பலரை வைத்துப் பிச்சை எடுப்பிப்பதை ஒரு தொழிலாகச் செய்விக்கிறான் எண்டது பலருக்குத் தெரியாது. பிச்சை குடுக்கிறதினாலே சமுதாயத்தைப் பிழையான வழியில் நடத்துகிறோம், கெடுக்கிறோம்”

“அப்பா... நீங்கள் சொல்லுறதிலே சில நியாயங்கள் இல்லாம லில்லை. ஆனால் வயது போன கிழடு கட்டைகள்... நோயாளர்... அங்கவீனமானவர்கள்... ஆதரவற்ற குழந்தை குட்டிக்காரர் இவர்களுக்கும் குடுக்கக் கூடாதா...?”

“பிள்ளை... உன்ரை இளகின மனம் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களுடைய நடிப்பைப் பார்த்து இரக்கம் உள்ளவர்கள்

*ஏமாறுகிறார்கள்."*

*"நடிக்கிறவர்களைப் பார்த்தால் தெரியும்... அப்பா!"*

*"அதுக்கு தெளிவாக அவதானிக்க வேணுமே...!"*

*"சண்டை முடிஞ்ச பிறகு தினமும் பலபேர் பிச்சை கேட்டு வருகினம்... வேலையில்லை... உழைப்பில்லை என்று சொல்லுகினம்"*

*"வேலை இல்லாதவன் எல்லாரும் பிச்சை எடுக்க ஆரம்பித்தால், இந்த நாட்டில் எத்தனை இலட்சம் பிச்சைக்காரர்கள் இருப்பார்கள்! நடந்து முடிந்த இந்தக் கொடிய யுத்தம் பலரைக் கையேந்தி நிற்க வைத்திருக்கிறது எண்டது உண்மைதான்!"*

*"அப்பா தெளிவாகச் சொல்லுங்கோ! பிச்சை குடுக்கிறது பிழையா?"*

*"எதற்கும் ஒரு யதார்த்தம் இருக்கம்மா! பசித்த வயிற்றோடு ஒருவன் இருக்க, நாங்கள் உண்டு உயிர்வாழக் கூடாதம்மா! நீ விருப்பம்போல குடுக்கிறதைக் குடு"*

*அப்பா கூறிய இறுதி வார்த்தைகள் காற்றில் மிதந்து சென்று, அம்மா செவியில் நுழைந்து விடுகின்றன.*

*"ஓ... அப்பாவும் பிள்ளையும் பாரிவள்ளல் பரம்பரையில் பிறந்து வந்தவர்கள். ஆருக்குக் குடுத்தாலும் பெரிய தொகையாகக் கொடுக்கா விட்டால் பிள்ளைக்கு மனம் திருப்திப்படாது"*

*"இன்றைய விலைவாசி உயர்விலே சில்லறையைத் தூக்கிக் குடுத்தால் அவையளுக்குக் காணாது... பாவந்தானே!" அப்பா என்னை நியாயப் படுத்துகிறார்..*

*"என்ரை அப்பா எப்போதும் என்ரை பக்கம் தான்,"*

*குடும்ப நிதி அமைச்சர் அம்மா. குடும்பச் செலவீனங்களைச் சமாளிக்க இயலாமல் திணறிக் கொண்டிருக்கின்றா. ஆனால் எந்தக் குறையும் அப்பா, அம்மா எனக்கு வைப்பதில்லை. அதேசமயம் எல்லாத் தேவைகளுக்கும் நான் அம்மாவிடம் போய் நிற்பதில்லை. சந்தர்ப்பம் அறிந்து அப்பாவை மெதுவாக அணுகுவேன்.*

*ஒரு நாள் அப்பாவை மெல்லக் கேட்டேன்;*

*"அப்பா, நான் ஒன்று கேட்பன் கோவிக்கக் கூடாது!*

*"உன்னட்டைதான் என்ரை கோபம் எடுபடாதே!"*

*"அப்ப... சொல்லட்டுமா"*

*"சொல்லம்மா!"*

*"எனக்கொரு வேட்டி வேணும்"*

*"ஹா...ஹா... ஆண்களின் உடைகள் எல்லாம் பெண்கள் அணியத் தொடங்கிவிட்டியள். வேட்டி ஒன்று தான் மிச்சம் என்றிருந்தேன், கடைசியில் அதையும் விடமாட்டியள் போல... மலையாளப் பெண்கள் வேட்டி கட்டுகிறார்கள். தேவையென்றால் என்ரை வேட்டியிலை ஒன்றை*

எடனம்மா!”

“ஹூம்... போங்கப்பா! விளங்காதது மாதிரி நீங்கள் பகிடி விடுகிறியள்!” நான் சிணுங்குகின்றேன்.

“சரி...சரி...உன்ரை அப்புவுக்கு ஒரு வேட்டி வேணும் அப்பிடித் தானே...! நான் வாங்கித்தாறன்”

அப்பா சொன்னால் சொன்னது தான், பிறகு மாறமாட்டார். சொன்னபடி நடப்பார்.

மறுதினம் வேட்டியுடன் வீடு வந்து சேர்ந்தார். சிவப்புக்கரை போட்ட நான்குமுழ வேட்டி, நான் ஆவலுடன் கையில் எடுத்துப் பார்க் கிறேன். என்ன ஆச்சரியம் சிவப்புக்கரை சால்வையும், வேட்டியும் சேர்த்து வாங்கி வந்திருக்கிறார். எனக்குத் தெரியும் அப்பா எல்லாவற்றையும் கூர்ந்து அவதானித்து காரியமாற்றுகின்ற ஒருவர்.

அடுத்த வாரம் அப்பு வழமைபோல வந்தார்.

எப்போதும் கட்டுகிற கிழிந்த வேட்டியை அரையில் கட்டியிருக் கிறார்.

என்றும்போல அவரை உபசரித்து அவருக்கு கொடுக்கிறவைகளை எல்லாம் கொடுக்கிறேன்.

அப்பு, வீட்டுக்கு வந்தால் முன்னர்போல விரைவில் எழுந்து போய் விடுவதில்லை. ஆற அமர இருந்து, “பிள்ளை...பிள்ளை” என்று அன்பாக அழைத்து என்னோடு பேசிக் கொண்டிருப்பார். அப்பா, அம்மாவின் சுகநலங்களை உரிமையுடன் விசாரிப்பார். எனது படிப்புப் பற்றி அக்கறை யுடன் கேட்பார். பிறகு சாவகாச மாக எழுந்து செல்வார்.

இன்றும் அப்படித்தான் நீண்ட நேரம் இருந்து பேசினார். பிறகு புறப்படத் தயாராகும் சமயம் பார்த்து, நான் எழுந்து சென்று புதிய வேட்டி, சால்வையைக் கொண்டுவந்து அவர் கைகளில் கொடுக்கிறேன்.

அவருக்கு தன் கண்களை நம்ப முடியவில்லை. நடப்பது கனவா? நனவா? எனத் தடுமாறுகின்றார். சில நிமிடங்களின் பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, வியப்புடன் என்னை விழித்து நோக்குகிறார். அவர் உணர்ச்சி வசப்பட்டு நிற்கிறார் என்பது விளங்குகிறது. வாய் திறந்து பேச முடியவில்லை. விழிகள் நிறைகின்றன. சிறிது நேரம் கழித்து, விழிகளைத் துடைத்து விடுகின்றார். புதிய வேட்டி, சால்வையை நெஞ்சோடு அணைத்துக் கொள்ளுகின்றார். வார்த்தைகள் தட்டுத்தடுமாறி அடித் தொண்டையில் இருந்து மெல்ல எழ, “போயிட்டு வாறன் பிள்ளை” எனக் கூறியவாறு நடக்கின்றார்.

அடுத்த வாரம் அவர் வருகையை என்றும் போல ஆவலோடு நான் எதிபார்த்துக் காத்திருக்கிறேன்.

நான் எதிர்பார்த்ததுபோல அப்பு வந்தார். புது வேட்டிகட்டி,

சால்வையை அதன்மேல் சுற்றி, நெற்றியில் திருநீறு பூசி, நடுவே சந்தனத் திலகம் இட்டிருந்தார். அப்புவில் புதுப்பொலிவு; புதிய கம்பீரம்.

அப்புவைப் பார்க்க எனக்கு மனதில் பெரிய ஆனந்தம். அவர் நீண்ட நேரமாக ஆறுதலாக அமர்ந்திருந்து என்னோடு உரையாடுகின்றார். பின்னர் புறப்பட்டுச் செல்வதற்குத் தயாராகுகையில் என்னைப் பார்த்து மனத் திருப்தியுடன் கூறுகின்றார்;

“நான் இனிச் செத்துப் போகலாம், அம்மா!”

“ஏன் அப்படிச் சொல்லுறியள் அப்பு?” நான் கவலையுடன் வினவுகின்றேன்.

“எனக்கு எல்லாம் நிறைவாப் போச்சு. என்ரை பேத்தி எனக்குப் புது உடுப்பும் வாங்கித் தந்துவிட்டா இனி எனக்கென்ன வேணும்! இந்த மன நிறைவோடை நான் போய்விட வேணும்”

“அப்பு அப்படிச் சொல்ல வேண்டாம்! இன்னும் கனகாலம் நீங்கள் இருக்கவேணும்”

அப்பு வாய்திறந்து எதுவும் பேசவில்லை.

அவர் மெல்ல எழுந்து நிற்கிறார்.

திறந்த விழிகள் இமைக்காது சிறிது நேரம் அன்பொழுக என்னை நோக்குகின்றன. திடீரென அந்த விழிகள் பெருகி, உடைப்பெடுத்து வடிந்து, தாடியை நனைத்து நெஞ்சில் சொட்டுகிறது.

அப்பு தன்னைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள இயலாது தவிக்கின்றார்.

அவர் மௌனமாகத் தலைகுனிந்து மெல்லப் போய்க் கொண்டிருக்கின்றார்.

அப்பு சொன்ன வார்த்தைகள், அவர் நடவடிக்கைகள் எல்லாம் எனக்கு உள்ளத்தைப் போட்டு உறுத்துகிறது. அப்புவை அடுத்த வாரம் நான் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன். அப்பு வர வில்லை…

அப்பு ஏன் வரவில்லை? அடுத்த வாரம்… அடுத்த வாரம்… அடுத்த வாரம்… அப்பு வரவே இல்லை.

பிச்சை கேட்டு வருகின்றவர்கள் தினமும் வந்து கொண்டு இருக்கின்றார்கள்.

“அம்மா…பிச்சை போடுங்கோ!”

எனக்குக் குரல் கேட்பதுதான் தாமதம், நான் படலைக்கு ஓடிப் போய் விடுகின்றேன். வருகின்றவர்கள் ஒவ்வொருவரிடமும் தவறாமல் நான் விசாரித்துக் கொண்டிருக்கின்றேன்.

“உங்களுக்கு அப்புவைத் தெரியுமா?”

“எந்த அப்பு…? என்ன பேர்…? எங்கே இருக்கிறவர்?

அவர்கள் என்னிடம் இவ்வாறு திருப்பிக் கேட்கிறார்கள். நான்

அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. என்னிடம் பதில் இல்லை. நான் எதுவும் சொல்ல இயலாது திணறிப் போகின்றேன்.

பிச்சை என்று வருகின்றவர்கள் யாருமே தங்கள் சொந்த ஊர், பெயர் கூற விரும்புவதில்லை. நான் யாரிடமும் விசாரிப்பதில்லை. அப்பு பற்றியும் தெளிவாக எதுவும் நான் அறிந்து வைத்திருக்கவில்லை.

ஆனால் நான் மனம் சோர்ந்து விடவில்லை. எனக்கு மனதில் அசையாத ஒரு நம்பிக்கை. விசாரித்து எப்படியும் அப்பு பற்றி அறியத்தான் போகிறேன்.

"ஆச்சி... பிச்சை போடுங்கோ...!"

குரல் கேட்டு நான் படலைக்கு ஓடி வருகின்றேன்.

ஒரு கிழவி நிக்கிறா,. தடி ஒன்றை நிலத்தில் ஊன்றிக்கொண்டு நிற்கிறா. நெட்டையான உருவம். கறுப்பு நிறம், தடித்த நீலநிறச்சீலை உடுத்தி, முந்தானையைத் தூக்கி மார்புக்கு குறுக்குக் கட்டாக கட்டி இருக்கிறா. கூந்தலை இரண்டாகப் பிரித்து பழைய கொண்டை ஒன்று போட்டிருக்கிறா.

நான் கையோடு கொண்டு சென்ற காசை முதலில் கிழவி கையில் கொடுக்கின்றேன். அதன் பிறகு விசாரிக்கின்றேன்.;

"அப்புவைத் தெரியுமா?"

"ஆற்றை அப்பு?"

இந்தக் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்ல.முடியும்! "என்ரை அப்பு" என்று சொல்லலாமா? இப்படிச் சொன்னால் இந்தக் கிழவிக்கு விளங்கவா போகிறது?

எனக்கு நா எழவில்லை, மௌனமாக விழித்துக் கொண்டு நிற்கின்றேன்.

"பேரைச் சொல்லன்...ஊரைச் சொல்லன்... சொன்னால்தானே... நாச்சியார் தெரியும்!"

கிழவி பொல்லாத வாயாடியாக இருக்க வேண்டும். நான் எச்சரிக்கையாகின்றேன். "இஞ்சை வாற அப்பு" என்கின்றேன் சுருக்கமாக.

"இஞ்சை வாற அப்புவோ...? ஆ...ஆ... அட...ட... கலிகையில் கந்தண்ணனையே... நாச்சியார் கேட்கிறாய்...! அவர் செத்து தாட்ட இடத்திலே புல்லும் முளைச்சிருக்கும்"

எனக்கு உள்ளம் அதிருகிறது. ஒருகணம் நிலை குலைந்து போகிறேன்.

அடுத்த கணம் என்னைச் சுதாகரித்துக் கொள்கிறேன். "இந்தக் கிழவி யாரோ ஒரு கிழவன் செத்துப்போன சங்கதியைச் சொல்லுகிறா. அது என்ரை அப்புவாக இருக்க இயலாது" என மனதைத் தேற்றிக் கொள்கிறேன்.

கிழவி அந்தத் தகவலுடன் நிறுத்திக் கொள்ளவில்லை, தொடர்ந்து

*சொல்கிறா:*

*"ஒரு மோட்டைச் சயிக்கிள்காறன் கந்தண்ணனை இடிச்சுப்போட்டு நில்லாமல் ஓடிப் போவிட்டான். அவர் அந்த இடத்திலேயே விழுந்து செத்துப்போனார்... நாச்சியார்! கேள்விப்பட்டு நானும் போய்ப் பாத்தனான். என்னமாதிரி றோட்டுக் கரையிலை கிடந்தார் தெரியுமே! சிவப்புக்குறி போட்ட புது வேட்டி சால்வை கட்டிக் கொண்டு... நெத்தியிலை திருநீறு சந்தனம் ... மாப்பிள்ளை மாதிரி!*

*"ஐயோ... அம்மா... அம்மா... அப்பு செத்துப்போனார்; என்ரை அப்பு... என்ரை பேரன்... செத்துப்போனாரம்மா!"*

*நான் கதறிக் கதறி அழுகின்றேன்.*

*அம்மா பதறிக்கொண்டு ஓடி வருகின்றா.*

*"அழாதை பிள்ளை... அழாதை பிள்ளை..." மெல்ல ஆதரவாக என்னை அணைக்கின்றா.*

*நான் அடக்கமுடியாமல் தொடர்ந்து குமுறிக் கண்ணீர் வடித்துக் கொண்டு நிற்கின்றேன்.*

*"அழாதை பிள்ளை... அழாதை ..."*

*ஆறுதல் கூறும் அம்மாவின் விழிகளும் கலங்கிக் கசிகின்றன.*

ஜீவநதி - 52

# மரணத்தின் ஓலம்

*தெரு நாய்கள் குரைத்து அவன் வருகையை அறிவிக்கின்றன.*

*வீதி ஓரத்து வீட்டு நாய்கள், தெருநாய்கள் தொடர்ந்து குரைக்க ஆரம்பிக்கின்றன.*

*அவன் வந்து கொண்டிருக்கிறான்.*

*நாய்கள் குரைத்துக் குரைத்து அவன் பின்னே சிறிது தூரம் ஓடிப் பார்க்கும். அவன் வேகத்துக்கு நாய்களால் ஈடு கொடுக்க இயலாது போகும். அவன் நடப்பது நடையா? அல்லது ஓட்டமா? அப்படி ஒரு "ஜெற்" வேகம்! நாய்கள் சிறிது தூரம் பின் தொடர்ந்து வரும் பின்னர் சட்டென்று "பிறேக்" போட்டது போல நின்று, திரும்பிப் போய் விடுவதுதான் வழக்கம். பின்னால் நின்று சும்மா குரைப்ப தும் அவசியமின்றித் துரத்தி வருவதுந்தானே நாய்களின் பிறவிக்குணம்! அவன் வருகை இப்பொழுது அவைகளுக்கு ஒரு விளையாட்டு. அவன் நன்றாகப் பழக்கப்பட்டவன் ஆகி விட்டான். அவைகள் அவன் வருகையை இப்போது அவ்வளவு கவனத்தில் கொள்வதில்லை. ஆனால் பட்டி அறுந்த பழைய செருப்பைக் கால்களில் கொழுவிக் கொண்டு "டக்கு... டக்கு" என அவன் நடந்து வரும் சத்தம் நாய்களின் உறங்கும் உணர்வைக் கலைத்து மெல்ல அருட்டி விடும். இன்று பழஞ் செருப்பு கொழுவி இருக்க வேண்டும்.*

*நாய்களின் குரைப்பொலி நெருங்கி நெருங்கி அண்மித்துக் கொண்டிருக்கின்றது.*

*வீதியில் இருந்து சற்றுத்தூரத்துக்கு அப்பாலுள்ள ஆலயத்துக்கு எதிரே அவன் வந்து விட்டான்.*

*"ஹூய்... கூ...கூ... ஒ...ஒ..." எனப் பலத்த குரல்கள் திடீரென எழுகின்றன. அவனை நோக்கிப் பலர் வீதிக்கு ஓடி வருகின்றார்கள்.*

*"அடே வேலு... வேலு" பெருஞ்சத்தமிட்டு கூவுகின்றார்கள்.*

*அவன் அஞ்சி அவர்களிடம் இருந்து தன்னைப் பாது காப்பதற்காக மின்னல் வேகத்தில் ஓடி வருகின்றான்.*

*அவர்கள் கீழே குனிந்து கையில் கிடைத்த கற்களை எடுத்து அவனை நோக்கி வீசி எறிகின்றார்கள்.*

*கற்கள் வந்து பொலு பொலு என்று விழுகின்றன.*

*அவன் தனது வேகத்தை ஒரு கணம் தணித்து, கீழே குனிந்து ஒரு கல்லைக் கையில் எடுக்கின்றான். அவர்களை நோக்கி விசையாகத் திருப்பி எறிந்து விட்டு, ஓடி வந்து எதிர்ப்படவுள்ள எங்கள் வீட்டு ஒழுங்கையில் சடாரெனத் திரும்புகின்றான்.*

*அவனைத் துரத்திக் கொண்டு வந்த இளைஞர்கள் கெக்கட்ட மிட்டுப் பலமாகச் சிரித்துக் கும்மாளம் போடுகிறார்கள். ஆலயத்து ஆலமர நிழல் அவர்களுக்கு எப்பொழுதும் தஞ்சம். திரும்பிச் சென்று அமர்ந்து கொள்ளுகிறார்கள்.*

*எங்கள் வீட்டு ஒழுங்கையால் அவன் தினமும் பல தடவைகள் வந்து போய்க் கொண்டிருக்கின்றான்.*

*இப்பொழுது அவன் ஓடிப்போகின்றான். மீண்டும் திரும்பி வரு வான். வரும்போது அவன் கையில் நிச்சயம் ஒரு தடி இருக்கும். அவனைத் தாக்குகின்றவர் யாராவது ஒருவர் தனியனாகச் சந்திக்க நேர்ந்தால், அவருக்கு ஒரு அடி போட்டு விட்டு ஓடித் தப்பி விடுகிறான். எல்லாப் பிராணிகளும் அப்படித்தான். தான் தாக்கப்படும்போது எதிாப்புக் காட்டும். பாவம்! மனிதனுக்கு மாத்திரம் சில சமயங்களில் எதுவும் இயலாது போகிறது.*

*அவன் அதிகாலையில் எழுந்து விடுகின்றான். இரவு ஒன்பது பத்து மணிக்கும் வீதியில் வருகின்றான். ஓயாது ஊர்களைச் சுற்றித் திரிந்து கொண்டிருப்பதே அவனுக்கு வேலை. அவன் சுற்றி அலைந்து கொண்டு வரும் ஊர்களின் எல்லைகளைத் தெளிவாகச் சொல்வதற்கு இயலாது. எங்கள் வீட்டுக்கு முன்னுள்ள ஒழுங்கையில் போய்க் கொண்டிருப்பான். நீண்ட நேரம் கழித்து கிழக்குப் பக்கம் பெரிய வீதியில் சென்று கொண்டிருப்பான். சில வேளையில் எங்கள் ஒழுங்கையில் சென்றவன் மீண்டும் இந்தப்பகுதிக்கு வராது தொலைந்து போகின் றான். வேறு சில தருணங்களில் சென்ற பாதையில் சற்று நேரத்தில் திரும்பி வருகின்றான். வெயிலென்ன, மழையென்ன, அவன் ஓட்டம் எதனாலும் தடைப்படுவ தில்லை. அவன் இரவு எங்கே தங்குகின்றான்? காலையில் எப்பொழுது எழுந்து புறப்படுகின்றான்? இராக் காலத்திலாவது படுத்து உறங்கு கின்றானா? அவன் பற்றியவிபரங்கள் யாருக்கும் தெரியாது.*

*சில சமயங்களில் நேருக்கு நேரே அவன் என்னைச் சந்தித்து விடுகின்றான். அப்பொழுதெல்லாம், "போவிட்டு வாறன்... போவிட்டு வாறன்..." என்று கூறிக் கொண்டு என்னைக் கடந்து வேகமாகப் போய்க் கொண்டி ருக்கின்றான். நடையைப் போலவே அவன் பேச்சிலும் ஒரு வேகம்.*

*அவன் போகவிட்டு, பின்புறம் நின்று ஆழ்ந்த துயரத்துடன் அவனை நோக்குகின்றேன்.*

*சற்று உள்வளைந்த கறுத்த உருவம். இடையிடை நரைத்துக் கொண்டு வரும் தலைமுடி. இரும்பாகத் தோன்றும் உடல் கட்டு, வேகமாக நடந்து வருகையில் எதிரில் வருகின்றவர்களை நிமிர்ந்து பார்க்காத குனிந்த தலை. பழங்காலச் சுவர்மணிக்கூட்டின் பெண்டுலம் போலவும், இன்னொரு சமயம் பரதநாட்டிய அசைவு போலவும் ஒழுங்கமைந்த சமஅளவான தலை அசைவு. மருண்டு மருண்டு கூசிப் பார்க்கும் அச்சம் இழைந்த அரைக்கண் பார்வை. மந்திரம் போல ஓயாது சதா எதையோ மொலு மொலுத்துக் கொண்டிருக்கும் வாய்.*

*அரையில் கந்தல் துணிகளையே எப்பொழுதும் சுற்றிக்கட்டிக் கொண்டிருக்கின்றான். ஆண்கள் கட்டும் சாரம், பெண்கள் அணியும் மக்ஸி, பாவாடை இவைகளில் எதுவோ ஒன்றாக அது இருக்கும். முதல்நாள் கிழியாத ஆடையாக இருந்தால் மறுநாள் கிழிந்து போயிருக்கும். அவன் நடந்து நடந்து தசைநார்கள் வைரம் ஏறிப்போன தொடைகள் இரண்டும் கட்டின துணிக்கு வெளியே தெளிவாகத் தெரியும். கோவணம் சில சமயங்களில் கழன்று வாலாகத் தொங்கும். சில வேளைகளில் அதுவும் இருப்பதில்லை. அவன் அரையில் கட்டிய கந்தல் துணியால் எந்த விதப் பயனுமில்லாத நிருவாணி யாக அவன் இருப்பான்.*

*அவன் யாரையும் துன்புறுத்துவ தில்லை.*

*ஆனால் அவன் போய்க் கொண்டி ருக்கும் பாதைக் குப்பைமேடு களில் பழைய காகிதங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், ரிசூப்பைகள், அட்டைப்பெட்டிகள், தகரப்பேணிகள் எவைகளைக் கண்டாலும் அவைகளைப் பொறுக்கி எடுப்பான். வீதியோர வீடுகளின் வளவு களுக்குள்ளே வேலிக்கு மேலால் அவைகளை வீசி விட்டுப் போய்க் கொண்டிருப்பான்.*

*வீட்டுக்காரர் கண்டு சத்தம் போடுவார்கள். அவன் அதைப் பொருட்படுத்துவ தில்லை.*

*ஒழுங்கையில் அவனைச் சந்திக்க நேர்ந்தால் சில வேளைகளில், “குளிக்கப் போறன்... குளிக்கப் போறன்” என்ற சொல்லிக் கொண்டு போகின்றான்.*

*“சரி... சரி... குளி...” என்கிறேன்.*

*“அடிப்பான்களே... அடிப்பான்களே...” எனக் கேட்கிறான்.*

*“இல்லை... குளி... ” என்கிறேன்*

*நீராடுவதில் அவனுக்கு அலாதியான பிரியம். ஒரு நாளில் பல தடவைகள் நீராடிக் கொண்டிருக்கிறான்.*

*அந்த இன்பத்தைத் தானும் முழுமையாக அவன் அனுபவிக்க விடுகிறார்களில்லை.*

ஆலயத்து வெளிவீதியிலுள்ள தண்ணீர்ப் பைப்பில் முன்ன ரெல்லாம் நீராடிக் கொண்டி ருந்தான்.

இப்பொழுது அவனை யாரும் அங்கு அணுகவிடுவதில்லை. ஆலயத்தின் மேலான புனிதம் அவனால் கெட்டுப் போய் விடுகிறதாம்.

எங்கள் இல்லத்துக்கு எதிரில் பெரிய ஒரு வீதி. அந்த வீதியை அடுத்து கிழக்கே ஒரு பொது மண்டபம். அந்த மண்டபத் தேவை களுக்காகப் பொருத்தி இருக்கிறார்கள் தண்ணீர்ப் பைப்புகள். அவைகளில் ஒன்று வீதியோரமாக வெளி மதிலில் இருக்கிறது. அந்தப் பைப் எங்கள் வீட்டுக்கு முன்னுள்ள ஒழுங்கைக்கு எதிரில் இருக்கிறது.

அவன் விரைந்து வருகின்றான். வீதியின் இரு பக்கங்களையும் அங்குமிங்குமாகத் திரும்பித் திரும்பி நோட்டமிடுகின்றான். யார் அசுகை இல்லை. அரையிற் கட்டிய கந்தல் துணியைச் சடாரென்று அவிழ்த்து எதிரி லுள்ள மூலை வேலிக் கதிகாலில் போட்டு விட்டு, பைப்பைத் திறந்து விட்டு கோவணத்துடன் குந்துகின்றான்.

ரியூப்பையைக் கிழித்துக் கட்டின கோவணம்.

தண்ணீர் சலசலத்தோடுகிறது. அவன் பல தடவைகள் பலமாக வழமைபோலக் காறிக் காறித் துப்புகின்றான்.

எல்லாம் சில கணங்கள்தான்.

“அடே... வேலு...!” சயிக்கிளில் வந்து கொண்டிருக்கும் யாரோ ஒருவன் உரத்துக் கத்துகின்றான்.

அவன் துடித்துப் பதைத்துக் கொண்டு எழுந்து ஓடி கதிகாலில் தொங்கும் கந்தல் துணியை இழுத்தெடுத்துக் கொண்டு காகமாகப் பறக்கின்றான்.

வீதியில் வந்தவன் சயிக்கிளில் இருந்து கீழே இறங்கி, பைப்பி லிருந்து வடிந்து பெருகிக் கொண்டிருக்கும் நீரை நிறுத்தி விட்டுப் புறப்பட்டுப் போகின்றான்.

அவனுக்குத் தண்ணீர்த்தாகம் எடுத்தால் இந்தப் பைப்புக்கு வந்து தண்ணீர் குடிக்கின்றான்.

தண்ணீரை அளவாகத் திறந்து விட்டு, வாயைத் திறந்து பைப்பில் பொருத்தி வைத்துக் குடிக்கின்றான்.

யாராவது கண்டு கொண்டால் போதும்.

“அடே வேலு...” எனச் சத்தம் போட்ட வண்ணம் துரத்திக் கொண்டு வருகிறார்கள்.

அவன் தாகம் முற்றாகத் தீராது. அரைகுறையில் எழுந்து ஓடு கின்றான்.

அவனை இம்சைப்படுத்துவதற்கென்றே பலர் இருக்கின்றார்கள். காலத்தின் கோலமாக நவீனஅலங்காரங்கள் எல்லாம் அவனில் செய்து

பார்க்கின்றார்கள்.

இன்றைய நவநாகரிக இளைஞர்கள் போல அவன் தலை முடி நன்றாக மேலே ஏறச் சிதைத்த அலங்காரம் செய்கிறார்கள். முகத்தில் ஒரு பாதி மழிக்கப்பட்டு மறுபாதி உரோமம் அடர்ந்து கிடக்கும். சில வேளை களில் நாடியின் கீழ் குறுந்தாடி தொங்கும். முகத்தை மழிக்கும் போது தோலையும் சேர்த்து சீவியெடுத்த வடுக்கள் சிவந்து கிடக்கும்.

ஓரிரு தருணங்களில் அவன் பின்புறத் தோட்பட்டை கிழிந்து சிவந்து இரத்தம் கசிந்த வண்ணம் இருக்கும்.

வன்முறைச் சமூகத்தில் வளர்ந்த கருணை, இரக்கம், மனித நேயம் எதுவுமில்லாத குரூரப் பிறவிகளின் வன் கொடுமைகள் இந்தச் செயல்கள்.

அவன் என்ன உண்ணுகின்றான்? அவனுக்கு எங்கே உணவு கிடைக்கின்றது?

எனக்குள்ளே எப்பொழுதும் அலை அலையாக ஓயாத மனப் போராட்டம்.

ஒரு தினம் மனைவியிடம் கேட்கின்றேன்:

"வேலு பாவமப்பா... எப்பவாவது... இடையிடையே ஏதும் சாப்பாடு குடுத்தா லென்ன?"

"ஐயோ... அது வேண்டாம். அவனோடை ஒரு சங்காத்தமும் உங்களுக்கு வேண்டாம்"

பசித்த முகம் பார்த்து தாராளமாக அள்ளி அள்ளிக் கொடுக்கும் என் மனைவி மறுக்க மாட்டாளென்று நம்பினேன். அந்த நம்பிக்கை அவன் விஷயத்தில் பொய்யாகிப் போனது எனக்குப் பெரிய ஏமாற்றம். தொடர்ந்து...

"அப்பிடிச் சொல்லாதையுங்கோ...? அவன் பாவம்" என்கின்றேன்.

"அவனிலே எனக்கு இரக்கமில்லை எண்டு நினைக்க வேண்டாம். ஆனால் காலை யிலே எல்லாரும் எழும்பி வேலைக்குப் போய்விடுவியள். நான் வீட்டிலே தனிச்சிருப்பன். குடுத்துக் காட்டினால்... அவன் வந்து நிற்பான்..." சொல்லும் பொழுதே மனைவி பதறுகின்றார்.

"நல்லாப் பயப்பிடுகிறியள்... சரி... சரி... அதை விடுங்கோ!"

எந்த வீட்டிலாவது ஒரு கொண்டாட்டம் நடைபெற்றால் அவன் வேகமாக உள் நுழைந்து பலருக்கு மத்தியில் கதிரையில் அமர்ந்து கொள்ளுகின்றான். தேநீர் வழங்கும் சந்தர்ப்பமாக இருந்தால், தேத் தண்ணி... தேத்தண்ணி..." என்கிறான்.

உறவினர்கள், நண்பர்கள் எனப்பலர் நிறைந்த சபைக்குள்ளே வேண்டப்படாத ஒருவனாகவே அவனை நோக்குகின்றார்கள். தாமதமின்றி விரைவாக அங்கிருந்து அவனை அனுப்பி வைக்க விரும்புகிறார்கள், உடனே அவனுக்குத் தேநீர் கொடுக்கின்றார்கள். அதைக் குடித்து முடித்து விட்டு,

“கப்”பை நீட்டிக் கொண்டு திரும்பவும் “தேத்தண்ணி… தேத்தண்ணி…” எனக் கேட்கின்றான். அவன் விருப்பம் போல மறுபடியும் தேநீர் கிடைக்கும். மூன்று, நான்கு “கப்” தேநீரைக் குடித்து முடித்து விட்டு பட்டென்று எழுந்து செல்லுகின்றான்.

மதிய வேளையாக இருக்குமானால், கோப்பையில் சோறு கறிகளைப் போட்டு வந்து அவனிடம் நீட்டுகின்றார்கள்.

அவன் அந்த உணவைக் கைநீட்டி வாங்குவதில்லை., “பார்சல்… பார்சல்…” என்று கேட்டுக் கொண்டிருக்கின்றான்.

உடனடியாகச் சோற்றுப் பார்சல் ஒன்றைக் கட்டி வந்து அவன் கையில் கொடுக் கின்றார்கள்.

அதை வாங்கிக் கொண்டு கையைத் தூக்கி இரண்டு விரல்களையும் நீட்டிக் காட்டி, “இரண்டு… இரண்டு” எனக் கேட்கின்றான்.

இன்னொரு பார்சல் சுணக்கமில்லாது அவன் கையில் கிடைக்கிறது.

அவன் எழுந்து மடித்துக் கட்டிய துணியின் மேல்பட்டை அவிழ்த்து பின்புறத்தில் அதனை வைத்து மீண்டும் முன்போலக் கட்டிக் கொண்டு நடந்து போகின்றான். அந்தப் பார்சல் கள் ஆடிஆடி அவனது பின்புறத் தொடைகளில் தட்டிக் கொண்டிருகிறது.

நான் வளவுக்குள்ளே கிணற்றில் நின்று குளிக்கின்றேன்.

“ஆடி மாதம் எப்ப… ஆடி மாதம் எப்ப…? யாரோ வினவுவது வந்து என் செவிகளில் விழுகிறது.

நான் நிமிர்ந்து வீட்டு வேலிக்கு வெளியே பார்க்கின்றேன்.

அவன் ஒழுங்கையில் நின்று கொண்டிருக்கின்றான்.

“அதுக்கு நாள்க் கிடக்கு…” என்கிறேன் சுருக்கமாக.

“இப்ப… ஆனி… பிறகு ஆடி…”

“ஓமோம்”

“ஆடி… ஆடி அமாவாசை…” என்கின்றான் அவன்.

எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அவன் உள்ளுணர்வை மேலும் புரிந்து கொள்ளும் நோக்கத்துடன் “சித்திரை… சித்திரைப்பறுவம்” என்கின்றேன்.

“அது முடிஞ்சிது… அது முடிஞ்சிது…” என்று கூறும் போது இதுவரை நான் காணாத ஒரு தனி ஒளி , அவன் அரைக்கண் பார்வையில் மின்னி மறைகின்றது.

ஓ… அவனுக்குள்ளும் அவன் அன்னையும் பிதாவும் தெய்வங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்!

அவன் வேகமாக அங்கிருந்து கிளம்புகின்றான்.

சில நாட்கள் கழிந்த பின்னர் இன்று ஆடி அமாவாசை நோன்பு

நாள்.

நானும் மனைவியும் தாய் தந்தையை இழந்தவர்கள்.

நாங்களிருவரும் இன்று எங்கள் தந்தையரை நினைத்து விரதம் அனுஷ்டிக்கும் தினம்

அதிகாலையில் எழுந்து வீடு வாசல் கழுவித்துடைத்து புனிதப் படுத்தி, தானும் தலையில் நீரை ஊற்றித் தோய்ந்து முடித்து, வீட்டு முற்றத்தில் பூரண கும்பம் வைத்து சமையல் வேலைகளை மனைவி ஆரம்பித்து விட்டாார்.

சமையல் காரியங்கள் நிறவை பெறும் தறுவாயில், நான் தலை தோய்ந்து முடித்து படையல் செய்யும் சுவாமி அறைக்கு வந்து சேரு கின்றேன்.

மனைவியும் பிள்ளைகளும் அதிசயமாக இன்று என்னைப் பார்க்கிறார்கள்.

வழமையாக படையல் செய்து முடிந்து பின்பு என்னை அழைப்பார்கள். நான் அறைக்குள் புகுந்ததும் மனைவி திருநீற்றுத் தட்டைத் தூக்கித் தருவார். நான் திருநீற்றில் தொட்டு நெற்றியில் பூசிக் கொள்வேன். மனைவி சந்தனக் கிண்ணத்தை கையில் எடுத்து எனது நெற்றியில் பொட்டு வைப்பார். பிறகு தண்ணீர்ச் செம்பை கையில் தர, நான் கைகளைக் கழுவிக் கொண்டு வந்து படையல் சோற்றுக்கு முன்னே அமருவேன்.

அந்தச்சமயம் எரிந்து கொண்டிருக்கும் குத்து விளக்கை மனைவி உடனே அணைத்து விடுவார். இன்று விரதப் படையல் படைக்க ஆரம்பிக்கும் வேளை நான் உள்ளே வந்து நிற்கின்றேன்.

மனைவி தலைவாழை இலைகள் இரண்டினை எடுத்து, பரப்பி வைத்து தண்ணீர் தெளிக்க ஆயத்தமாகின்றார்.

“இன்னொரு இலை போடுங்கோ...!” என்கிறேன் நான்.

மனைவி தலை நிமிர்ந்து என்னைப் பார்க்கின்றார்.

பிள்ளைகளுக்கும் ஒன்றும் விளங்க வில்லை.

இறுக்கமான எனது மௌனம் அவர்கள் வாய் திறக்காது தடுக்கிறது.

பிதிர்ப்படையல் செய்து முடிந்து, நான் உணவு உண்டு முடிக் கின்றேன்.

மேலதிகமாக இருக்கும் படையலை ஒரு பார்சலாக கட்டுவித்து வாங்கிக கொள்கின்றேன். இன்னொரு பார்சலும் வேண்டுமென கேட்டுப் பெற்றுக் கொள்கின்றேன்.

இன்று பல தடவைகள், எங்கள் வீட்டு ஒழுங்கையில் அவன் வந்து போய் விட்டான்.

அவன் வருகையை நான் எதிர் பார்த்து காத்திருக்கத் தொடங்கிய

*பின்பு நீண்ட நேரமாக அவன் வரவில்லை.*

*நான் நீண்ட பொழுதாக காத்திருக்கின்றேன். எனது உள் மனம் சொல்லிக் கொண்டிருக்கிறது அவன் வருவான் என்று.*

*எனது நம்பிக்கை பொய்யாகவில்லை. மாலை மங்கி இருள் படர்ந்து கொண்டிருக்கும் நேரம் அவன் வேகமாக வந்து கொண்டிருக் கிறான்.*

*நான் ஒரு ரிசு பையுக்குள் போட்டு வைத்திருக்கும் சோற்றுப் பார்சலை கையில் தூக்கிக் கொண்டு வீதிக்கு விரைந்து வரு கின்றேன். அவன் என்னனைக் கடக்கும் சமயம் "வேலு" என மெல்ல அழைக்கின்றேன்.*

*அவன் வேகம் தடைப்படுகின்றது.*

*எதிரில் வேலி ஓரமாக ஒதுங்கி நின்று வழமையான தலை அசைவுடன் அரைக் கண் களால் கூசிப் பார்க்கின்றான்.*

*நான் குறிப்பாக அவனை நோக்கு கின்றேன்.*

*வயிறு நன்றாக ஒட்டிக்கிடக்கின்றது.*

*நான் அவனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்து "வேலு, இண்டைக்கு அமாவாசை விரதம் தானே!" கேட்கின்றேன்.*

*அவன் "ஆம்" எனத் தலை அசைக்கை யில், அன்று நான் கண்ட அந்த ஒளி ஒரு கணம் திரும்பவும் கண்களில் மின்னி மறைகின்றது.*

*"இது அமாவாசைப் படையல், கொண்டு போய்ச் சாப்பிடு. அவன் கையில் பார்சலைக் கொடுக்கின்றேன்.*

*"இரண்டு..., இரண்டு என இரண்டு விரல்களை விரித்துக் காட்டுகின்றான்.*

*"இரண்டு... இருக்கு..." என்கிறேன் நான்.*

*ரிசுப்பையைத் திறந்து பார்க்கிறான். திருப்தியுடன் தலை ஆட்டு கின்றான். கட்டி யிருக்கும் துணிக்குள் வழமைபோல பார்சலை வைக்கின்றான்.*

*"தோய வேணும், தோய வேணும்" எனச் சொல்லிக் கொண்டு வேகமாக நடக்கின்றான்.*

*நான் மனநிறைவோடு வீட்டுக்குள் திரும்புகின்றேன்.*

*சில மணி நேரம் கழிந்து இருக்கும், பைப் நீர் சலசலத்து ஓடிக் கொண்டிருக்கும் சத்தம் எழுகின்றது.*

*அமாவாசை இருள் தன்னைத் தவிர வேறு எதனையும் காட்டாத, தடித்துக் கனத்த கும்மிருட்டு.*

*ஆடி அமாவாசை விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி, வெற்றிக்களிப்புடன் மோட்டார் சைக்கிள்கள் வீதியில் சீறிக் கொண்டு வருகின்றன.*

*அவன் பைப்புக்கு கீழே குந்தியிருந்து தலை தோய்ந்து கொண்டிருக்கின்றான். மோட்டார் வைக்கிள்கள் ஒளியைப் பாய்ச்சிய வண்ணம் வரிசையாக வருவது கண்டு, இருளை மாத்திரம் கோவணமாக கட்டியிருக்கும் அவன் துடித்துப்பதைத்து எழுகின்றான்.*

*"ஹாய்...ஹாய்... எடே வேலு... என்ன வேலை எடா செய்கிறாய்." மோட்டார் சைக்கிள் களின் வெளிச்சத்தை அவன் மேல் பாய்ச்சு கின்றார்கள்.*

*அவன் ஒரு கணம் நிலை தடுமாறி பதகளிக்கின்றான்.*

*அடுத்த கணம் குதித்துப் பாய்ந்து வீதியைக் கடந்து வேலியில் தொங்கும் சோற்றுப் பார்சலைப் பற்றிப் பிடிக்கத் தாவுகின்றான்.*

*மோட்டார் சைக்கிள்கள் அவனை முட்ட வருவது போல நெருக்கமாக... மிக நெருங்கி... வந்து அவன் மீது ஒளியை வீச...*

*ஒரு சைக்கிள் பின் சீற்றில் அமர்ந் திருக்கும் ஒருவன் கையை வீசி அவன் முதுகில் பளாரென அடிக்கின்றான்.*

*"டேய் வேலு சும்மா நிற்கிறான்டா...! அம்மணமாக ஓடு கிறானடா...! ஹாய்... வேலு... டேய் வேலு..." எனக் கூக்குரலிட்டு, அவனை முன்னே ஓட விட்டு, ஒளி வெள்ளத்தில் மூழ் கடித்தவாறு பின்தொடர்ந்து போகின்றார்கள்.*

*அவன் நீர் சொட்டச் சொட்ட நிர்வாணமாக ஓடிக் கொண்டி ருக்கிறான்.*

*அவன் நிர்வாணம் பார்த்து இரசித்த வண்ணம் அவனைப் பின் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.*

*அவன் திரும்பிப் பார்க்கவும் இயலாது மூச்சுப் பிடித்து வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறான்.*

*அவன் நீராடிக் கொண்டிருந்த தண்ணீர்ப் பைப் எதிரில் நிற்கும் கிளுவ மரக் கிளையில் அவன் அவிழ்த்துப் போட்ட கந்தல் துணி அருகே, தொங்கிக் கொண்டிருக்கிறது அந்தச் சோற்றுப் பார்சல்.*

ஜீவநதி - 60

# அணையாச்சுடர்

*"சூடேய்... சூடேய்... சூடேய்...*

*ஏழையின் தோழன் சூடேய்.... சூடேய்"*

*குரல் கொடுத்த வண்ணம் சயிக்கிள் வண்டியை மெல்ல மிதித்தவாறு வந்து கொண்டிருக்கும் பொன்ராசா வின் குரலிலும் அசைவிலும் ஒரு நிதானம் இருக்கின்றது. அவருக்கு எந்த சிரமமுமில்லை எவருடனும் வியாபாரப் போட்டியில்லை. மீன்...மீன்... என்று கூவி அழைக்கும் வழக்கமுமில்லை. எப்பொழுதும் வெகுநிதானமாக "சூடேய்... சூடேய்... ஏழையின் தோழன்... சூடேய்..." என அவர் குரல் எழுந்து கொண்டிருக்கின்றது.*

*"சூடேய்... சூடேய்..."*

*இடையில் இவர் குரல் தடைப்படுகின்றது. வாடிக்கையாளர் யாரோ ஒருவர் அவரை மறிச்சுச் சூடை வாங்குகிறார்.*

*மீண்டும் குரல் எழுகின்றது.*

*"சூடேய்... சூடேய்... சூடேய்... ஏழையின் தோழன் சூடேய்... சூடேய்"*

*சூடை மீனுக்குப் பொன்ராசா சூட்டி இருக்கும் கௌரவப் பெயர் ஏழையின் தோழன் அப்படி ஒரு நாமம் சூடைமீனுக்குச் சூட்டும் மனப்பக்குவம் சிந்தனை பொன்ராசா தவிர வேறு யாருக்கு வரும்? மலிவானதென்ப தால் சூடை மீனைத் தரக்குறைவாக் கணித்து கேவலப் படுத்தும் மனப்போக்கு உள்ள ஒருவரல்ல பொன்ராசா.*

*ஒருகாலத்தில் தேறை மீனை வசதிபடைத்தவர்கள் இழிவாகக் கருதினார்கள. தேறை மீன் வலையில் படும் காலத்தில் கும்பி கும்பியாக வந்து குவியும். தாராளமாக வாங்கலாம். விலை மிகக்குறைவு ஏழை எளியர்கள் தேறை மீனை தின்பார்கள் தேறைபோட்டு அவித்த ஒடியற்பிட்டு வெகுசுவையாக இருக்குமென்று சொல்லுவாரக்ள். வசதி யுள்ள தனவந்தர்கள் தேறை மீன் பக்கம் திரும்பியும்*

பார்ப்பதுமில்லை. இப்போது முன்னர் போலத் தேறை மீன் அதிகம் பிடிபடுவதில்லையோ அல்லது மீனவர்களுக்கு அதைப்பிடிப்பதில் நாட்டமில்லையோ தெரியாது! ஆனால் தேறை மீன் போல சூடை மீனை இளக்காரமாகச் சொல்ல முடியாது. ஏனைய மீன்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் கொஞ்சம் மலிவான மீன் அவ்வளவுதான்.!

பொன்ராசா சூடை மீன்களைத் தவிர்த்து வேறு மீன்களை வாங்கி வந்து விற்பதில்லை. சூடை மீன் கொள்வனவுக்குப் பெரியமுதல் தேவையில்லை. வசதிகுறைந்த ஏழைமக்கள் சொற்ப காசுக்கு வாங்கி கறியாக்கி உண்பதற்கு ஏற்ற மலிவான மீன். வறிய மக்கள் உயர்வுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்து விட்டவர் பொன்ராசா. அந்த மக்களிடம் மீன் வியாபாரம் என்ற பெயரில் தினமும் அவர் போகிறார். அவர்களுடன் உரையாடுகிறார். அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலோசனைகள் கூறுகிறார். வேண்டியவேளை அவர்களில் ஒருவராக அவர்களோடு இணைந்து நிற்கிறார். சூடை மீன் வியாபாரத்தில் பெரிதாக ஆதாயத்தை அவர் எதிர்பார்ப்பதில்லை. ஏதோ, அவரும் அவரது குடும்பமும் வாழ்ந்தால் போதும் என்ற திருப்தி.

காலை விடிந்து சில மணி நேரத்தின் பிறகு கிராமத்து தெருக்களில் “பீப்...பீப்...” எனக்கோன் சத்தங்கள் சற்று இடைவெளி விட்டுவிட்டு எழுகின்றன. மீன் வியாபாரிகள் சயிக்கிளில் பூட்டி இருக்கும் கோன் சத்தந்தான் அது. சிலர் மோட்டார் சைக்கிளில் மீனொடு வருவதுண்டு. வாரத்தில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த நாட்களில் அவர்கள் கிராமங்களைச் சுற்றி வருகிறார்கள். முந்தி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மீன்கள் பிடிபட்ட அன்றே அந்த மீன்களை விற்றுத்தீர்த்து விடவேண்டும். அப்படி விற்க முடியாது மிஞ்சிக்கிடந்தால் ஐஸ்கட்டிக்கள் போட்டு வைத்து, பின்னர் கொண்டு வந்து விற்கவேண்டும். ஐசில் போட்டுவைத்த மீனை மக்கள் விரும்பி வாங்கி உண்பதில்லை. மீன் வாங்குகிறவர்களை ஏமாற்றி, தந்திரமாக விற்கவேண்டும். அல்லது உப்புத் தடவி வெயிலில் பல தினங்கள் காயவைத்து கருவாடாக்க வேண்டும். இவையெல்லாம் சிரமமான செயற்பாடுகள். இதனால் தான் அன்றைக்கே விற்றுத்தீர்த்து விட வேண்டுமென்னும் போட்டியும் அவசரமும் அவர்களுக்கு.

பொன்ராசா யாரோடும் போட்டிபோடுவதில்லை. எந்த அவசரமுமில்லை. அவர் வருகையில் எதிர்ப்பார்த்து அவருடைய வாடிக்கையாளர்கள் எப்போதும் காத்திருப்பார்கள்.

சூடை மீனுக்குப் பொன்ராசா சூட்டி இருக்கும் கௌரவப்பெயர் ஏழையின் தோழன் அந்தப்பெயர் அவருக்கு வெகுபொருத்தம். இதை உணர்ந்து மக்கள் இப்போது அந்தபெயரால் அவரை அழைக்கிறார்கள். ஏழையின் தோழன் என்றால் அது பொன்ராசாவேதான்.

இரவு படகுகளில் சென்ற மீனவர்கள் மீன்களைப்பிடித்துக் கொண்டு அதிகாலையில் கரைவந்து சேருகிறார்கள். அவர்கள் வருகைக்

காகக் கடற்கரையில் காத்து நிற்கிறார்கள் மீனவப்பெண்கள். கடற்கரைச் சந்தையில் வைத்து அந்த மீன்களை அவர்கள் விலைகூறி மொத்தமாக விற்றுவிடுகிறார்கள். ஒரு காலத்தில் ஆண்களோ அல்லது பெண்களோ மீன்களைச் சுமந்த வண்ணம் விற்பனை செய்வதற்காக கிராமங்களுக்குள் மீனவ சாதிக்காரர் வருவதில்லை.

கடற்கரைச்சந்தையில் அந்த மீன்களை மொத்தமாக வாங்கி, பனை யோலைக் கடகங்களில் போட்டு, தலையில் சுமந்தவாறு ஓடோடிச் சென்று சந்தைகள், கிராமங்கள் என்று விற்பனை செய்வது தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களுள் ஒரு பகுதியாளரின் தொழில். பொழுது நன்றாக புலரமுன்னர் எழுந்து தயாராகி, சந்நிதி முருகப்பெருமானை நினைந்து வணங்கி, நெற்றி நிறையத்திருநீறு பூசி, சந்தனப்பொட்டிட்டு, வாய்நிறைய வெற்றிலையை அதக்கிக்கொண்டு, மீன் பெட்டிகளைத் தலையில் சுமந்த வண்ணம் அவர்கள் சிறுசிறு கூட்டமாக தமக்குள் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் கடற்கரையை நோக்கி ஓடுவார்கள்

போர்க்காலச்சூழல் இந்தச்சமூக நடைமுறையை முற்றாக இன்று மாற்றி அமைத்து விட்டது.

பலாலி, மயிலிட்டிப் பகுதிகளில் இருந்து அகதிகளாகக் குடும்பங் களுடன் இடம்பெயர்ந்து கடற்தொழிலாளர்கள் வடமராட்சிப் பகுதி வந்து சேர்ந்தார்கள். தாங்கள் செய்யும் தொழிலை இழந்து அகதிகளானார்கள்.

அவர்கள் வாழ்வதற்கு வழிதேடவேண்டிய அவலம். மீன்பிடித் தொழிலைக் கைவிட்டால் வாழ்வதற்கு என்னவழி? உறவினர் நண்பர் களுடன் சேர்ந்து சிலர் மீன்பிடிக்கக் கடல்மேல் சென்றார்கள், வசதி படைத்த மிகச்சிலர் தாமே சொந்தமாக தொழில் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். எந்த வசதியோ வாய்ப்போ இல்லாத சாதாரண தொழி லாளர்கள் ஆரம்பத்தில் செய்வதறகுத் தொழில் இல்லாது சிலகாலம் குடும்பங்கள் கஸ்டத்தில் உழலநேர்ந்தது. இறுதியில் அவர்கள் எடுத்த முடிவுதான் மீன் வியாபாரம். பிளாஸ்ரிக் மீன் பெட்டிகளை சயிக்கிளில் பின்னே கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்கள் நாட்டுச் சூழ்நிலை அவர்களை இப்படி மாற்றி அமைத்தது.

மீன்பிடித்தொழிலாளர்களுக்கு மீன் வியாபாரம் செய்வது ஒரு புதிய வாழ்க்கை; புதிய தொழில்; புதிய அனுபவம்.

மீன்பிடித் தொழிலாளர்களுக்கு பிறந்த அனுசாரற்ற முதிய ஏழைப் பெண்கள் சிலர். தங்கள் ஜீவாதாரத்துக்காகக் கருவாடு தயாரித்துக் கிராமங்களுக்குள் கொண்டு சென்று விற்பனை செய்வதுண்டு

திரியாப்பாரை மீன்கள் பெருமளவு பிடிபடும் காலத்தில் மலிவான விலையில் மீன்களை வாங்கி, வெட்டிப்பிளந்து, குடல்கள் முதலியவற்றை நீக்கிவிட்டு, உப்புத்தடவி பழையபாய்கள், தறுப்பாள்கள் பரவிப் போட்டு, பழுதான வலைகைளை அதன் மேல் விரித்து, காகம், நாய், பூனை கவ்விக்கொண்டு ஓடாமல், கையில் சிறுகம்புடன் காவல் இருந்து, பல

தினங்கள் சுட்டெரிக்கும் வெயிலில் காயவிட்டு, நன்றாக காய்ந்த பின்னர் கருவாடாக எடுத்து, பாளம் பாளமாக அடுக்கி, பெட்டிகளில் வைத்துக்கொண்டு கிராமங்களுக்குள் விற்பனை செய்வதற்கு வருவார்கள்.

பச்சை மீன்களிலும் பார்க்க திரியாப்பாரைக் கருவாடு பெறுமதி அதிகம். சுவையும் அதிகம். குழந்தை பெற்ற பச்சைப் பிள்ளைத்தாச்சி, பூப்படைந்த கன்னிப்பெண், பலகாலம் படுக்கையில் கிடந்த நோயாளி. இவர்களுக்கு திரியாப்பாரைக் கருவாடு விஷேசமாக பத்தியக் கறி ஆக்கி கொடுப்பார்கள். சிலர் சீரகக்கறி என்றும் இதைச்சொல்லுவார்கள். சின்னச் சீரகம், வெள்ளைவெங்காயம், மல்லி, வேர்க்கொம்பு, மிளகு, சின்ன வெங்காயம் சேர்த்து அம்மியில் போட்டு பசுந்தாக அரைத்து திரட்டி எடுத்து அரைச் கூட்டினை பிழிந்த தேங்காய்ப்பாலில் கரைத்து, திரியாப் பாரைக் கருவாடு சிறு சிறு துண்டுகளாக வெட்டிப்போட்டு பத்தியக்கறி காய்ச்சி முடிப்பார்கள். அதைத்தனியாகக் குடிக்க கொடுப்பார்கள் அல்லது சோற்றி லிட்டு உண்ணக் கொடுப்பார்கள். அந்தக்கறிக்கென்று ஒரு தனிச்சுவை. அதை உண்டவர்கள் அதன் சுவையை அறிவார்கள். நல்ல மணங்குணமா உண்டு. நன்கு அனுபவித்தவர்களின் நாவின் தவிப்பைத் தீர்ப்பதற்காகத் தான் இன்று திரியாப்பரைக் கருவாடு விமானம் ஏறி வெளிநாடுகளுக்குப் பறக்கின்றது.

பொன்ராசா அகதியாகப் புலம்பெயர்ந்து வந்து வடமராட்சி மண்ணில் தஞ்சம் அடைந்த ஒருவரல்ல. அவர் பிறந்த மண்ணில் தனது சொந்த வீட்டில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்துகொண்டிருந்தார்.

பின்னர் ஒரு சமயம் அவரும் ஊரைவிட்டுக் கிளம்பிக் போக வேண்டிய நிர்ப்பந்தம்

அவரது கொள்கை, அவர் வைக்கும் விமர்சனங்களால் அதிருப்தி யுற்ற ஆயுதக்குழு ஒன்று தொடர்ந்து அவரை எச்சரித்துக்கொண்டிருந்தது.

ஆனால் அவர் தனது முற்போக்குக் கொள்கையில் இருந்து தடுமாறிய சுயநலவாதியாக மாறவில்லை அல்லது மூடிமௌனித்து இருப்பதற்குத் அவருக்கு முடியவில்லை.

பிழை என்று கண்டும் அதனைக் கண்டிக்காது மௌனமாக இருப்பது, அந்தப்பிழையைச் செய்வதற்குத் துணைபோவதாகவே இருக்கும் என்பது இவர் கருத்து.

அவர் தொடர்ந்து விமர்சித்தக்கொண்டே இருந்தார்.

அவரைச் சும்மா விட்டுவைத்தால் அவர்கள் கையில் தூக்கிய துப்பாகிக்கு அர்த்தமில்லாது போய்விடுமல்லவா,

ஒரு சலுகையாக அவரை ஊரைவிட்டு வெறியேறுமாறு கட்டளை பிறந்தது

அதன் பிறகு என்ன செய்வது?

அவர் தலைமறைவானார்.

*தலைமறைவு வாழ்வில் நண்பர்கள், தோழர்கள் அவருக்கு ஆதரவு கொடுத்துப் பாதுகாத்தார்கள்.*

*ஒரே இடத்தில் தொடர்ந்து வாழாது இடம்மாறி இடம்மாறி பல இடங்களில் அவர் காலம் கழிந்தது.*

*பின்னர் நிலைமை முற்றாக மாறிய பிறகு தலைமறைவு வாழ்வில் இருந்து மீண்டும் ஊருக்குத் திரும்பினார்.*

*இப்போது அவர் செய்வதற்கு ஒரு தொழில் தேவையாக இருந்தது. முன்னர் போல கடல்மேல் சென்று மீன் பிடித்தொழில் செய்ய அவருக்கு முடியவில்லை. அதனால் மீன் வியாபாரத்தை ஆரம்பித்து விட்டார். மக்களைத் தேடிச்சென்று சந்திப்பதற்கு அது வாய்ப்பான வழியாக இருந்தது.*

*“சூடேய்... சூடேய்.... ஏழையின் தோழன்...சூடேய்..” அவரிடம் வழமையாகச் சூடை மீன் வாங்குகிறவர்கள் வீட்டுபடலைகளில் அவர் தரித்து நிற்கின்றார். மீன் வாங்கும் குடும்பப் பெண்களின் வயதுக்கு ஏற்றவாறு உறவு சொல்லி அழைக்கிறார்.*

*“அம்மோய்... அக்கோய்...தங்கா...பிள்ளையள்...” என உரிமையுடன் அவர் குரல் கொடுக்கின்றார்*

*யாராவது மீன் வாங்க வருவதற்கு ஒருநாள் சற்றுப் பின்னடித்தல், அவர்களிடம் இன்று கையில் காசில்லை என்பது சட்டென்று அவருக்குப் புரிந்துவிடும்.*

*“வாங்க... அக்கோய் வாங்க... மீனைக்கொண்டு போங்கோ... காசைப் பிறகு தாருங்கோ!” கூவி அழைத்துக் கையில் கொடுத்து விட்டுப் போய் விடுகிறார்.*

*சூடை மீன்தானே என்று இளக்காரமாக அவர் காதுபட பேசினால், அதை எப்படிச்சுவையாக சமைக்க வேண்டுமென பக்குவங்களை எடுத்துக் கூறுவார்.*

*“உப்புப்போட்டு அவிச்செடுத்து பிறகு அரைச்ச குழம்பில் போட்டுக்காய்ச்ச வேணும். சொதி எண்டால் வெங்காயம், பச்சைமிளகாய் நிறையப்போடவேணும். மாங்காயைத் கீறிப்போட்டு வெங்காயம், மிளகாய் கொள்ளப்போட்டு, சொட்டுத் தேங்காய்ப் பால் விட்டு இறக்கும் போது தேசிக்காய் புளியும் விட்டு, தீயல் வைச்சால்.. வேறை கறியே வேண்டாம்... அந்த மாதிரி இருக்கும்”*

*அவர் கூறும் சமையற் பாகங்கள் கேட்டு, பெண்கள் உதட்டுக்குள் மெல்லச் சிரிப்பார்கள். “இதெல்லாம் உங்களுக்கு எப்பிடித்தெரியும்?” என பிறகு வினாவுவார்கள்.*

*“மனிதனாகப் பிறந்தவன் இதெல்லாம் அறிந்து வைச்சிருக்க வேணும்... பிள்ளையள்” என்று சொல்லிச்சிரிப்பார்.*

*“ஆச்சி....! ஆச்சி...!”*

*பொன்னிக் கிழவிக்கு வேகமாக எழும்பவும் இயலவில்லை*

விரைவாக நடக்கவும் முடியவில்லை. முதுகு சற்றுக் கூனிப் போன கிழவி தனது குடிசைக்குள் இருந்து மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்து தெருவுக்கு வந்து சேருவார்

பொன்ராசா கிழவி வந்து சேரும் வரை பொறுமையாக வீதியில் காத்து நிற்பார். கிழவி கையில் மீனைக்கொடுத்து விட்டு அவர் காசு எதிர்பார்ப்பதில்லை. ஆனால் பொன்னிக்கிழவி ரோஷக்காரி. காசு கையில் கிடைத்த நேரம் கணக்குப் பார்த்துக்கொடுத்து விடுவார். அவருக்கு அது தெரியும். கிழவிக்கு நெருங்கிய இரத்த உறவென்று எவருமில்லை. பேட்டுக் கோழிகள் மூன்று, ஒரு மறி ஆடு. இவைகள் தான் சொந்தம்.

பொன்ராசா பொன்னிக்கிழவியை தனது சொந்தப் பாட்டி போலப் பார்த்து நடந்து கொள்வார். இது இவர் இயல்பு. அவர் ஊடாடித் திரியும் மக்கள் குடும்பங்களில் நடைபெறும் நன்மை, தீமை நிகழ்வுகளில் எந்த வித வேறறுபாடும் இல்லாமல் அவர்களுள் ஒருவராகப் பங்குபற்றுவார் தூர இடங்களில் வாழும் நண்பர்கள் தோழர்கள் குடும்ப வைபவங்களில் தவறாது சென்று கலந்து கொள்வார். இதனால் இடையிடையே அவரது மீன் வியா பாரம் தடைப்பட்டுப்போவதுண்டு அப்படியான சமயங்களில் தன்னிடம் மீன் வாங்குகின்றவர்களுக்கு முதல் நாளே தகவல் சொல்லி வைத்து விடுவார்.

அன்று முன்கூட்டி சொல்லி வைப்பதற்கு முடியாத சூழ்நிலை இருந்தாற் போல பொன்ராசாவுக்கு திடீர் நெஞ்சு வலி. வைத்தியசாலைக்குப் போவதைத் தவிர வெறு மார்க்கமில்லை. தன்னிடம் சூடைமீன் வாங்கித் தின்னும ஏழை மக்கள் ஏமாற்றம் அடையக்கூடாது என்ற எண்ணமே அவர் மனதில் முதல் எழுகின்றது.

மீன் வியாபாரிகள் வந்து ஒன்று கூடி மொத்தமாக மீன் கொள்வனவு செய்யும் கடற்கரைச் சந்தை நோக்கி அவர் வருகிறார். அவரது நம்பிக்கைக் குரிய மீன் வியாபாரி கதிரமலையை அணுகி, “தம்பியா…கதிரமலை இண்டைக்கு நீ எனக்கு ஒரு உதவி செய்ய வெணும்” என்றார்

“என்ன செய்ய வேணும்… அண்ணாச்சி? சொல்லுங்கோ!”

“நான் ஒருக்கால் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டி இருக்கு நீ கொஞ்சம் சூடை வாங்கிக்கொண்டு போய் வழமையாக என்னட்டை வாங்கிற சனங்களுக்கு குடு தம்பியோ!”

கதிரமலை மீன் சந்தையைப் பார்க்கிறான். வகைதொகையாக விளைமீன்கள், துள்ளுமண்டைகள், பாரைகள் எல்லாம் பிடிபட்டிருக் கிறது. வாங்கிப்போய் நல்ல விலைக்கு விற்கலாம். இதற்குள்ளே சூடை மீனை வாங்கி… அவன் ஒரு கணம் யோசிக்கிறான். ஆனால் அவர் வேண்டுகோளை எப்படி நிராகரிப்பது?

“என்ன தம்பியோ சொல்லுகிறாய்..?”

அடுத்த கணம் அவன் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு ஒண்டு மில்லை …சரி அண்ணை வாங்கிகொண்டு போய்க் குடுக்கிறேன்”

பொன்ராசாவின் வேண்டுகோளை தட்டிக்கழிக்க முடியவில்லை

பொன்ராசா நிம்மதியாக வீடு திரும்புகின்றார்; வைத்தியசாலைக்கு இப்போது போயாக வேண்டும் என்ற ஆதங்கம்.

மறுதினம் முகம் கழுவாத சூரியன் பூமிக்கு மெல் மெதுமெதுவாகத் தலைநீட்டி எட்டிப்பார்க்கிறான்.

இரவு இன்னும் அகலாது உறங்குவது போல ஊர் மயான அமைதியோடு கிடக்கிறது. தினம் போட்டி போட்டுக் கொண்டு ஓடிவரும் மீன்வியாபரிகள் ஒருவர் தானும் இன்று வரக்காணோம்.

ஆண்கள் பெண்கள் என்று பலர் புறப்பட்டுப் தெருவில் போய்க் கொண்டிருக்கிறாரக்ள்.

பொன்னிக்கிழவி இன்று ஒடியற்கூழ் காய்ச்சிகுடிப்பதற்குத் தயாராக இருக்கிறாள். பொன்ராசாவை எதிர்ப்பார்த்துக்காத்திருக்கிறாள். அறுத்துக்கறி ஆக்கும் போது மிச்சம் பிடித்து வைத்த கத்தரிக்காய்ப் பிஞ் சொன்றும், குரங்குவாலன் பயித்தங்காய் மூன்றும் நறுக்கித் தயாராக வைத் திருக்கிறாள். கறி முருங்கை இலையும் கொஞ்சம் பிடுங்கி எடுத்துக் கொண்டாள். சூடை மீனும் போட வேணும்.

அந்த விடியா முகத்துடன் சூரியன் மெல்ல மெல்ல மேலே ஏறிக் கொண்டிருக்கின்றான்.

பொன்ராசாவைத்தான் இன்னும் காணவில்லை!

“கொழுந்தாடு: பிடிச்சுக்கொண்டு தெருவாலே போற சன மெல்லாம். எங்கே எங்கே போகுதுகள் என்று எனக்கெண்டா ஒண்டுமாய்ப் புரியிரபாடில்லை!”

பொன்னிக்கிழவிக்கு இருப்புக்கொள்ளவில்லை

தெருவுக்கு மெல்ல நடந்து வந்து சேருகிறார்.

பெண்கள் இருவர் வாடிச்சோர்ந்த முகத்துடன் எதிரே வந்து கொண்டிருக்கிறார்கள்.

“பிள்ளையள்.... என்ன புதினம் எங்கே எல்லாரும் போறியள்” கிழவி விசாரிக்கிறார்

“செத்த வீட்டுக்கு ஆச்சி... நாங்களும் அங்கேதான் போகிறம்...”

“ஊர்ச்சனம் முழுக்கப்போகிறது...ஆர் பிள்ளை செத்தது?”

“ஆச்சிக்கின்னம் தெரியாது போல...?”

“உந்தக்கொண்டிலுக்கே கிடந்து குறண்டிற எனக்கு ஊர்த் துளவாரங்கள் என்னெண்டு தெரியும்”

“ஏழையின் தோழன் செத்துப்போனாராச்சி...” குரல் தளதளக்கிறது

“ஐயோ... ஐயோ... என்ர பிள்ளை செத்துப்போனானே...! என்ரை ராசா செத்துப்போனானே..!”

பொன்னிகிழவி இரண்டு கைகளினாலும் ஓங்கி தலையில் அடிக்

*கிறார். கண்களில் இருந்து கடல் போலக்கண்ணீர் பொங்கி வழிகின்றது. "ஐயோ...ஐயோ...!" கூக்குரல் இட்டுக்கொண்டு அந்தப் பெண்களின் பின்னே பொன்னிக்கிழவி போய்க்கொண்டிருக்கிறார்.*

ஜீவநதி - 80

# விபசாரன்

அவளுக்கும் எனக்கும் எந்தவிதமான ஒரு சொந்தமுமில்லை; பந்தமுமில்லை. எந்த வழியிலும் அவள் எனக்கு உறவுக்காரி இல்லை. அவளும் நானும் ஒரே கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே அவளுக்கும் எனக்கும் பொதுவான ஒன்று. வான்மதி என்ற அவள் பெயர் சொல்லி, அவளைத் தெரியுமா என்று யாராவது விசாரித்தால் பட்டென்று தெரியாதென்றே நான் கூறிவிடுகிறேன். அவள் மீது தனிப்பட்ட குரோதம் எதுவும் மனதில் எனக்கில்லை. ஆனால் எங்காவது அவளைச் சந்திக்க நேரும் சமயங்களில், அறியாதவன் போல மெல்ல விலகிப் போய் விடுகிறேன்.

அவள் பஸ்ஸில் இருந்து இறங்கி நடந்து வந்து கொண்டிருக்கிறாள். அவள் மிகவும் களைத்து தளர்ந்து போய் வருகிறாள் என்பதை அவள் நடை சொல்லுகிறது. விரைவாக நடப்பதற்கு அவளுக்கியலவில்லை. அவள் நடைவேகத்தை அளப்பது போல, தோளில் தொங்கும் “ஹான்பாய்க்” மெல்ல மெல்ல அசைந்தாடுகிறது. அவள் உடுத்திக் கொண்டிருக்கும் றோஸா வண்ண மெல்லிய ஆடை முற்றாக கசங்கிக் கிடக்கிறது அவள் கொண்டை போட்டுக் கொள்ளும் வழக்கம் இல்லாதவள். படிப்படியாக நெளிந்த சுருள் கூந்தலைப் பின்னி, குட்டையான ஒற்றைச் சடையொன்று எப்போதும் போட்டுக் கொள்ளுகிறாள். இப்போது ஒழுங்காக வாரிவிட்டு சடை முடிக்காத தலைபோல முற்றாக அது கலைந்து கிடக்கிறது. களை இழந்து கிடக்கும் தனது முகத்தைப் பிறர் கண்டு கொள்ளக் கூடாது என்ற எண்ணத்தைச் சுமந்து கொண்டு வருகின்றவள்போலத் தலை குனிந்து நிலம் நோக்கிய வண்ணம் நடக்கின்றாள்.

அவள் வீதியில் நடந்து வந்து ஒரு ஒழுங்கையில் திரும்பி கிராமத்துக்குச் செல்ல வேண்டும். அந்திப்

பொழுது அடிவானில் விழுந்து இருள் பரவ ஆரம்பித்து விட்டது. அவள் கிராமத்துக்குள் புகுந்து வீடு வந்து சேரும்வேளை முற்றாக இருள் சூழ்ந்து விடும். முகம் மறைந்து விடும். அவள் திட்டமிட்டு அந்த நேரத்தில் வீடுவந்து சேருவதுதான் வழக்கம்.

காலையில் எழுந்து வீட்டில் இருந்து புறப்பட்டு வெளியே செல்லும் வேளை அவளைப் பார்த்தவர் அசந்து போவார்கள். அப்படி ஒரு அழகுத் தேவதையாக அவள் தோன்றுவாள். பூங்கொடி போன்ற உடல். சிவந்தமேனி, சுமாரான உயரம், மான் விழிகள், தடித்த உதடுகள், நீண்ட கால்கள், கைகள். அரச திணைக்களம் ஒன்றில் உயர் அதிகாரியாகப் பதவியில் இருக்கும் பெண்ணாகவே அவளை நினைக்கத்தோன்றும்.

அவள் வீடு வந்து சேருகிறாள். வீடு இருளில் மூழ்கிக் கிடக்கிறது. அவள் தான் அந்த வீட்டுக்கு இனி விளக்கேற்ற வேண்டும். அவளுக்கு ஆதாரமாக இருந்த ஒரு ஜீவன் அவள் தந்தை. அவர் இறந்த பிறகு அவள் தனித்துப் போனாள். இப்போது அவளுக்கு உற்ற துணையாக இருப்பது அவளிடமுள்ள கைத்தொலை பேசி ஒன்று தான். அவள் பேசுவது, சிரிப்பது, அழுவது, சிணுங்குவது எல்லாம் அந்தக் கைத்தொலை பேசியோடுதான்.

அவளைத் தேடிக்கொண்டு அவள் வீட்டுக்கு யாரும் வருவதில்லை, அவளுக்குச் சொந்த பந்தங்கள் ஊரில் இல்லாமலில்லை. அவளிடம் உதவி கேட்டு மாத்திரம் இடையிடையே சிலர் வருகிறார்கள். யார், எந்த உதவி கேட்டாலும் அவள் இல்லை என்று சொன்னதில்லை. அப்படி ஒரு சுபாவம். யாருக்குக் கொடுத்தாலும் அதை அவள் திரும்பக் கேட்பதில்லை. அவளிடம் இருப்பது பிறருக்காக இரங்கும் கருணை உள்ளம். அவள் சிரித்துச்சிரித்துப் பேசி, எல்லோருட னும் அன்பாகப் பழகுவாள். அவள் வாய் பிறரைச் சினந்து ஒரு வார்த்தை பேசி அறியமாட்டாது.

அவள் வீட்டுக் கதவு திறந்து உள்ளே வருகிறாள். வீட்டுக்கு விளக்கேற்றவும் அவளுக்கு இயலவில்லை. படுக்கை அறைக்கு நேரே சென்று கட்டிலில் தொப்பென்று விழுகிறாள். அந்த நேரம் பார்த்து அவள் கைத்தொலைபேசி அனுங்கத் தொடங்குகிறது. அவள் அலுத்துக் கொண்டு கையை நீட்டி அதை எடுத்துப் பேச ஆரம்பிக்கிறாள்.

***

மழைவிட்டும் தூவானம் இன்னும் விடுவதாக இல்லை.

என்னைக் கைது செய்து கொண்டு போவதற் காக, இராணுவத்தினர் இரண்டு தடவைகள் வீடு வந்து தேடினார்கள். நான் ஒருவாறு தப்பித்து ஓடி விட்டேன். நான் வந்து சரணடையாது விட்டால், எனது மனைவி, குழந்தை களைக் கொண்டு செல்லப் போவதாக இறுதியில் எச்சரிக்கை செய்து விட்டுப் போயிருக்கிறார்கள். அவர்கள் வெறும் அச்சுறுத்தல் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்று கொள்வதற்கில்லை. அவர்கள் சொன்னது போல செய்யமாட்டார்கள் என்றில்லை. அவர்கள் எதையும்

செய்வதற்கு தடையாக இங்கு என்ன இருக்கிறது? அவர்களிடம் மனிதாபிமானத்தை யாரும் எதிர்பார்க்க இயலாது. எனது மனைவி, பிள்ளைகளுக்கு வரக்கூடிய ஆபத்தில் இருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டியது எனது கடமை. அதற்கு ஒரே வழி நான் அவர்களிடம் சென்று சரணடைவதுதான். அதைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் மனைவி பிள்ளைகள் நான் அதைச் செய்ய விடுவதாக இல்லை.

"நீங்கள் அப்பிடி என்ன பெரிசாகச் செய்து போட்டியள்?" எனக் கேட்கிறாள் என் மனைவி. இந்தக் கேள்வி இராணுவத்திடம் ஒரு போதும் எடுபடப் போவதில்லை. போராளிகளுக்கு உணவு கொடுத்ததும், ஆதரவாக இருந்ததுமே நான் செய்த குற்றம். இதை யார்தான் செய்யவில்லை? அவர்கள் கேட்டுக் கொண்ட சமயங்களில் எல்லாம் விரும்பியோ விரும்பாமலோ சோற்றுப் பார்சல்கள் எல்லாருந்தான் கட்டிக் கொடுத்தார்கள். மற்றவர்கள் ஒரு முட்டை வைத்துப் பார்சல் கட்டினால் நான் இரண்டு முட்டை வைத்துக் கட்டிக் கொடுத்தேன். அவ்வளவு தான். அது என்ன பெரிய குற்றமா?

அந்த நேரத்தில் நான் செய்ய வேண்டி இருந்ததையே செய்தேன். வித்தியாசமாக எதையும் செய்யவில்லை. பொய்யான தகவல் கொடுத்து மற்றவர்களைத் துன்பப்படுத்துவதற்கென்றே சிலர் பிறந்திருக்கிறார்கள். மற்றவர் துன்பம் கண்டு தமக்குள் மனம் மகிழும் ஈனப்பிறவிகள்". போராளிகள் இங்கு இருந்த காலத்தில் அவர்களுக்கு உளவு சொல்லிக் கொண்டு திரிந்தார்கள். இன்று இராணுவத்துக்குக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குற்றமெதுவும் செய்யாத நான் ஒவ்வொரு கணமும் அணுஅணு வாகச் செத்துக் கொண்டிருக்கின்றேன். இரவு நேரம் படுக்கையில் சென்று சரிந்தால் உறக்கம் வருவதாக இல்லை. வாகனம் ஒன்று இரைந்து கொண்டு வெகுதூரத்தில் வரும் சத்தம் செவியில் வந்து விழுந்தால் இதயம் வேகமாக அடிக்க ஆரம்பித்து விடுகிறது. அச்சமின்றிச் சுதந்திரமாக வெளியே சென்று வரமுடியவில்லை. கொட்டும் மழைக்குள் நின்று கொண்டு நனையாமல் விலகி ஓடும் வித்தை எதுவும் எனக்குத் தெரியவில்லை. அதனால் நான் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் கைகழுவி விட்டு, எந்தப்பாதாள உலகத்துக்குள்ளே சென்று ஒளித்துக் கொள்ள முடியும்?

என் மனைவிக்கு நிறைந்த கடவுள் பக்தி. இன்று வெள்ளிக்கிழமை. எனக்கு எந்தத் துன்பமும் நேராதென்ற நம்பிக்கையில் சந்தைக்குச் சென்று காய்கறி வாங்கிக் கொண்டு வருமாறு கேட்கிறாள்.

நான் சயிக்கிள் வண்டியில் ஏறி நெல்லியடிச் சந்தைக்குச் சென்று வரப் புறப்படுகிறேன். புளியடிச் சந்தியை அண்மித்துக் கொண்டிருக்கிறேன். திடீரென எதிர்த்திசையில் இருந்து றக் வண்டி ஒன்று வேகமாகச் சீறிக் கொண்டு வருகிறது. நான் திகைத்துத் திக்கு முக்காடிப்போகிறேன்.

எந்தப்பக்கமும் தப்பி ஓடுவதற்கு வசதியாக இல்லாத சூழ்நிலை. றக் வண்டி திடீரென்று பெரும் சத்தத்துடன் நின்று இரைகிறது. இராணுவ வீரர்கள் இருவர் வண்டியில் இருந்து கீழே குதித்து விரைந்தோடி வந்து என்னை இறுகப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் இரும்புப்பிடியில் இருந்து என்னால் திமிற முடியவில்லை. என்னை இழுத்துச் சென்று றக் வண்டிக் குள்ளே தள்ளுகிறார்கள். இராணுவவீரர் ஒருவன் எனது சயிக்கிளைத் தூக்கி உள்ளே போடுகிறான்.

றக் வண்டி அங்கிருந்து புறப்படுகிறது.

எனக்கு இதயம் ஒரு கணம் நின்று போனது. கைகள், கால்கள் பதறுகின்றன. உடல் எங்கும் வியர்த்துக் கொட்டுகிறது. நா உலர்ந்து வரண்டு போகிறது. அடிவயிற்றைக் கலக்கிக் கொண்டு வருகிறது. நான் மனைவி, பிள்ளைகளை நினைத்துக் கொள்ளுகிறேன். அவர்கள் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். நேரம் கடந்து செல்லச் செல்லக் காணவில்லையே என்று ஏங்கப் போகிறார்கள். அவர்களுக்கு யார் போய்த் தகவல் சொல்ல இருக்கிறார்கள்? இறுதியில் காணாமல் போனவர்கள் பட்டியலில் என் பெயரும் இடம்பெறப் போகிறது. கண்கள் பொங்கி வழிகின்றன.

நான் எதிர்பார்த்து நடுங்கிக் கொண்டிருக் கிறேன். வண்டிக்குள் போட்டு துவக்கால் வெடிக்கப் போகிறார்கள்; காலால் உதைக்கப் போகிறார்கள். சப்பாத்தால் மிதிக்கப் போகிறார்கள் என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.

வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது. இராணுவ வீரர்கள் தமக்குள்ளே சிங்களத்தில் ஏதோ பேசிக் கொள்ளுகிறார்கள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சிங்கள மொழியைக் கொஞ்சமாவது கற்றுக் கொள்ளாது விட்ட எனது தவறை இப்போது நான் உணருகிறேன்.

வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

நான் வழிபடும் தெய்வங்களை மனதுக்குள் நினைத்து மன்றாடிக் கொண்டிருக்கிறேன்.

றக் வண்டி இராணுவ முகாம் ஒன்றுக்குள் நுழைகிறது. என்னை வண்டியில் இருந்து இறங்குமாறு கட்டளை இடுகிறார்கள். இராணுவ வீரர்கள் சிலர் புடைசூழ்ந்து வர என்னை அழைத்துச் சென்று ஒரு அறைக் குள் விட்டுவிடுகிறார்கள். அந்த அறை ஆரம்பக்கட்ட விசாரணைகள் நடைபெறும் இடமாக இருக்க வேண்டும். தண்டனைகள், சித்திரவதை களுக்கு வேறு இடங்கள் இருக்கக்கூடும். பிறகு அங்குதான் அழைத்துக் கொண்டு போகப் போகிறார்களென நினைத்து நடுங்குகிறேன்.

“இங்கிட்டு இரு. பெரியவர் வரவாரு” சொல்லிக் கொண்டு அவர்கள் சென்று விடுகிறார்கள்.

என்னைச் சித்திரவதை செய்யப் போகிறார்கள் நீண்டகாலம் இந்த

முகாமில் தடுத்து வைத்திருக்கப் போகிறார். விசாரணை என்ற பெயரில் நாலாம் மாடிக்கு அனுப்பி வைக்கப் போகிறார்கள். பின்னர் சிறைக்குக் கொண்டு சென்று அடைத்து வைக்கப் போகிறார்கள். இவைகள் எல்லாம் நடக்கலாமென்று அஞ்சிஅஞ்சிச் செத்துக் கொண்டிருக்கிறேன்.

மதிய வேளை தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது.

பெரியவர் இன்னும் வந்து சேரவில்லை.

இராணுவவீரன் ஒருவன் சம்பாச்சோறும் பருப்புப் கறியும் மீன்குழம்புமாக ஒரு கோப்பையில் போட்டு எடுத்து வந்து எனக்குத் தருகிறான். பெரும்பாலான சைவர்கள் வெள்ளிக்கிழமைச் சைவங்கள் தான். இன்று நான் மீன் தின்பதில்லை என்று சொல்ல முடியுமா? எனக்கு என்ன நடக்கப் போகிறது என்பது அறியாமல் உயிருக்குப் பயந்து அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும் என்னால் உணவு உண்ணத் தான் முடியுமா? அல்லது வேண்டாமென்று நிராகரிக்கத்தான் இயலுமா? அந்த உணவை உண்பது போலப் பாசாங்கு செய்து மதிய உணவை ஒருவாறு முடிக்கிறேன்.

நடுப்பகல் தாண்டி மாலைப்பொழுது நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அவர்கள் சொல்லிப்போன பெரியவர் இன்னும் வந்து சேரவில்லை.

மாலைநேரத் தேநீரும் எனக்குக் கொண்டு வந்து தருகிறார்கள். நா வரண்டு, காய்ந்து போய்க்கிடக்கும் வயிற்றுக்கு அந்தத் தேநீர் தேவைப்படுகிறது. அதை வாங்கி மெல்லக் குடிக்கிறேன்.

பொழுது சிவந்து கிடக்கும் அடிவானத்துக்குள் விழுந்து கொண்டிருக்கிறது.

இராணுவவீரன் ஒருவன் நான் இருக்கும் அறைநோக்கி விரைவாக வருகிறான்.

"பெரியவர் வருகிறது" என்கிறான்.

நான் உட்கார்ந்திருக்கும் வாங்கில் இருந்து அச்சத்துடன் பட்டென்று எழுந்து நிற்கிறேன்.

என்னைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கும் இராணுவ வீரர்கள் இருவரும் பின்தொடரப் பெரியவர் வருகிறார்.

அவர் இராணுவ உடையில் இப்போது இருக்கவில்லை. சாதாரண உடையில் தான் அவர் வந்திருக்கிறார். மதிய உணவுக்குப் பிறகு படுத்து உறங்கி ஓய்வெடுத்த பின்னரே அவர் வந்திருக்கிறார் என்பதை அவரது முகம் சொல்லுகிறது.

தோற்றத்திலும் அவர் பெரியவராகவே இருக்கிறார். ஆறடிக்கும் அதிகமாக இருக்கும் அவரது உயரம். அதற்குத் தகுந்த பருத்த இறுக்கமான உடற்கட்டு, வீரியம் செறிந்த நிமிர்ந்த நடை. அவர் வந்து எனக்கெதிரிலுள்ள கதிரையில் கம்பீரமாக அமருகிறார். ஒருகாலைத் தூக்கி மடித்து

மற்றக்காலில் மேல் போட்டுக் கொள்ளுகிறார். இராணுவ வீரர்கள் மூவரும் அவருக்குப் பின்னே வரிசையாக நிற்கிறார்கள், அவர் என்னைப் பார்த்து "வா... இங்கிட்டு..." என அழைக்கிறார்.

நான் மெல்ல நகர்ந்து கைகளைக் கட்டியவாறு பலிக்கடாவாக அவர் முன் போய் நிற்கிறேன்.

அவர் கண்களை அகலத்திறந்து தலையில் இருந்து கால்வரை என்னை முறைத்துப் பார்க்கிறார். அந்தப் பார்வை படையினருக்கென்றே உரிய தனித்துவமானது. அந்த ஒரு பார்வையினாலேயே அவர் என்னை அளக்கிறார் என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.

நான் இதுவரை அவர் போன்ற முரட்டுத் தோற்றமுள்ள இன்னொரு மனிதனைக் கண்டதில்லை. அவரிடம் நான் கருணையை எதிர்பார்க்க இயலாது. கசாப்புக் கடைக்காரனிடம் ஜீவகாருணியத்தை எதிர்பார்ப்பது போலத்தான் அவர் எனக்குக் கருணை காட்டுவதாக இருக்கும்.

"நீ சப்போட்...?" அவர் என்னைப் பார்த்து முறைக்கிறார்.

"இல்லை ஐயா" நாத்தடுமாறி அழுகிறேன்.

"பொறு... பொறு... பொறு ஹியண்டஎப்பா... பொய் சொல்லுறது"

நான் மௌனமாக நிற்கிறேன்.

"அடோ... நீ பார்சல் குடுக்கிறது?"

"குடுத்தனான் ஐயா"

"ஏன்டா குடுத்தே நாயே!"

"எல்லாருங் குடுத்தாங்க"

"நீ ஏன்டா குடுத்தே!"

நான் பதில் சொல்ல அறியாது விழிக்கிறேன்.

"நீ இப்ப செஞ்சிக்கிட்டிருக்க வேலை எல்லாம் தெறியும். பொடியன் சேக்கிறே... உன்னை உள்ளே போடப் போறன்."

எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு மயக்கம் வருமாப் போலத் தோன்றுகிறது. கீழே நிலத்தில் விழுந்து விடுவேன் போலத் தோன்றுகிறது. சிரமப்பட்டுத் தளர்ந்து போய் நிற்கிறேன்.

"ஊரு எது?" அவர் தொடர்ந்து வினவுகிறார்.

நான் நடுங்கிக் கொண்டு மெல்லச் சொல்லுகிறேன்.

அவர் பார்வையிலும் முகத்திலும் இருந்தாற் போல சிறிய ஒரு மாற்றம்.

மீண்டும் கேட்கிறார்.

"ஊரு எது?"

நான் சொல்லுகிறேன்.

*“ஆ… வான்மதி தெரியுமா?” அவர் குரலில் முன்னர் இருந்த காரம் இப்போது குறைந்திருப்பதை நான் உணருகிறேன்.*

*ஆனால் நான் எதிர்பார்க்காத ஒரு கேள்வி. தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன, முழமென்ன என்ற நிலை எனக்கு. நான் எதையும் யோசிக்காது, “தெரியும்” என்கிறேன்.*

*“உங்கிட்டுச் சொந்தமா?” அடுத்த வினா.*

*எனது மூளையில் திடீரென்று மின்னல் அடித்தது போல ஒரு பொறிதட்டுகிறது. உடனே “ஓம்… சொந்தம்” என்கிறேன்.*

*அவர் உடனே முற்றாகக் குளிர்ந்து சாந்தமாகி விட்டாரென்பது அவர் முகம் சொல்லுகிறது.*

*“பயம் வேண்டாம்… என்னா சொந்தம்…?”*

*“தங்கச்சி…”*

*“நங்கி…? தங்கச்சி…? சறி.. சறி.. இனி எந்தக் குழப்பமும் வேணாம். ஒழுங்கா இருக்கோணும்” சொல்லிக் கொண்டு அருகில் நிற்கும் இராணுவீரர்களுக்குச் சிங்களத்தில் ஏதோ கூறுகிறார் பின்னர் அங்கிருந்து எழுந்து வெளியே நடக்கிறார்.*

*இராணுவ வீரர்கள் என்னை அழைத்துக் கொண்டு வந்து றக் வண்டியில் ஏற்றுகிறார்கள். எனது சயிக்கிளைத் தூக்கி வண்டிக்குள் பக்குவமாக சரித்து வைக்கிறார்கள்.*

*வண்டி முகாமில் இருந்து புறப்படுகிறது.*

*நான் வீடு நோக்கி வந்து கொண்டிருக்கிறேன்.*

ஜீவநதி - 90

# தோற்ற மயக்கங்கள்

*அவள் கோயில் அலைந்துலைந்து வெகுவாக நொந்து தளர்ந்து போனாள்.*

*அவளை வைத்திய நிபுணர்களிடம் அழைத்துக் கொண்டு அலைந்து திரிந்து நான் நன்றாகக் களைத்துப் போனேன்.*

*அவள் உடல் தளர்ந்ததும், நான் மனம் களைத்ததும் தான்... கண்ட மிச்சம். அதனால் எந்தப் பயனுமே இல்லை!*

*பிள்ளைகளுக்கு இது வேடிக்கை*

*"அப்பாவைக் கண்டால் அம்மாவுக்கு நோய் கூடிவிடும்" என்கிறார் அவர்கள்.*

*அவர்கள் வீண்பழி கூறவில்லை*

*ஆனால் அவள் நடிக்கிறாளென்றில்லை*

*அவள் சொல்வது அனைத்தையும் செவி கொடுத்துப் பொறுமையோடு கேட்டு, அவளுக்கு ஆறுதல் கூறுவது நான்தானே!*

*அதனால் எனக்குத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.*

*அவளுக்கு நன்றாகத்தெரியும், தான் கூறுவதை எல்லாம் செவிமடுத்துக்கொண்டு இருந்து விட்டு, சும்மா எழுந்து போய் விடமாட்டேனென்று.*

*ஒரு சமயம், "நெஞ்சு நோகுது" என்பாள், இன்னொரு சமயம் "தலை தூக்கேலாதாம், பாரமாக்கிடக்கு" என்று படுக்கையில் விழுந்து எழும்பாது கிடப்பாள். ஊதிப்பெருத்தவயிற்றை அடிக்கடி தடவிவிட்டுக்கொண்டு "வயிறு வலிக்குது" என்பாள். பாதங்களை மெல்ல மெல்ல வருடிக்கொண்டு, "கால் எரியுது" என்பாள். இந்த வேளைகளில், "இதெல்லாம் சூனிய வேலன் வீட்டான் செய்த வேலை" என வாய்விட்டு மெல்லப் புலம்புவதற்கும் அவள் தவறுவதில்லை.*

*அவள் பிள்ளைகளிடம் இரகசியம் போல மெல்ல முணு முணுப்பதுண்டு, "கொப்பாவுக்கு ஒண்டுந் தெரியாது. டாக்குத்தர் மாரிட்டை இழுத்துக்கொண்டு வீணா அலைகிறார்"*

*பிள்ளைகள் இரசித்துச்சிரிப்பார்கள். அப்பாவுக்கு ஒன்றும் தெரியாதல்லவா!*

*ஒரு தினம் அவளை அழைத்து முன்னால் இருக்க வைத்து பரிவுடன் வினவுகின்றேன் "இண்டைக்கு என்ன கிழமை?"*

*"இதென்ன புதினமான கேள்வி?" என்கிறாள்*

*"ஏன் அப்பிடிச்சொல்லுறாய்?"*

*"உங்களுக்கு வெள்ளியுந்தெரியாது சனியுந்தெரியாது... கோயிலுமில்லை... குளமுமில்லை..."*

*"அதெல்லாம் இருக்கட்டுமப்பா... கேட்டதுக்கு மறுமொழி சொல்லு...!"*

*"வெள்ளிக்கிழமை"*

*"இண்டைக்கு உன்ரை வருத்தங்கள் கொஞ்சஞ்கூடி இருக்கு! இல்லையா?"*

*"ஓமோம்... சாத்திரஞ் சொன்னது போல உண்மையைச் சொல்லுறியள்!"*

*"சாத்திரமெல்லாம் உண்மை" நான் வாயைத்திறந்து "ஹா...ஹா..." எனப் பலமாகச் சிரிக்கின்றேன்.*

*திடீரென அவள் முகம் மாறி வாடிப்போகிறாள்.*

*நான் அவள் வாட்டத்தைப்போக்க எண்ணி, "கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போகப்போறன்" என்கிறேன் சட்டென்று,*

*"எந்தக்கோயிலுக்கு?" என்கிறாள் குரலில் சுரத்தில்லாமல் அவள் முகத்தில் நான் எதிர்ப்பார்த்த மாற்றமெதுவுமில்லை.*

*"விறுமர் கோயிலுக்கு..."*

*அவள் சட்டென்று நிமிர்ந்து, முகம் மலர்ந்து, விழிகளை அகலத் திறந்து பார்வையை என் முகத்தில் ஆழமாகப் பதித்து, அதிசயத்துடன் வினவுகிறாள், "எங்கே...?"*

*அவள் மீண்டும் என் வாயினால் அதைக் கேட்க உறுதிப்படுத்த விரும்புகிறாள் என்பதை விளங்கிக்கொண்டு, "விறுமலர் கோயிலுக்கு" என்கிறேன் சிரித்தவண்ணம்.*

*"உண்மையாகவா...?" அவளால் நம்பமுடியவில்லை.*

*"பின்னேரம் வெளிக்கிடு. நான் கூட்டிக்கொண்டு போகிறேன்" சொல்லிக்கொண்டு அங்கிருந்து நான் எழுந்து விடுகிறேன்.*

*விறுமர் சிறிய ஒரு கொட்டிலில் கோயில் கொண்டிருக்கிறார். கோயில் பின்புறத்தில் அடிபருத்த மிகப்பெரிய ஒரு ஆலமரம். அதிக*

உயரமற்றது. அது எல்லாத்திசைகளிலும் கிளைகள் பரப்பி அடர்த்தியாகச் செழித்து நிலம் நோக்கித் தாழ்ந்து நிழல் கவிந்து அந்தச் சூழல் இருண்டு கிடக்கிறது. மரத்தின் அடியில் மூவிலைச் சூலம் நாட்டி சூலத்தின் கூர்முனியில் தேசிக்காய் ஒவ்வொன்று குத்தி விடப்பட்டிருக்கின்றது. அதில் சிவப்பு, மஞ்சள், பட்டுத் துண்டுகள் கட்டி விடப்பட்டிருக்கின்றன. திருநீறு, சந்தனம், குங்குமம் பூசப்பட்டிருக்கின்றது. சூலத்தின் அடியில் கற்பூரம் வைத்து எரிக்கும் கல் கறுத்துக்கிடக்கிறது.

கோயில் வாசலுக்கு எதிரில் இதுபோன்ற இன்னொரு சூலம்

கோயிலுக்குள்ளேயும் கர்ப்பக்கிரகத்தில் மூவிலைச் சூலம் வாசலில் பெரிய கற்பூரக்கல். அதன் அருகே பக்தர்கள் பயபக்தியுடன் தட்சணை போடும் உண்டியல்.

பூசாரியாக இருக்கும் சாமியார் நெடுதுயர்ந்த உருவம். தலை முடியை வளர்த்து உச்சியில் பெரிய குடுமி போட்டிருக்கிறார்; தாடி அடர்த்தியாக வளர்த்து நெஞ்சில் மூடிக்கிடக்கிறது. தலையிலும் தாடி யிலும் நரைமயிர்கள் அங்காங்கே வெள்ளிக்கம்பிளாக மின்னுகின்றன. சாமி நெற்றியிலும் உடலெங்கும் திருநீறு, சந்தனம், குங்குமம் அள்ளிப் பூசி இருக்கிறார். கழுத்தில் உருத்திராட்ச மாலை. கையில் சுற்றிக்கட்டி பல வண்ண இழைகள் எப்பொழுதும் போதை மயக்கம் கசியும் சிவந்த விழிகள்.

காண்பவர் உள்ளங்கள் கிலி கொள்ள வைக்கும் அந்த சூழலும் சாமியாரும் சாதாரணமாக அந்தப்பக்கம் யாரும் நடமாடுவதில்லை.

வெள்ளி, செவ்வாய் தினங்களில் சாமிக்குக் கலைவரும். அன்றைய தினங்களில் மாலை வேளைகளில் அருள் வந்து ஆடி சாமி கட்டுச் சொல்லுவார். வாழ்க்கையில் நொந்து நொடித்துப்போனவர்கள் கட்டுக் கேட்க, பயபக்தியுடன் அங்கு வந்து கூடுகிறார்கள்.

சாமியார் அடியார்களுடன் வாய் திறந்து அதிகம் பேசமாட்டார். அவருக்கு உதவியாக இருவர் இருக்கிறார்கள் சாமி கூறும் அருள் வாக்கை அடியவர்களுக்கு தெளிவுறு எடுத்து விளக்கும் தெய்வீகப் பணியைச் செய்கின்றவர்கள் அவர்கள்.

சாமி தலையில் நீர் வார்த்து ஈரத்துணியுடன் மூசி மூசி வேகமாகச் சிலிர்த்து வருகிறார். இனி வாய்திறந்து யாரோடும் பேசமாட்டார். கோயிலுக் குள்ளே புகுந்து ஒரு குடம் நீரை மூலவருக்கு ஊற்றுகிறார். திருநீறு, சந்தனம், குங்குமம் சார்த்தி, மலர்தூவி, கற்பூரம் கொளுத்தி, கண்களை மூடி கை களைக் குவித்து தியானித்துக்கொண்டு நிற்கிறார். பாற்சலம்பி சாம்பிராணிப் புகை குமைந்து குமைந்து எழும்பி மழை மேகம் போல எங்கும் பரவுகிறது. இந்தச் சமயம் பார்த்து அவருடைய உதவியாளர் ஒருவன் உடுக்கை எடுத்து அடிக்க ஆரம்பிக்கிறான். அசையாது தியானித்துக்கொண்டு நிற்கும் சாமி யாரில் மெல்ல அசைவாட்டம் ஆரம்பிக்கிறது. உடுக்கை ஒலி சிறிது சிறிதாக உயர்ந்து உச்சத்தில் முழங்குகின்றது. சாமியார் வேகங்கொண்டு ஆங்காரித்து ஆட ஆரம்பிக்கிறார். கோயிலுக்குள் வைக்கப்பட்டிருக்கும்

சாட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு பாய்ந்து குதித்துக்கொண்டு வெளியே வருகிறார். சாட்டையைச் சுழற்றிச் சுற்றி சுற்றி ஆடுகிறார். அடியார்கள் அச்சத்தினால் மருண்டு போய் நிற்கிறார்கள். சாட்டையைச் சுற்றி இரண்டொரு சாமி தனது உடலில் அடிக்கிறார். உதவியாளன் ஒருவன் விரைந்து ஒரு செம்பு நீர் சாமி தலையில் ஊற்றுகின்றான். மீண்டும் விழுகிறது சாட்டை அடி. தலையில் ஊற்றிய நீர், அந்த அடியில் தெறித்து துளியாகப் பறக்கிறது. சாட்டையை உதவியாளிடம் கொடுத்து விட்டு வாயை அகலத்திறந்து ஆ...ஆ... எனக்குரல் எழுப்புகிறார். உதவியாள் கற்பூரத்துண்டொன்றை கொளுத்தி அவர் நாவில் வைக்கிறான். வாயை சடாரென்று மூடி. எரிகிற கற்பூரத்தை அணைக்கிறார். பின்னர் ஆடிக் கொண்டு சென்று குழுமி நிற்கும் அடியார் கூட்டத்துள் ஒருவரை இழுத்து வந்து முன்னே நிறுத்தி சாமி கட்டுச் சொல்லுகிறார். உதவியாள் அருகே நின்று விளக்கிக் கூறுகிறார். இன்று அடியார்கள் மூவருக்குச் சாமி கட்டுச்சொல்லி முடித்துவிட்டார். திடீரென்று சரிந்து நிலத்தில் விழுகிறார்.

இன்று இதற்கு மேல் விறுமர் சாமி கட்டுச்சொல்லப்போவதில்லை.

சற்று நேரத்தின் பின் கண் விழித்து எழுந்து அமருகிறார். அவர் தேவை அறிந்து உதவியால் ஒரு செம்பு நிறைய குளிர்ந்த நீர் கொண்டு வந்து கொடுக்கிறார்.

அதனை வாங்கித் தண்ணீரை மடமடஎன்று குடித்து முடிக்கிறார். இது வரை நடந்தது எதுவும் அறியாதவர் போல மெல்ல எழுந்து திருநீற்றுத்தட்டைக் கையிலெடுக்கிறார்.

அடியார்களுக்குச் சிரசில் விபூதிபோட்டு, நெற்றியில் விபூதி தேய்த்து, வாய்க்குள் சிறிதளவு இட்டு கையிலும் வழங்குகிறார். உதவியாளன் ஒருவன் அவர் அருகே இன்னொரு விபூதித்தட்டுடன் நிற்கிறான். அவன் தட்டில் பக்தர்கள் நாணயங்கள் நோட்டுக்களாக பயபக்தியுடன் பணிந்து தட்சணைகள் அர்ப்பணிக்கிறார்கள்.

அவளை அழைத்து வந்து விட்டு, நான் சிறிது விலகியே நிற்கிறேன். விபூதி சந்தனம் வழங்கும் சமயம் அவளருகே வந்து நின்று அவற்றைப் பெற்றுக்கொள்கின்றேன்.

எனது நோக்கம் நிறைவேறுவதற்கு எனது செயற்பாடுகள் குந்தகமாக இருக்கக்கூடாதல்லவா?

சாமி அவளுக்கு ஒன்றுமே வாய்திறந்து சொல்லவில்லை.

எனக்குத் தெரியும் இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு தான் சாமி அவளுக்குக் கட்டுச் சொல்லுவார். இந்தக்கால இடைவெளியில் சகல தகவல்களும் சாமிக்கு வந்து சேர்ந்து விடும்.

அவளுக்குப் பெரிய ஏமாற்றம்.

"என்னப்பா... சாமி எனக்கொரு வாக்கும் சொல்லவில்லை" என்னிடம் வந்து குறைபட்டுக் கொள்ளுகிறாள்.

"கொஞ்ச நாள் போகட்டும்... சாமி சொல்லும்" அவளை ஆறுதல் படுத்தி, சயிக்கிளில் ஏற்றிக்கொண்டு புறுப்படுகிறேன்.

வெள்ளி, செவ்வாய் நாட்களில் காலை வேளைகளில் விறுமர் கோயிலுக்கு அவளை ஒழுங்காக அழைத்து வருவது எனக்கோ வேலையாய்ப்போச்சு.

பிள்ளைகள் என்னை அதிசயமாகப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

நான் அதனைக் கண்டு கொண்டவனாகக் காட்டிக்கொள்ள வில்லை.

மூன்று வாரங்கள் கழிந்த பிறகு நான் எதிர்ப்பார்த்தது போல விறுமர் சாமி அவளை அழைத்துக் கட்டுச்சொல்லிவிட்டார்.

உதவியாளன் ஒருவன் சாமியின் அருள் வாக்கை அவளுக்குத் தெளிவுபடுத்தினான்.

"பூமித்தகராறாம் சுடலை நாடனிலே சூனியம் செய்து உங்கடை வீட்டு வளவுக்குள்ள தாட்டிருக்கிறார்களாம்"

அவள் அங்கிருந்து புறப்பட்டு வரும்போதே புறு புறுத்துக் கொண்டு வந்தாள்.

"சூனிய வேலன்ரை மேன் எனக்குச்செய்வினை செய்து வைச்சு விட்டான் அவன் வேலியை அரக்கி அரக்கி எங்களுடைய காணி நிலத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்"

"அவன் குடியிருக்கிறதுக்கு இடம்போதாதப்பா..."

"அதுக்கு என்ரை சீதனக்காணியையே பிடிக்கிறது மூண்டு நேரமும் பனங்கொட்டை சூப்பி வயிறு வளத்த சாதி... சாமத்திலே உலைவைச்சு காய்சித்திண்ட ஆக்கள்"

"இஞ்சாரப்பா... உந்தப்பழங்கதையளை விட்டிட்டு... இப்ப அதுகள் நல்லாத்தானே இருக்குதுகள்..!"

"ஓ...ஓ... வெளிநாட்டுக்காசைக்கண்டவுடனே இப்ப பெரியாக் களாகிவிட்டினம். உவையின்ரை நாத்தமெல்லாம் எனக்குத் தெரியும். நாங்கள் பங்குனி எண்டு படுத்ததுமில்லை.... சித்திரை எண்டு சிறுத்தது மில்லை... எனக்கு வந்துதெண்டால்.."

"சரி...சரி... உந்தக்கதையளை விடு. நீ சுகப்படவேணும் செய்வினை எடுக்க வேணும்"

வீட்டு வளவுக்குள்ளே வைத்திருக்கும் செய்வினையை எடுப்பதற் குரிய காரியங்களில் நான் மும்முரமாக ஈடுபடத்தொடங்குகிறேன்.

ஒரு தினம் அவள் வெளியே சென்ற சமயம் எனது பிள்ளைகள் மெல்ல வந்து என்னைச் சூழ்ந்து பார்த்து கொள்ளுகிறார்கள்.

மகள் தான் முதலில் கதையை ஆரம்பிக்கிறாள்.

“என்னப்பா இதெல்லாம்…?”

“எதைக்கேட்கிறாய் பிள்ளை..?”

“அப்பா, உங்களை நினைத்து நாங்கள் எவ்வளவு பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறம். முற்போக்காகச் சிந்தித்துச் செயற்படும் அறிவாளி அப்பாவின்ரை பிள்ளைகள் நாங்கள்”

“அது சரி… நான் இப்ப என்ன தவறு செய்து போட்டேன்?” விளங்காதவன் போல் வினவுகிறேன்

“அப்பா… நீங்களும் சேர்ந்து செய்வினை சூனியமெண்டு அலைகிறியளே…! அதை நம்பிறியளா..?”

“இல்லை நான் நம்பவில்லை நம்புறவர்கள் இருக்கிறார்கள் அம்மா நம்புகிறா அது உளப்பிரச்சினை அம்மா நம்பிக்கை தவறாதெண்டு எப்பிடி முயன்றும் அதை அவவுக்கு உணர்த்த முடியாது. நம்புகிறவர்கள் என்றுமே ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவர்கள் வழியில் சென்றே அவர்களைச் சுகப்படுத்த வேணும். நம்பிக்கை தான் வாழ்க்கை அது தான் ”

நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன் வெளியே சென்ற அவள் திரும்பி வந்து கொண்டு “அப்பாவும் பிள்ளையளும் என்ன மகாநாடு கூடி மந்திராலோசனை நடத்துறியள்?” வினவிக்கொண்டே உள்ளே வருகிறாள்.

“நாளைக்கு விறுமர்ச்சாமி வாறாரெல்லோ! அது தான்… சொல்லுறன்” கதை நீளாமல் முடித்துவிட்டு எழுகிறேன்.

இரவு எனக்கு நித்திரை வரவில்லை என்னை நினைத்து நானே நகைத்துக்கொள்கிறேன். நானும் ஒரு வேடிக்கை மனிதன் தானா? பாரதியார் பாடியது போல நான் வீழ்ந்து விடுவேனா? என்னையே நான் வினவிக் கொண்டு படுக்கையில் புரண்டு புரண்டு கிடக்கிறேன்.

நடு இரவு தாண்டி இருக்கும் வெகுதூரத்தில் ஒரு கூக்குரல் “கூஊஉஉஉ…” என எழுகின்றது. வித்தியாசமான குரல் மனிதக்குரலாக இல்லை. மெல்ல ஆரம்பித்து பின்னர் குரல் கொஞ்சும் கொஞ்சமாக உயர்ந்து உச்சஸ்தாயியைத் தொட்டு நீண்ட நேரம் ஒலித்த பிறகு சிறிது சிறிதாகத் தணிந்து இறுதியில் தொனி அடங்கிப்போகிறது. முறையான பயிற்சி இல்லாமல் இப்படி யாராலும் குரல் எழுப்ப இயலாது. அது மனிதக்குரல் போலவே இல்லை. வெகு வித்தியாசமான குரல்.

நான் அடுத்த குரலை எதிர்ப்பார்த்து செவிகளைக் கூர்ந்து கிடக்கிறேன்.

சிறிது நேரத்தின் பின்னர் திரும்பவும் அதே குரல் ஆனால் சற்று அண்மையில் எழுகிறது.

எனக்குள் ஆர்வம் அதிகரிக்கிறது.

படுக்கையில் இருந்து மெல்ல எழுந்து உட்காருகிறேன்.

மீண்டும் அதே குரல் எங்கள் வீட்டுக்கு வெகு அண்மையில் ஒலிக்கிறது.

அதனைத் தொடர்ந்து எங்கள் வீட்டுக்கேற்றில் பலமாகஒரு அடி விழுகிறது.

நான் “லயிற்ரை“க் கையில் எடுத்துக்கொண்டு எழுகிறேன்.

அப்ப, மகளுக்கருகே படுத்துக்கிடந்த அவள், விழுந்தடித்துக் கொண்டு ஓடிவருகிறாள்.

அஞ்சி அஞ்சி அவள் பதறி நடுங்குகிறாள். உடல் முழுவதும் வியர்த்துக்கொட்டுகிறது வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவர இயலாது நா தடுமாறுகிறது. வெளியே போக முயன்ற என் கரத்தை இறுகப்பற்றிப் பிடித்துத்தடுக்கிறாள்.

நான் திரும்பவும் அமருகிறேன். மௌனமாக அவளை விழித்துப் பார்க்கிறேன்.

கொஞ்ச நேர அவகாசத்தில் அவள் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளுகிறாள். முன்தானைச் சேலையை இழுத்து முகத்தை அழுத்தித் துடைக்கிறாள். மெல்லிய குரலில் இரகசியம் போல மெதுவாகக் கூறு கிறாள், “சாமியார் அண்டைக்குச் சொன்னவரெல்லே! நான் மந்திர உச்சாடனம் பண்ணத் துடங்கி விட்டேன். காடு கலைஞ்சு போச்சு உங்களுக்கும் அறிகுறி காட்டும் பயப்பட வேண்டாம் எண்டு”

“ஓமப்பா... நான் மறந்து போனேன் நீ போய் படு”

“இல்லை நான் இதிலே படுக்கப்போகிறன்” என்று முன்தானையை விரித்து கையை மடித்துத் தலைக்குக் கீழ் தலையணையாக வைத்து படுத்துக்கொள்கிறாள்.

ஒரு பெண்ணுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தாலென்ன! அவளுடைய பலமும் உற்ற துணையும் கைப்பிடித்த கணவன் தான் என்பதை ஒவ்வொரு கணமும் அவள் எனக்கு உணர்த்திக்கொண்டிருக்கிறாள்

வெள்ளி இரவு ஒன்பது மணியின் பின்னர் சாமி உதவியாளர் இருவருடனும் எங்கள் இல்லம் வந்து சேருகிறார். அவர் தந்த பட்டியின் படி கும்பச் சாமான்கள், பெரிய நீற்றுக்காய்கள், இரண்டு இளநீர் இரண்டு பெரிய சேவல் ஒன்று, இரண்டு போத்தல் விசேட சாராயம் எல்லாம் தயாராக வைத்திருந்தேன். பொருத்தம் பேசியது போல குறித்த தொகைப் பணம், சாமி குறிப்பிட்ட உதவியாளன் ஒருவன் கையில் முன்கூட்டியே கொடுத்து விட்டேன்.

சாமி இட்ட கட்டளையின் படி வீட்டுவாசலில் உதவியாட்கள் கும்பம் வைத்து முடிக்கிறார்கள்.

இவளை அழைத்து அந்தக் கும்பத்துக்கு முன் உட்கார வைக்கிறார். ஒரு செம்பு தண்ணீரை அவள் தலையில் ஊற்றுகிறார். தனது தலையிலும் ஒரு செம்பு தண்ணீரை ஊற்றிக்கொள்ளுகிறார்.

அவள் கும்பத்தின் முன்னே கைகுவித்துக் கும்பிட்ட வண்ணம் இருக்கிறாள்.

உதவியாளர்கள் சாமியின் கட்டளைகளை எதிர்ப்பார்த்து கைகட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

பிள்ளைகள் அங்கு வரக்கூடாதென்று கண்டிப்பாக முன்னெச் சரிக்கையான உத்திரவிட்டிருக்கிறார் சாமி. தாயை விட்டிறங்கி அவர் களைப் பிசாசு பிடித்துவிடுமாம்!

எனக்கு மாத்திரம் கொஞ்சம் தூர விலகி அங்கு நிற்பதற்கான அனுமதி சாமி வழங்கி இருக்கிறார்.

நான் அனைத்தையும் விழிப்புடன் அவதானித்துக்கொண்டு அருகில் நிற்கிறேன்.

சாமியார் மந்திர உச்சாடனம் செய்கிறார். குத்துவிளக்கு, கற்பூரம் எரிந்து கொண்டிருக்கிறது. பாற்சாம்பிராணிப்புகை குமைந்து குமைந்து எங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. அவள் சுவாசிக்க இயலாது மூச்சுத்திணறிக்கொண்டிருப்பது பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

உதவியாளன் ஒருவன் கற்பூரம் அணையாதவாறு தொடர்ந்து எரித்துக்கொண்டிருக்கிறான்.

மற்றொருவன் பாற் சாம்பிராணித்தூளை அள்ளி அள்ளிப்போட்டு புகையை எழுப்பிக்கொண்டிருக்கிறான்.

இவர்கள் வரும் போது உடுக்கை கையில் தூக்கிக்கொண்டு வருவதைத் தவிர்த்துக்கொண்டது எனது மனதுக்கு நல்ல திருப்தி. உடுக்கை ஒலி கேட்டு அருகில் குடி இருக்கிறவர்களின் சிரங்கள் எங்கள் வீட்டு மதிலுக்குமேல் உதயமாகியிருக்கும்.

மந்திர உச்சாடனத்துக்கிடையே, “ஒடிவாரும் விறுமர் ஐயா ஓடிவாரும்... இந்தப் பூமரத்தைப் பிடித்திருக்கும் கெட்ட பிசாசை ஓட்ட . ஓடி வாரும்...சாமி ஓடி வாரும்” என அதகையும் மந்திர போல ஜெபித்துக்கொண்டிருக்கிறார்.

நீண்ட நேரத்தின் பின்னர் இன்னொரு செம்புநீரை உதவியாள் அவர் தலையில் ஊற்றுகிறார்.

சாமி சீறிக்கொண்டெழுந்து வளைந்து நெளிந்து ஆக்கிரோசமாக குதித்துக் குதித்து ஆடுகிறார். பின்னர் கையோடு கொண்டு வந்திருக்கும் பிரம்பைக் கையில் எடுத்து, வீட்டு வாசலில் ஒரு வட்டமிடுகிறார். மண் வெட்டியால் அந்த இடத்தை வெட்டிக்கிடங்கு தோண்டுமாறு சமிக்கை செய்கிறார்.

உதவியாட்கள் வெட்டி வெட்டி எடுக்கிறார்கள். கிடங்கு தாழ்ந்து கொண்டு போகிறது.

சாமி அந்தக் கிடங்கைச் சுற்றி குனிந்து நிமிர்ந்து ஆடுகிறார்

பின்னர் என்னை அழைத்து அந்தக்கிடக்குள்ளே கைவைத்துத் தேடும்படி பணிக்கிறார்.

நான் கிடங்கருகே சென்று முழந்தாளில் நின்று தலை குனிந்து

*உள்ளே கைவிட்டு மண்ணுக்குள் தோண்டி செப்புத்தகடொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு நிமிருகின்றேன். ஆறுமூலை யந்திரம் கீறிய செப்புத் தகடு. அந்தத் தகட்டை அவள் கண்களில் படுமாறு தூக்கிக்காட்டுகின்றேன்.*

*அவள் முகம் வியப்பினால் விரிந்து, மகிழ்ச்சியினால் மலருகிறது.*

*நான் மிக நிதானமாக யாவையும் அவதானித்துக்கொண்டவன்*

*சாமியால் என் கண்களைக் கட்ட முடியவில்லை.*

*சாமி சுழன்று சுழன்று ஆடி வருகையில் மிகச் சாதுரியமாக அந்தத் தகடு அந்தக்கிடங்கினுள் அவர் சாத்தியமாகக் கைநழுவவிட்டது நான் அறியமாட்டேன் என்றே எண்ணுகிறார்.*

*செய்வினைத்தகட்டைக் கும்பத்துக்கு முன் வைக்கிறார்.*

*சேவலைப் பிடித்து அதன் சூட்டை வெட்டி இரத்தத்துளிகளைக் கிடங்கினுள் சிந்துகிறார். சாராயப்போத்தலைத் திறந்து வெகு ஒறுப்பாக மூன்று துளிகள் ஊற்றுகிறார். கற்பூரத்தைக் கொளுத்தி கிடங்கினுள் எரிய வைக்கிறார். கையினால் மண்ணை அள்ளி மூன்று தடவைகள் மந்திரம் ஜெபித்து கிடங்கினுள் எறிகிறார்.*

*உதவியாளர்கள் மண்வெட்டியினால் மண்ணை வாரி கிடங்கை நிரப்புகிறார்.*

*சாமி கும்பத்தின் முன்னமர்ந்து கற்பூரம் கொளுத்தி வைத்து மந்திரம் ஜெபித்து அவளுக்குத் திருநீறு போடுகிறார்.*

*தடியொன்றில் வெள்ளைத் துணி சுற்றி தேங்காய் நெய் தோய்த்து ஒரு நீற்றுக்காயில் செருகி தயாராக வைத்திருக்கும் பந்தத்தைக்கொளுத்தித் தூண்டுகிறார். இன்னொரு நீற்றுக்காயைக் கையில் எடுத்துக் கொண்டு, வெட்டிளநீர் ஒன்றுடன், பழையபெட்டி ஒன்றில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பூக்கள், கற்பூரம், குங்குமம், வாழையிலை முதலியவையுடன் புறப்படுகிறார்கள்.*

*சாமியின் கையில் பெரிய வெட்டுக்கத்தி ஒன்று.*

*சேவல், சாராயப்போத்தல் கையோடு தூக்குகிறார்கள்.*

*சற்றுத் தூரவுள்ள ஒரு சந்திக்குகொண்டு சென்று அங்கு வைத்துக் கழித்துவிட்டு, நேரே சுடலைக்குப்போய் சூனியத்தகட்டைப் புதைத்து விட்டு சாமியார் திரும்பி விடுவாராம்*

*நான் அவர்களுடன் சேர்ந்து செல்வதற்குத் தயாராகப் புறப் படுகிறேன்.*

*“வேண்டாம், பிசாசு உங்களோடை கூடி திரும்பவும் வீட்டுக்கு வந்து விடும்” என்று தடுக்கிறார்கள்.*

*அவளுக்குக் காவல் நூல் கட்ட வேணுமாம்! செவ்வாய் வருமாறு கூறிவிட்டுப்புறப்பட்டுப் போகிறார்கள்.*

*இதன் பிறகு நான் அவளைத் தினமும் அவதானித்துக் கொண்டி*

ருக்கிறேன். அவள் தனக்கு நோய் இருப்பதாக இப்போது புலம்புவதில்லை. நல்ல ஆரோக்கியமாக இருக்கிறாள். பழைய நிலைக்கு அவள் மீண்டு வந்து விட்டாள். அவள் சுறுசுறுப்பாக இயங்குகிறாள்

எனக்குப் பூரணமான நிறைவு ஒரு மாத காலத்தின் பின்னர் பிள்ளைகளிடம் மெல்ல விசாரிக்கிறேன்: "அம்மா இப்ப எப்படி இருக்கிறா?"

"நல்ல சுகமாக இருக்கிறா, ஒரு நோயுமில்லை"

"நான் வென்று விட்டேன்" என்கிறேன் பெருமையாக

அப்போது "இல்லை, உங்களைத் தோற்றுவிட்டீர்கள்" என்கிறார்கள் அவர்கள் கவலையோடு.

ஜீவநதி -106

# நோயாளி

ஒரு மாலைப்பொழுதில் நான் ஓய்வாக இருந்த சமயம் அவர் என்னைத் தேடிக்கொண்டு வீடு வந்து சேருகிறார்.

முன்னர் வீடு தேடி அவர் என்னிடம் வந்தவரில்லை. என்னை மாத்திரமன்று, என்போன்ற சிலரை தனது தேவையின் பொருட்டு தேடிச்சென்று சந்தித்துக்கொண்டு வருகிறார் என்பது நான் அறிவேன். அது தவறானதென்றும் சொல்ல முடியாது.

மனித இயல்பே இப்படித்தான் தேர்தலில் போட்டி யிடும் அபேட்சகர் போன்று மனிதன் வாழ முற்படுகிறான். எங்கும் போட்டி எதிலும் போட்டி, வாழ்வென்னும் மரத னோட்டத்தில் தனக்கு முதலிடம் கிடைக்க வேண்டு மென்றும் வேணவாவுடன் ஓடிக்கொண்டிருக்கிறான்.

மனிதன் திறந்து காட்டாததது மனது தான். வெகு பக்குவமாக அதை மூடி வைத்துக்கொண்டு தனக்கு முன்னே ஓடிக்கொண்டிருக்கிறவனை முந்திவிட வேண்டும் என்னும் வெறியுடன் ஓடிச்சென்று கொண்டிருக்கிறான்.

வந்திருக்கிறவரும் ஓட ஆரம்பித்துவிட்டார்.

தனது ஓட்டத்துக்கு உதவியாக இருக்கத் தகுந்தவர் களின் அனுசரனை தேடித்திரிந்து கொண்டிருக்கிறார்.

ஒரு வாக்கை எனக்குப் போடுங்களெனக் கோரிக்கை விடுப்பது, இந்த நாட்டில் இப்போது நடை முறையில் இருந்து வரும் நாடாளுமன்றத்தேர்தல். தவறல்லவே!

வந்தவர் சிறிது நேரம் பலதும்பத்துமாக என்னுடன் உரையாடிக்கொண்டிருக்கிறார்.

இடையில் எனது மனைவி முன்மண்டபக் கதவைமெல்லத் திறந்து தலை காட்டுகிறாள்.

மனைவியின் பிரசன்னத்தை நான் விளங்கிக்

கொள்கிறேன்.

வீடு தேடி வந்திருக்கின்றவரை உபசரிக்க வேண்டுமல்லவா?

முன்னர் ஒரு காலத்தில் வெற்றிலை போடக்கொடுத்து உபசரிப்பார்கள் இப்ப அந்த வழக்கம் இல்லாது போயிற்று. வெற்றிலை சப்பும் பழக்கமும் வெகுவாக அருகிப்போயிற்று.

ஆகக் குறைந்தது ஒரு தேநீர் கொடுப்பது இன்று பின்பற்றப்படும் வாழ்க்கை முறை.

எனது மனைவி இந்த விஷயத்தில் மிகக் கவனம்

கதைச் சுவாரசியத்தில் வந்தவருக்கொரு தேநீர் கொடுப்பதில் நான் கவனம் இல்லாது இருந்துவிட்டால் பின்னர் அவள் என்னைக் குறைபட்டுக்கொள்ளுவாள்.

சிலர் தேநீர் பெரும்பாலும் பருகமாட்டார்கள்.

தண்ணீர் மாத்திரம் கேட்டு வாங்கிக்குடிப்பார்கள்.

எனக்குத் தெரியும் அவர்கள் நீரிழிவு நோயாளிகள்

வந்திருக்கிறவரிடம் மெல்ல நான் வினவுகிறேன்

“என்ன குடிக்கப்போகிறியள்?”

எங்கள் மூத்த பரம்பரையை அவமதித்து போத்தலில் ஒரு காலத்தில் குடிக்கத்தந்தவர்கள்

இன்று தங்கள் சமூக மேன்மையைக் கைவிடாது நிறுவ எண்ணி தாங்கள் போத்தலில் குடிக்கிறவர்கள்

“தேநீர் குடிப்போம்” என்கிறார்.

மனைவி உள்ளே சென்று தேநீர் தயாரித்து வந்து அவருக்கும் எனக்கும் பக்குவமாக வழங்கிவிட்டு திரும்பி உள்ளே செல்கிறாள்.

விருந்தினர்கள் வீட்டுக்கு வந்தால், அவர்களுடன் சேர்ந்திருந்து தேநீர் பருகுவது எனது வழக்கம்.

அவள் தயாரிக்கும் தேநீருக்குத் தனிச்சுவை.

நுரைக்க நுரைக்க அடிச்சாற்றுவாள் சுவையே.

தேநீரைத் சுவைத்து, அனுபவித்து கொஞ்சங் கொஞ்சமாக நான் பருகுகிறேன்.

அவருக்கு எப்படி இருந்ததோ எனக்குத் தெரியாது

தேநீர் அருந்திய பின்னரும் சிறிது நேரம் அமர்ந்திருந்து என்னோடு உரையாடுகிறார். பிறகு விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுச்செல்கிறார்.

ஆறுமாத காலம் விரைந்தோடிக்குழிந்து போகிறது.

மீண்டும் ஒரு மாலை வேளை அவர் என்னை நாடி வருகிறார்.

இந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் அவர் ஓட்டத்தில் சிறிது முன்னேறிக்கொண்டிருக்கிறார்.

அவர் எதிர்ப்பார்த்த உதவிகள் சிலவற்றை நான் செய்திருக்கிறேன்.

இன்னும் சில உதவிகளைக்கோருவதற்கே அவர் வந்திருக்கிறார் என்பதை நான் விளங்கிக்கொள்ளுகிறேன்.

எனது வீட்டு முன்மண்டபத்தில் இருவரும் எதிரெதிரே அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம்.

எங்கள் உரையாடலுக்கிடையே நான் உள்ளே பார்த்து "ரீ கொண்டு வாங்கோ!" என மனைவிக்குக் குரல் கொடுக்கிறேன்.

எனது குரல் அடங்குவதற்குள். அவர் இடைமறித்து, "ஐயையோ... வேண்டாம் அண்டைக்கு குடிச்சனான் தானே" எனத் தடுக்கிறார்.

சட்டென்று எனக்குள் ஒரு குரல் சீறி எழுகிறது

"அண்டைக்கேன் குடிச்ச நீ?" கேட்கவேண்டுமென

அவரைப் பார்த்து நான் கேட்டிருக்கலாம்

அப்படி நான் கேட்கவில்லை

அப்படி நான் கேட்பதற்கு..

அவர் போன்ற ஒரு நோயாளி அல்ல நான்.

ஜீவநதி -106

# பூவும் பொட்டும்

*பக்கத்து வீட்டுப்பாட்டியை நீண்ட காலமாக நான் கூர்ந்து அவதானித்து வருகிறேன்.*

*பாட்டி சற்று வித்தியாசமான ஒரு பெண். எனக்கு இரண்டு தலைமுறைக்கு மூத்தவர். எனது அம்மாவுக்குத் தாய் போன்றவர். என்னையும் தனது பேரப்பிள்ளைகளுள் ஒன்றாகக் கருதுகிறவர்.*

*பாட்டியிடம் மூத்த தலைமைக்கு இருக்கும் விசேடமான நடைமுறைகள், குணவியல்புகள் பலவுண்டு.*

*பாட்டியைத் தினமும் காலையில் பார்த்தால் கழுத்தில் தங்கத்தாலி அணிந்து நெற்றியில் குங்குமப் பொட்டிட்டு குடுமியில் பூச்சூடி பளிச்சென்று தோன்று வார். தாலி அணிந்து கொள்வது எனக்கு அதிசயமாகத் தோன்றவில்லை. பெண்கள் பலருக்கு அது ஒரு ஆபரணம். ஆனால் நெற்றியில் குங்கமப் பொட்டிட்டு கொண்டையில் பூச்சூடி காலை நேரம் தோன்றும் பெண்களை இந்தப் பகுதியில் காண்பது அரிது.*

*பாட்டியின் இந்த வாழ்க்கை முறையை கவனித்து வந்த நான் ஒருதினம் பாட்டியிடமே இது பற்றிக் கேட்டு விட்டேன்.*

*"பாட்டி படுக்கை விட்டு எழுந்தவுடன் அதிகாலை யிலேயே பொட்டு வைத்து பூவும் வைத்து விடுகிறியள்"*

*"அதுபிள்ளை வாழ்வாடிச்சிகுரியதெணை"*

*"வாழ்வாடிச்சி எண்டால் என்னெணை?"*

*அறிந்து கொண்டு அறியாதவள் போலக் கேட்கிறேன்.*

*"அதடியாச்சி புருஷனுள்ள பெண்கள்"*

*"புருஷனுள்ளவை பொட்டு வைச்சுப் பூவைக்க வேணுமே?"*

*"இதென்ன கேள்வி! நீங்கள் நவீன பெண்டுகள்"*

*"இதெல்லாம் சமுதாயம் பெண்களுக்கு விதித்து*

வைச்ச கட்டுப்பாடுதானே!"

பாட்டி அடிப்படையான கல்வி அறிவு கொஞ்சம் உள்ளவர். எனது சந்தேகத்தைக் கேட்டு பாட்டி சிறிது விளக்கமாகப் பேச ஆரம்பித்து விட்டார்.

"பிள்ளை இதெல்லாம் ஒரு காலகட்டத்தில் சமுதாயம் பெண் களுக்கு விதித்த கட்டுப்பாடுதான். உனக்குத் தெரியுமா? கணவன் இறந்து போனால், மனைவி கணவனை வைத்து எரிக்கும் சிதையில் விழுந்து தனது உயிரையும் மாய்த்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இருந்திருக் கிறது. அதை உடன் கட்டை ஏறுதல் எண்டு சொன்னார்கள்."

"மனைவி தானே விரும்பி உடன்கட்டை ஏறி இருப்பாளா?"

"ஆர்பிள்ளை அப்பிடித் துணிந்து உயிரை மாய்த்திருப்பார்கள்? எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தூக்கிப் போட்டு அவளையும் எரித்திருப்பார்கள்"

"இது பெரிய கொடுமை பாட்டி"

கணவன் இறந்தபிறகு மனைவியானவள் நெற்றியில் குங்கமப் பொட்டு வைக்கக்கூடாது கொண்டையில் பூச்சூடக்கூடாதென்பது நடைமுறை விதிபிள்ளை. தமிழ்நாட்டுப் பெண்கள், வாழ்வாடிச்சி யாக இருக்கிறவர்கள் இவைகளில் வெகுகவனம்"

"பொட்டு வைத்துப் பூச்சூடுகிறதிலே என்ன பாட்டி இருக்கு?"

"கணவனுள்ள பெண்ணுக்கு அதிலொரு மனநிறைவு இருக்கிறது. அதைநான் பூரணமாக உணருகிறேன். கணவன்தானே ஒரு பெண்ணுக்குரிய பலம். பலவகையிலும் ஒரு பாதுகாப்பு"

"பாட்டிக்குத்தானே பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லாரும் இருக்கிறார்கள்?"

"ஆர் இருந்துமென்ன? அவர் இருக்கிறது போல எனக்கு எந்தப் பலமுமில்லை. கணவனை இழந்த பெண்கள் வெள்ளைச்சேலை உடுக்க வேண்டும். நன்மைக்காரியங்களுக்கு முன்னுக்கு விடமாட்டார்கள். சில சமூகங்களில் தலைமொட்டை அடித்து வீட்டுக்குள்ளே முடக்கி விடுகிறார்கள்"

"எல்லாம் சரி பாட்டி... உங்களிட்டை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். பாட்டி என்னைக் கோபிக்கக் கூடாது"

"நான் எப்பவடி அம்மா கோபிச்சிருக்கிறேன்! நீயும் என்ரை பேரப்பிள்ளைகளில் ஒண்டுதான். என்ன வெண்டாலும் கேள்"

"பாட்டா சில நேரம் சீறி விழுகிறாரெல்லோ! அப்ப நீங்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விடுகிறியள். பிறகு பார்த்தால் ஒண்டும் நடக்காதது போல வந்து பேசுறியள். எனக்கு ஆச்சரியமாக இருக்கு"

"அவர் கொஞ்சம் கொதியன். ஆனால் நல்லவர். அதை விளங்கிக் கொண்டு நடக்க வேண்டியது என்ரை கடமைதானே!"

பாட்டா கடுமையான நோய்க்கு உள்ளாகி யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் இரண்டு வாரங்கள் கிடந்தார். பாட்டி அதிகாலையில் எழுந்து மதிய உணவும் சமைத்தெடுத்துக் கொண்டு, இங்கிருந்து இருபத்தைந்து கீலோமீற்றர் பஸ் வண்டியில் பிரயாணம் செய்து பாட்டாவைப் பார்த்து விட்டு வருவார்.

அப்பொழுதும் நான் அவதானித்துப் பார்த்திருக்கிறேன் நெற்றியில் குங்குமப்பொட்டிட்டு கொண்டையில் பூச்சூடிக் கொண்டுதான் சென்று வருவார்.

அப்பொழுது பெரிய மனத்துயரத்துடன் தான் பாட்டி திரிந்து கொண்டிருந்தார் என்பது எனக்குத் தெரியும். ஆனால் பூவும் பொட்டும் என்றும் பளிச் சென்று தெரியும்.

பாட்டி வாழ்வாடிச்சியல்லவா!

அண்மையில் பாட்டியின் அண்ணன் கடுமையான நோய்க்கு ஆளாகி வைத்தியசாலையில் கிடந்தார். பாட்டியும் பாட்டாவும் ஒரு ஆட்டோவில் பயணித்து அவரைப் பார்வையிட்டு வந்தார்கள். அப்பொழுதும் பொட்டோடும் பூவோடும் தான் போனார்.

அண்ணனுக்கு நோயென்று பாட்டிக்கு மனதில் ஆறாத துயரம்.

இந்தப் பாட்டி சில நாட்களுக்கு பிறகு நெற்றியில் பொட்டிடு வதையும் குடுமியில் பூச்சூடுவதையும் கைவிட்டு விட்டார்.

நான் பாட்டியின் நடவடிக்கையை அவதானித்து எனக்குள்ளே விளங்கிக் கொண்டேன்.

சில நாட்கள் பாட்டியின் கோபம் இவ்வாறே கழிந்தது.

ஒரு நாட்காலையில் பாட்டி பழையபடி நெற்றியில் குங்குமத் திலகமிட்டு, குடுமியில் பூச்சூடிக் காட்சி அளிக்கிறார்.

பாட்டியின் அண்ணன் காலமாகி அந்தியேட்டி முடிந்து மறுதினந்தான் பாட்டி பழையபடி இவ்வாறு தோன்றுகிறார்.

ஜீவநதி - 112

# இங்கிலிஸ் வாத்தியார்

*ஆங்கிலப் பத்திரிகை ஒன்றைக் கையில் தூக்கிப் பிடித்துப் பார்த்த வண்ணம் வீட்டு மாலுக்குள் சாய்மனைக் கட்டிலில் வசதியாகச் சாய்ந்து படுத்துக் கொண்டிருக்கிறார் சோமு வாத்தியார்.*

*சோமு வாத்தியாரை அந்தக் கிராமத்திலும் அதன் சுற்றி வட்டாரத்திலுமுள்ள அயற் கிராமங்களிலும் அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அயற்கிராமங் களுக்கு அப்பாலும் அறியப்பட்டர் அவர். அந்தக் கிராமத்தில் வாழும் சின்னக் குழந்தையிடம் விசாரித்தாலும் சோமு வாத்தியாரை இனங் காட்டத் தவற மாட்டாது. சோமசுந்தரம் வாத்தியார் என்று பெரியவர்களிடம் விசாரித்தாலும் ஒரு செக்கன் யோசித்துத்தான் விடை சொல்லுவார்கள். சோமு வாத்தியார் என்றால் பட்டென்று ஆளைச் சொல்லி விடுவார்கள். சோமு வாத்தியாருக்குப் பெற்றோர் சூட்டிய திருநாமம் சோமசுந்தரம். அந்தப் பெயர் இன்று மறைந்து போயிற்று. ஆனால் வாத்தியாரை அறியா தவர்கள் இல்லை எனலாம். அவருக்கும் சோமசுந்தரத்தை சோமுவாகச் சுருக்கி வாத்தியாரை இணைத்து "சோமு வாத்தியார்" என்று எல்வோரும் அழைப்பதில் மனம் நிறைந்த பெரிய ஆனந்தம்.*

*அவருக்குச் சின்ன ஒரு மனக்குறை. தான் என்ன தமிழ் வாத்தியாரே! ஆங்கிலம் அறிந்தவர். அப்படிஇருக்க, எப்படி இவர்கள் வாத்தியார் என்று அழைக்கலாம்! எல்லோரும் என்னைச் "ஸேர்" என்றே அழைக்க வேண்டும் என்பதே அவர் உள்ளத்துள் கரந்துள்ள உணர்வு பூர்வமான எண்ணம்.*

*கிராமத்துச் சனங்களுக்கு வாத்தியாருக்கும் சேருக்கும் இடையேயுள்ள வித்தியாசம் எங்கே தெரியப் போகிறது? "பாவம்... அவர்கள் இங்கிலிஸ் தெரியாதவர் கள்" என வாத்தியார் பெரிய மனத்துடன் அவர்களை*

மன்னித்து விடுவார்.

வீட்டு வெளிக் "கேற்" மெல்லத் திறக்கிறது. அந்தச் சத்தங் கேட்டு, பார்த்துக் கொண்டிருக்கும் பத்திரிகையை விலக்கி கேற்றைப் பார்க்கிறார் வாத்தியார்.

தரகர் தங்கத்துரை "கேற்"றை திறந்து உள்ளே வந்து கொண்டிருக் கிறார். வாத்தியார் படித்துக் கொண்டிருக்கும் பத்திரிகையை மடித்துக் கீழே போட்டு விட்டு, "வா... மச்சான்... வா...!" என வரவேற்கின்றார்.

தனக்கெதிரேயுள்ள கதிரையைக் கையால் சுட்டிக் காட்டி, "அதிலே இரு மச்சான்" என்கிறார்.

தரகர் தங்கத்துரை கதிரையில் அமர்ந்த பின்னர், இங்கிலிஸ் பேப்பரில் என்று ஆரம்பித்து ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து முடித்து தமிழ் பத்திரிகைகளை கையாலும் தொடுவதில்லை என்கிறார். பிறகு, "என்ன மச்சான்... புதிசா எதுகும் கொண்டு வந்திருக்கிறியோ?" என வினவுகிறார்.

"கொண்டு வராமல் வெறுங்கையோடை நான் வருவனே!"

"நல்ல இடமோ?"

"இதென்ன கேள்வி! நான் கொண்டு வந்தால் ஒரிசினலாக இருக்கும்... சாதாரணமான இடமாக இருக்காது"

"அது எனக்குத் தெரியும்..." என்றவர் உள்ளே திரும்பி. "அம்மா துரை மச்சான் வந்திருக்கிறார்" என ஒருதரம் குரல் கொடுக்கிறார். நல்ல செய்தியுடன் வந்திருக்கும் மச்சானுக்கு, "தேநீர்" ஒன்று கொண்டு வா" என்பது தான் அந்தக் குரலுக்குரிய அர்த்தம்.

"வேண்டாம்... வேண்டாம்... நான் இப்பதான் குடிச்சிட்டு வந்தனான்" எனத் தரகர் தங்கத்துரை மறுப்புக் குரல் கொடுக்கிறார்.

தரகர் தங்கத்துரைக்குச் சோமு வாத்தியார் தூரத்து உறவுக்காரன். தங்கத்துரையை விட இரண்டு வயது மூத்தவர் வாத்தியார்.

தங்கத்துரை இருபது வயதில் காதலித்துக் கல்யாணம் செய்தவர். அவருடைய மூத்த மகளுக்கு இப்போது வயது இருபதாகி விட்டது.

ஆனால் சோமு வாத்தியாருக்குப் பெண் பார்க்கும் படலம் இன்னும் நிறைவேறவில்லை. சோமு வாத்தியார் ஏதோவொரு பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியரல்ல. ஆசிரியர்களைப் பொதுவாக "மோட்டு வாத்திமார்" என்று சொல்வது அவர் வழக்கம். அதனால் அந்தப் பெயரை அவருக்கே இட்டு எல்லோரும் அழைக்க ஆரம்பித்தார்கள். காலப் போக்கில் "மோடு" என்பது மறைந்து போக "வாத்தியார்" என்று மிஞ்சி நிற்கிறது.

மணமாகாத இளம் கன்னிப் பெண்களின் சாதகங்களுடன் தரகர் இடையிடையே வந்து போய்க் கொண்டிருக்கிறார்.

வாத்தியாருக்கு எது எல்லாம் பொருந்தி வந்தாலும் வாத்தியார் இறுதியில் ஒரு கேள்வி கேட்பதற்குத் தவற மாட்டார்.

“பெம்பிளைக்கு இங்கிலிஸ் தெரியுமா?” என்பது தான் அவர் கேட்கும் பிரதான கேள்வி.

“ஓம் தெரியும்” எனத் தரகர் பதில் கூறினால், அடுத்த கேள்வி, “இங்கிலிஸ் பேசத் தெரியுமா?” என்று கேட்பார்.

“இங்கிலீஸ் பேசத் தெரியாத பெம்பிளை எனக்கு வேண்டாம். என்னட்டை வாற நண்பர்களும் இங்கிலீஸில் பேச வேணும். என்னுடைய மனைவிக்கு இங்கிலிஸ் பேசத் தெரியாது எண்டால் எனக்கு அவமானம்” என்பார்.

“மச்சான் நல்ல இடம், நல்ல வடிவான பிள்ளை. சீதன பாதனத் துக்கும் குறைவில்லை. நீ விரும்புகிறது போல இங்கிலிஸ் படிச்ச பிள்ளை. இங்கிலிஸ் ரீச்சர். நீங்கள் கேக்கிறதைத் தரக்கூடிய வசதியான இடம். இந்த இடத்தைத் தவற விடுகிறதிலே எனக்கு விருப்பமில்லை. இதைவிடப் பொருத்தமான இடம் வேறை வந்து வாய்க்காது. “

“அது சரி மச்சான். இங்கிலிஸ் தெரிஞ்சால் மட்டும் போதாது. பேசத் தெரியுமோ எண்டதையும் விசாரி! இந்தக்காலத்து இங்கிலிஸ் ரீச்சரவைக்கு ஒரு வசனம் இங்கிலிஸ்” பேசத் தெரியாது.

“அந்தப் பிள்ளை நல்லா இங்கிலீசு பேசும்”

“அது உனக்கெப்படித் தெரியும்? உன்னோடை இங்கிலிஸில் பேசினவவே. ஆ... ஆ... “

“நீ இப்ப என்ன சொல்கிறாய்!”

“அது சரி... மச்சான்! உன்ரை மேளுக்கு மாப்பிள்ளை தேடுகிறாய் எண்டு கேள்வி”

“ஓமோம்... இனிப்பாக்கத் துடங்கினால்தான் இரண்டொரு வருஷத்துக்குள்ளே செய்து வைச்சு விடலாம்.”

தரகன் தான் அடிக்கடி கலியாணப் பேச்சுடன் அங்கு வந்து போவதை வைத்துக் கொண்டு தன்ரை மகளைத் திருமணம் செய்யும்படி வந்து ஆக்கினை கொடுத்து வற்புறுத்திக் கொண்டிருப்பதாக வாத்தியார் கதை கட்டி இருக்கிறார் என்பதும் தரகர் தங்கத்துரை காதில் வந்து விழுந்திருக்கிறது. மனதில் அதை வைத்துக் கொண்டு வெளியில் காட்டிக் கொள்ளாது வந்து போய்க் கொண்டிருக்கிறார். அவர் இப்பொழுது மகள் பற்றிப் பேச்சுக் கொடுத்ததும் தரகர் விழித்துக் கொண்டு விட்டார்.

வாத்தியார் தனக்கருகில் வைத்துக் கொண்டிருக்கும் திருமண அழைப்பிதழ் ஒன்றை எடுத்துத் தரகரிடம் காட்டுகிறார்.

அந்த ஊரில் இன்னும் இரண்டு தினங்களில் நடைபெற இருக்கும் திருமணஅழைப்பிதழ் அது. தரகருக்கும் அவர் வீட்டில் அந்த அழைப்பிதழ் கொடுத்திருக்கிறார்கள். அந்த உண்மையைத் தரகர் வெளியில் கூறாது அழைப்பிதழை வாங்கிப் பார்க்கிறார். தரகர் எதிர்பார்த்தது போல

வாத்தியார் அப்போது சொல்கிறார்: "உந்தப் பெம்பிளையையும் எனக்குக் கேட்டு வந்தவை"

"ஓமோம்...நானும் கேள்விப்பட்டனான்" வேண்டுமென்றே மனசாரப் பொய் கூறுகிறார் தரகர்.

"அது சரி... மகளின்ரை விஷயம் எந்தளவிலே கிடக்கு?" வாத்தியார் வெகு அக்கறையோடு வினவுகிறார்.

"இன்னும் சரிவரவில்லை"

"என்ன மச்சான் வெண்ணெயைக் கையிலே வைச்சுக் கொண்டு நெய்க்கலைகிறாய்"

"ஆரந்தமாப்பிளை... எங்கே இருக்கிறார்... இடத்தைச்... சொல்லு!"

"ஆ... ஆ... மச்சான் உனக்கு ஒண்டுமே விளங்குதில்லை. என்னெண்டு தரகுவேலை பாக்கிறாய்! அப்பமெண்டால் புட்டுக் காட்ட வேணுமே!"

"உண்மைதான் உன்னளவு புத்திசாலி இல்லை நான். என்ன சொன்னாலும் இங்கிலீசு தெரிஞ்சனி யெல்லே!"

"சரியாகச் சொன்னாய் மச்சான்"

"சரி... சரி... மகளுக்குப் பொருத்தமான மாப்பிளை எண்டு நீ ஆரைச் சொல்லுகிறாய். நாங்கள் இரண்டுபேருமாகப் போய்ப் பேசுவம்... சொல்லு... சொல்லு..."

"இதென்ன கதை உனக்கு இன்னும் விளங்கவில்லையே?"

"இல்லை மச்சான்"

"நீ சரியான மோடு தான்... ஏன் மச்சான் நான் ஒருவன் இருக்கிறது உன்ரை கண்ணுக்குத் தெரியவில்லையே...?" என வாத்தியார் கேட்டு வாய்மூடுவதற்கு முன்னர், தரகர் கொதித்துக் கொண்டெழுந்து அவர் கன்னத்தில் "பளாரென்று" ஓங்கி அறைகிறார்.

அந்த ஒரு இடிமுழக்கத்தில் வாத்தியார் பொறி கலங்கி கண்களில் மின்னல் மின்னி கண்ணீர் திரண்டு வர கன்னத்தை ஒரு கையால் பொத்திக் கொண்டிருக்க...

அங்கெழுந்த அந்த கோடை மழை முழக்கம் கேட்டு, வாத்தியாரின் தாயார் அடுக்களைக்குள்ளே இருந்து வெளியே வந்து பார்க்கிறார்.

தரகர் சாரத்தை தூக்கி மடித்துக் கட்டிக் கொண்டு வெளிக் "கேற்"றை நோக்கி உறுதியாக அடி எடுத்து வைத்து நிமிர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்.

- ஜீவநதி 125

# அறாதவேர்

*"ஆச்சி!"*

*வெளியில் நின்று அடக்கமாக அவன் குரல் கொடுக்கின்றான். "வா கனகு" பதில் குரல் கொடுத்துக் கொண்டு வீட்டு வாசலுக்கு விரைந்து வருகின்றேன்.*

*நேற்றே அவனுக்குத் தகவல் சொல்லி அனுப்பி இருந்தேன். அதனால் அவன் இப்பொழுது வருவான் என்பது எனக்குத் தெரியும்.*

*வீட்டு வாசலுக்கு நேர் எதிரில் வெளிக்கேற்.*

*அவன் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே வருகின்றான். நடக்கும்போது வலது காலில் ஒரு கெளிப்பு. ஒரு தடவை பனையில் இருந்து கீழே விழுந்து காலை முறித்துக்கொண்டான். அதன் பிறகு "சொத்திக் கனகன்" என்று எல்லோரும் அழைக்க ஆரம்பித்து விட்டார்கள். கால் முறிந்த பின் பனை ஏறும் தொழிலுக்கு அவன் முழுக்குப் போட்டு விட்டான்.*

*பளபளக்கும் கூர்ந்த வெட்டுக்கத்தி கையோடு அவன் கொண்டு வந்திருக்கின்றான்.*

*அவன் பின்னே வந்து கொண்டிருக்கின்றவன் சலார். ஆள் கொஞ்சம் கரார். அவனை எந்த வேலைக்கு அமர்த்தினாலும், அந்த வேலையை முதலில் ஒரு தடவை நோட்டமிடுவான். பிறகு "இதைச் செய்யச் சலார் கொஞ்சம் கூடவரும்" என்பான். அதனால் அவனுக்குச் "சலார்" என்றே பெயர்.*

*"ஆச்சி, மண்வெட்டி, அலவாங்கு, கட்டுறதுக்கு கயிறு..."*

*"பொங்கை கிடக்கு..." சுவர் ஓரமாகக் காண்பித்து விட்டுத் திரும்புகின்றேன்.*

*இன்னொருவனும் அங்கு வந்து நிற்பது இப்பொழுது தான் கண்ணில் படுகிறது.*

"ஆர் இது? புது ஆளாக் கிடக்கு…!" எண்ணிக்கொண்டு கனகனைப் பார்க்கின்றேன்.

எனது பார்வையைப் புரிந்துகொண்டு சலார் முந்திக்கொண்டு சொல்லுகின்றான்,

"ஆச்சிக்குத் தம்பியைத் தெரியாது. இவர் இடம்பெயர்ந்து வந்திருக்கிறார்."

இப்பொழுது அவன் எனது பக்கம் திரும்பி என்னை நோக்கு கின்றான்.

மின்னல் தாக்கியதுபோல, நான் அதிர்ந்து போகின்றேன்.

அவன் விழிகளில் பட்ட எனது பார்வையை அகற்ற முடியவில்லை. அகன்று நீண்டு கிடக்கும் அழகிய விழிகள். அந்த விழிகள் நீலக்கடல் அலையில் நீந்தும் கயல்மீன்களா? பரந்த நீர்த் தடாகத்தில் மலரப்போகும் செந்தாமரை மொட்டுக்களா? மருண்டோடும் புள்ளிமான்களின் விழிகளா? மந்தகாச ஒளிவீசும் மயக்கும் சந்திரிகைகளா? அப்பப்பா… பெண்களின் விழிகள் போலப் பேசும் விழிகள். இந்த விழிகளை எங்கோ பார்த்திருக் கின்றேன். இந்த விழிகளுக்கும் எனக்கும் வெளியில் சொல்லிக் கொள்ள இயலாத அந்தரங்கமொன்று இருப்பது போல எனக்குள்ளே ஓர் உணர்வு சிறகு விரிக்கிறது.

இந்த விழிகள் எனக்குச் சொல்லும் செய்திதான் என்ன?

நான் என்னை மறந்து அவன் விழிகளை விழுங்கிக்கொண்டு நிற்கின்றேன்.

அவன் என்ன நினைப்பானோ, என எண்ணும் மனக்கூச்சம் எப்படியோ எனக்கு இல்லாமல் போயிற்று.

அவன் உதட்டில் புன்னகை தவழ, கையில் அலவாங்கைத் தூக்கிக்கொண்டு போய்க் கொண்டிருக்கின்றான்.

எனக்கு எதிர்பாராமல் கிடைத்த ஆனந்தம். அதை நான் இழந்துபோனது போல உள்ளம் தவிக் கிறது. அவன் விழிகள் எனக்குத் தந்தது உண்மையில் அளவில்லாத ஆனந்தமா? அல்லது எல்லை யில்லாத துயரமா? எதுவென்று எனக்கு விளங்க வில்லை.

போய்க்கொண்டிருக்கும் அவனைக் குறிப்பாக நோக்குகின்றேன்.

சுருள் சுருளாக நெறியும் அடர்ந்த கேசம். அகன்று பரந்த தோள்கள். ஆண் ஒருவனுக்கு இருக்க வேண்டிய சராசரி உயரம். கால்களை உறுதியாக எடுத்து வைக்கும் நிமிர்ந்த நடை,

இவைகளை எங்கோ பார்த்திருக்கின்றேன்! எங்கே பார்த்தேன்? எனக்குக் குழப்பமாக இருக்கின்றது.

எனக்குள் நான் குழம்பிக் கொண்டிருக்கின்றேன்.

அவனைக் கண்டது முதல்… அவன் விழிகளைச் சந்தித்தது முதல்…

மனம் அமைதியாக, இயல்பாக இருப்பதற்கு இயலவில்லை. ஏனிந்தக் குழப்பம்?

மீண்டும் போய் அவனைப் பார்க்க வேண்டு மென மனம் துடித்துக் கொண்டிருக்கின்றது.

அவன் யாரோ ஒருவன். அவன் பின்னே ஏன் இந்த மனது ஓடுகின்றது?

மனமே விடுவிக்க இயலாத விந்தைகள் நிறைந்த ஒரு விசித்திரம்.

எல்லாம் அறிந்தவனாக வளர்ந்து நிற்கும் மனிதனால் மனதை மட்டும் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. தன்னைத் தான் புரிந்து கொள்ளாத புதிர் மனசு.

கனகன் செய்யும் வேலைகளைப் போய் மேற்பார்வையிட வேண்டிய அவசியமில்லை. அவன் அதை விரும்புவதும் இல்லை. எந்த வேலையானாலும், தன் சொந்த வேலை போல அக்கறையாகச் செய்து முடிப்பான்.

ஒன்பது மணிபோல அவர்களுக்குத் தேநீர் கொண்டு போக வேண்டும்.

எப்பொழுது ஒன்பதுமணியாகப் போகிறது. வழமை போல நேரம் இன்று விரைந்து ஓட வில்லை. காலம் மெல்ல நீண்டுகொண்டு செல்கிறது.

ஒன்பது மணிவரை என்னால் பொறுத்திருக்க இயலாது.

வழமைக்கு மாறாக நேரகாலத்துடன் தேநீர் தயாரிக்க ஆரம்பிக் கின்றேன்.

தேநீரைக் கேத்தலில் ஊற்றிக்கொண்டு, அவர்களுக்கென்று புறம்பாக ஒதுக்கி வைத்திருக்கும் சில்வர் கப்புக்களை எடுத்துக்கொண்டு வளவுக்குப் போகின்றேன்.

கனகன் விரைவாகக் கதிகால்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு நிற்கின்றான். கற்கிளுவைகள், முட்கிளுவைகள் சரிந்து விழுகின்றன. முட் கிளுவைகளின் முட்களுக்கு ஒதுங்கி வெகு லாவகமாக வெட்டுகின்றான்.

வெட்டி விழும் கதிகால்களை இழுத்தெடுத்து, அலாக்குகளைக் கத்தியால் வெட்டி ஒதுக்கி, பனை ஒன்றின் மீது சார்த்திக்கொண்டு நிற்கின்றான் சலார்.

கீழே குந்தி இருந்து, அலவாங்கைப் பிடித்து கதிகால்கள் நாட்டுவதற்குரிய கிடங்குகளை அவன் கிண்டுகின்றான்.

வேலி அடைப்பு துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது.

நான் வருவது கண்டு கனகன் மேலே நிமிர்ந்து பொழுதைப் பார்க்கின்றான்.

உரிய நேரத்துக்கு முன்னர் தேநீர் வந்து விட்டதை அவன் உணர்ந்திருக்க வேண்டும்.

வேலையை நிறுத்தி விட்டு மூவரும் வருகின்றார்கள்.

நான் ஆவலுடன் அவன் முகத்தை நோக்குகின்றேன்.

அவன் தலைகுனிந்து கொள்ளுகிறான்.

கப்புகளில் தேநீரை ஊற்றுகின்றேன். கை லேசாக நடுங்குகிறது. எவ்வளவு தடுத்தும் என்னை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

“தம்பி இந்த வேலைக்குப் புதிசு போல...” மெல்லச் சொல்லிக் கொண்டு பார்க்கின்றேன்.

“ஓம் ஆச்சி... மேசன் வேலை செய்கிறவர்.”

அவன் பற்றி இன்னும் கேட்டறிய வேண்டும் போல உள்ளுக்குள் ஒரு உந்தல். ஆனால் முடிய வில்லை.

கூலி வேலை செய்ய வந்தவன் பற்றி அதிகம் நான் விசாரிக்கக் கூடாது. அது எனக்குக் கௌரவ மில்லை.

“இன்னொரு கப் குடி!” என்னை அறியாமல் அவனைப் பார்த்துச் சொல்லுகின்றேன்.

வேண்டாமென அவன் தலை அசைக்கின்றான்.

அவன் மறுப்பு எனக்கு நெஞ்சைக் குத்துகிறது.

அவன் விழிகளை மீண்டும் பார்க்க வேண்டுமென மனசு தவிக்கிறது.

அவன் நிமிர்ந்து பார்ப்பதாக இல்லை.

அவனை ஒரு தடவை ஏற இறங்க ஆழமாகப் பார்த்துக்கொண்டு இங்கிருந்து புறப்படுகின்றேன்.

எங்களுக்கு மதிய உணவு சமைக்க வேண்டும்.

கூலிக்காரர்களுக்கு பாணும் சம்பலும் தேநீருடன் மதியத்தில் கொடுக்க வேண்டும்.

அடுக்களைக்குள் கையுமோடவில்லை. காலு மோடவில்லை. சோற்றுப்பானை பொங்கி வழிவது கண்களுக்குத் தெரியவில்லை. எங்களுக்குச் சமைப்பதில் எனக்கு அக்கறை இல்லை. உப்பு எதற்குப் போட்டேன்? புளி எதற்கு விட்டேன்? எல்லாம் மறந்த குழப்பம்.

கூலிக்காரர்களுக்கு பாணோடு சுவையான சம்பல் செய்து இன்று கொடுக்க வேண்டுமென்று மனம் விரும்புகிறது.

தேங்காய்ப்பூவில் மிளகாய்ப்பொடி தூவி குழைத்து வழமையாகச் சம்பல் செய்து கொடுப்பேன்.

இப்பொழுது தேங்காயைத் துருவி பச்சை மிளகாய், மிளகு சேர்த்து உரலில் இட்டு, அள வாக உப்புத்தூள் தூவி, பதமாக இடித்து, அளவாகப் புளி சேர்த்து சம்பல் தயாரிக்கின்றேன்.

கூலிக்காரர்களுக்குச் செய்த சம்பல் வாயிலிட்டு இதம் பார்க்கும் பழக்கம் எனக்கில்லை.

இப்பொழுது இரண்டு விரல்களினால் கொஞ்சம் கிள்ளி நாக்கில்

வைத்துப் பார்க்கின்றேன்.

வெகு சுவையான சம்பல்.

வெகு கரிசனையாக இந்தச் சம்பல் யாருக்காக நான் தயாரிக் கின்றேன்?

அவனுக்காகவா?

இந்த மனம் செக்குமாடாக, ஏன் அவனைச் சுற்றிச் சுற்றி வருகின்றது?

எனக்கு எதுவும் விளங்கவில்லை.

மதிய உணவை எடுத்துக்கொண்டு ஓடுகின்றேன்.

மூவரும் வேலையை நிறுத்தி விட்டு வருகிறார்கள்.

வளவுக் கிணற்றில் நீர் அள்ளி நான் ஊற்றுகின்றேன். அவர்கள் குனிந்து நின்று கைமண்டையில் நீரை ஏந்தி, கை கால்களைக் கழுவுகின்றார்கள்.

மூவரும் தென்னைமர நிழலுக்கு வருகின்றார்கள். ஒவ்வொரு வருக்கும் அரை றாத்தல் பாண். பாணின் நடுப்பகுதியைத் தோண்டிக் குடைந்துவிட்டு அதை நீட்டுகின்றார்கள். சம்பலை அள்ளிக் குடைவுக்குள் போடுகின்றேன்.

அவனுக்குக் கொஞ்சம் அதிகமாகவே வைக்கின்றேன்.

சலார் அதைக் கவனித்து விடுகின்றான்.

“ஆச்சி தம்பியிலே கொஞ்சம் வாரப் பாடுதான்.”

இதைக் கேட்டு அவன் வாய்திறந்து சிரிக்கின்றான்.

இந்தச் சிரிப்பு... மல்லிகை மொட்டுக்களை கோத்தது போல பல்வரிசை, எழில் சிந்தும் இந்தச் சிரிப்பு...

அடிவானத்தில் தோன்றும் உதயத்து ஒளிக் கீற்றாக உள்ளத்தில் ஒரு புலப்பாடு. அவனுடைய விழிகள்... அவனுடைய பல்வரிசை... அவ னுடைய சிரிப்பு... ஓ... ! நிச்சயம் அவளுடையது போல... அப்படியானால் இவன்...?

எனக்கு முடியவில்லை. உடல் பதறுகிறது.

“ஆச்சி இண்டைக்கேன் பதறிக்கொண்டு திரியுது?” கனகன் கேட்கின்றான்.

அவன் அவதானித்துப் போட்டான்; அறிய, எனக்கு அரையில் சீலை அவிழ்ந்தது போல, “அப்பிடி ஒண்டுமில்லை... ஒண்டுமில்லை...” சொல்லிக் கொண்டு அவசரமாக அங்கிருந்து புறப்படுகின்றேன்.

நான் முற்றாக அமைதி இழந்து போனேன்.

எனக்கிருக்கும் மனக்குழப்பம் யாருக்கும் வெளியில் எடுத்துச் சொல்லத் தகுந்ததல்ல. நான் உள்ளே குமைந்து குமைந்து சாம்ப வேண்டியது தான்.

பிள்ளைகள் இன்னும் வீடுவந்து சேரவில்லை. அவரையும் இன்னும்

காணவில்லை. நான் இருக்கும் மனநிலையில் தனிமை என்னைப் போட்டுக் கொல்லுகின்றது. அவனைக் காலையில் கண்டது முதல் எனக்கு என்ன நேர்ந்துவிட்டது? எனக்கே என்னை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"பொன்னம்மா...!" கேற்றைத் திறந்து கள்ளு வண்டியைத் தள்ளிக்கொண்டு முள்ளு வருகிறான்.

"அவர் இல்லை"

"நான் உன்னட்டைத்தான் வந்தனான்."

"அறுவான் ஏன் வாறானோ! எல்லாருக்கும் முள்ளு வைக்கிறது தானே வேலை!" உள்மனம் புறுபுறுக்கிறது.

"வாருங்கோ... அண்ணே வாருங்கோ... இருங்கோ"

"இருக்கத்தானே வந்தனான்"

"இருங்கோ அண்ணே... ஒரு தேத்தண்ணி போட்டுக்கொண்டு வாறன்"

"பனையான் இரண்டு அடிச்சுப் போட்டு வாறன். வாய் சவுக்களிக்குது. காரமாக ஒரு துண்டு பொயிலை கொண்டு வா"

புகையிலையை வாங்கி, வாயை ஈயென்று திறந்து பற்களில் நன்றாகத் தேய்த்து வாய்க்குள் அதக்குகிறான். ஆடு இரை மீட்பது போல உதடுகளை இரண்டு தடவைகள் அசைத்து, பெருகி வரும் உமிழ்நீரை அனுபவித்துச் சிலகணங்கள் வாய்க்குள் வைத்திருந்து, பின்னர் எட்டிப் "பளிச்" சென்று முற்றத்தில் துப்புகின்றான்.

எனக்குக் குமட்டிக்கொண்டு வருகிறது. ஒருவாறு உள்ளே அடக்கிக் கொள்ளுகிறேன்.

அவன் நன்றாகத் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு கேட்கின்றான்,

"வேலி அடைப்பு நடக்குதுபோல..."

"கனகனாக்கள் அடைச்சவன்கள்"

"கனகனாக்களோ...?"

"ஓமோம்..."

"என்ன ஓமோம்...!"

"கனகனாக்கள்தான்"

"கனகனாக்களில்லை... உன்ரை ஆக்கள்"

"என்ன கதை கதைக்கிறாய்? கனகனாக்கள் என்ரை ஆக்களே! எதை யும் யோசிச்சுக் கதைக்க வேணும். வாயிலே வந்ததெல்லாம் பேசக்கூடாது"

"எடியாத்தை கோவிக்காதை! உண்மைதான் சொல்லுறன்"

"என்ன எண்மை?"

"ஏன்ரியாத்தை துள்ளிக் குதிக்கிறாய்! இடம் பெயர்ந்து வந்திருக்கிற ஒருதனும் கனகனோடை நிற்கிறான்"

"இடம் பெயர்ந்து வந்தால்... அவன் என்ரை ஆளே?"

"ஓமோம்... உன்ரை ஆள்தான்"

"அண்ணே! மரியாதையாகக் கதை! இல்லை எண்டால்..."

"இல்லை எண்டால் மயிரைப் புடுங்கிப் போடுவியே! அவன் ஆர் தெரியுமே...! உன்ரை தங்கையின்ரை மோன். ஓடிப்போனவளின்ரை மோன். அவள் ஓடிப்போன பிறகு தானே, நீ அந்த ஊரைவிட்டு புரிய னோடை இஞ்சை வந்து சேர்ந்தனி. எனக்கெல்லாம் தெரியும். உள்ளதைச் சொன்னால் உனக்கு உடம்பெல்லாம் நோகுது"

அவன் நையாண்டி பண்ணி என்னைப் பார்த்து நகைக்கிறான்.

நான் வாயடைத்து தலை குனிந்து சர்வமும் அடங்கி நிற்கின்றேன்.

என்னை ஒரு அற்ப புழுவாக நோக்குகின்றான்.

அவன் மெல்ல எழுந்து என்னுடைய முகத்தில் துப்புவது போல "பளிச்" சென்று முற்றத்தில் துப்பிவிட்டு அலட்சியமாகப் போய்க் கொண்டிருக்கிறான். அவன் செய்த அவமதிப்பை யாருக்குப் போய் நான் சொல்வது? பிள்ளைகளுக்குச் சொல்லலாமா? அல்லது கணவனுக்குச் சொல்லலாமா? அவர்களுக்கும் தலைகுனிவு.

நான் செய்த தவறு அவளோடு கூடிப்பிறந்தது தான்.

மாலையில் வீடு வந்த பிள்ளைகள் கேட்கிறார்கள்.

"அம்மா என்ன வாடிப்போய் இருக்கிறாய்?"

அவர் சொல்லுகிறார்,

"உன்னைப் பார்க்க விசரி பிச்சி மாதிரிக் கிடக்கு"

மனம் திறந்து ஒருவருக்கும் உண்மையை என்னால் சொல்ல முடியவில்லை.

அவள் அவனோடு ஓடிப்போய் நாற்பத்தைந்து ஆண்டுகள். அதன் பிறகு அவளை நான் கண்டதில்லை. காண விரும்பவுமில்லை. அவளால் எங்கள் குடும்பம் சிதைந்து போனது. உடன்பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கில் போய்விட்டார்கள். குடும்பம் பற்றிய கடந்த கால எண்ணங்கள் வெறும் கனவுகளாக மனதில் எஞ்சி நிற்கின்றன.

அவளின் பழைய நினைவுகள் மனதில் இருந்து முற்றாக அழிந்து போயின.

இப்பொழுது அவன் வந்து நிற்கின்றான்.

நான் உணவு உண்ண முடியவில்லை.

உறக்கமும் வருவதாக இல்லை.

சுவர் மணிக்கூடு "டிக் டிக்"கென்று ஓடிக் கொண்டிருக்கும் சத்தம் என்றுமில்லாதவாறு பயங்கரமாகக் காதில் வந்து விழுகிறது.

எங்க ர் விழிப்புக் குழு ஊர்நாய்கள் "வள் வள்" என்று குரைக் கின்றன.

குண்டு வெடிக்கும் சத்தம் இடையிடையே தூர விழுந்து

*கொண்டிருக்கிறது.*

*நாளை விடிந்தால் கனகனோடு அவன் வரப் போகின்றான்.*

*நான் என்ன செய்ய வேணும்?*

*நான் யாரிடம் போய் ஆலோசனை கேட்கலாம்?*

*சரி, எதற்கும் நாளை அவன் வரட்டும்!*

*காலையில் எழுந்து செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து முடித்துக்கொண்டு, கனகன் வரவை எதிர்பார்த்து வீட்டு வாசலில் காத்து நிற்கின்றேன்.*

*"ஆச்சி!"*

*தாங்கள் வந்துவிட்டதான தகவல் தெரிவிக்கும் கனகனின் குரல் எழுகிறது.*

*"வா கனகு...!"*

*கேற்றைத் திறந்து மூவரும் உள்ளே வருகின்றார்கள்.*

*நேற்று வைத்துவிட்டுப் போன ஆயுதங்களை எடுத்துக்கொண்டு திரும்புகின்றார்கள்.*

*அவன் கடைசி ஆளாகப் போய்க் கொண்டி ருக்கின்றான்.*

*என்னை நிதானப்படுத்தி அசையாமல் நிமிர்ந்து நிற்கின்றேன்.*

*அவர்கள் கேற்றைத் திறக்கப் போகும் சமயம், "கனகு" எனக் குரல் கொடுக்கின்றேன்.*

*எல்லோரும் திரும்பிப் பார்க்கின்றார்கள்.*

*"அந்தத் தம்பியை இஞ்சை ஒருக்கால் அனுப்பு"*

*கனகனும் சலாரும் கேற்றைத் திறந்து கொண்டு வெளியே போகின்றார்கள்.*

*அவன் திரும்பிவந்து எனக்கு முன் நிற்கின்றான்.*

*"இந்தா... நீ இஞ்சை வேலை செய்ய வேண்டாம். இந்தா... இண்டைக்குரிய கூலிகொண்டு போ!"*

*நான் கையில் வைத்துக் கொண்டிருக்கும் காசை அவனை நோக்கி நீட்டுகின்றேன்.*

*"நான் வேலை செய்யாமல்...?"*

*"பரவாயில்லை... இண்டைக்கு என்னாலே உனக்குக் கூலிக்காசு இல்லாமல் போச்சு."*

*அவன் அலட்சியமாகச் சிரித்துக் கொண்டு நிமிர்ந்து ஒருதடவை நிதானம் தவறாமல் குறிப் பாக எனது முகத்தை நோக்குகின்றான்.*

*கையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் அலவாங்கைத் தொப்பென்று கீழே போட்டு விட்டு, உறுதியுடன் திரும்பி நடக்கின்றான்.*

மல்லிகை - 44 ஆவது ஆண்டுமலர்

# அவள் அல்ல இவள்

*"கிணிங்... தபால்"*

*நான் எழுந்து சென்று கடிதத்தைக் கையில் வாங்கிய பிறகு அவதானித்துப் பார்க்கின்றேன். வெளிநாட்டுக் கடிதம். இதென்ன புதுமை! வெளிநாட்டில் இருந்து இப்போது யார் கடிதம் எழுதுகிறார்கள்! அவர்கள் அவசரம், அவர்களுக்கு. ஆண் பெண் வேறுபாடு இல்லாது, இரவு பகல் பாராது ஓய்வொழிச்சல் இல்லாது ஓடியோடி உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம். ஒருவருக்கு ஆற அமர உட்கார்ந்திருந்து ஒரு கடிதம் எழுத இயலாத அந்தரம். மிக நெருங்கிய உறவுகளுக்கு, இடையில் ஒருக்கால் தொலை பேசியை எடுத்து இரண்டொரு வார்த்தைகள். அதற்கப்பால் உற்றார், உறவினர், நண்பர்கள் மரணச் செய்தி வந்தால், அதே தொலைபேசியில் அவசரமாக இரண்டு வார்த்தை களில் ஓர் அனுதாபம்.*

*இந்த இலட்சணத்தில் அந்தப் பம்பரச் சுழற்சி உலகத்தில் இருந்து எனக்கொரு கடிதமா!*

*அப்படி ஒரு கடிதம் அனுப்பி இருப்பது யாராக இருக்கலாம்!*

*ஓ...அவள்! அவளேதான். அவளிடம் இருந்து ஒரு கடிதம் நான் எதிர்பார்க்கவில்லை; நான் வியந்து போனேன்.*

*அவள் முற்றாக என்னை மறந்து போனாள், அந்த முடிவுக்கு என்றோ நான் வந்து விட்டேன்.*

*ஆனால், இன்னும் அவள் என்னை மறந்து போய் விடவில்லை.*

*என் மீது அவள் உள்ளத்தில் பெருகிக் கொண்டி ருந்த, அந்த அன்பு வெள்ளம் இன்னும் வற்றி வரண்டு போய்விடவில்லை.*

*இப்பொழுது நான் வெட்கப்படுகின்றேன், அவளைத் தவறாகக் கணித்ததை எண்ணி.*

அவள் என்னை, என் குடும்பத்தை எப்படி நேசித்தாள்!

எங்கள் குடும்பத்தில் ஒரு பிள்ளையாக அல்லவா அவள் வளர்ந்தாள்.

அந்த நேசம் இத்தனை ஆண்டுகளில் இலகுவில் மறந்து போகக் கூடியதல்ல.

அவள் துள்ளிக் குதித்துக் கொண்டு சின்னஞ் சிறு பெண்ணாக வீட்டுக்கு ஓடி வருவாள்.

"வாணி...!"

கிண்கிணி ஓசையாக அவள் குரல் அடக்கமாக, கணீரென ஒலிக்கும்.

"வா அம்மா..."

"அன்ரி... வாணி எங்கே?"

"உள்ளே நிற்கிறா... இந்தா... இதையும் கொண்டுபோய் வாணிக்குக் குடுத்துச் சாப்பிடு"

என் மனைவி அடுக்களைக்குள்ளே இருந்து வெளியே வந்து உணவுப் பண்டங்களை அவள் கைகளுக்குள் வைக்கின்றார்.

அவள் கரங்களில் அதை ஏந்திய வண்ணம் குதூகலத்துடன் ஓடிப் போகின்றாள்.

அவள் பள்ளிக்குப் படிக்கப் போகும் நேரம், இரவு படுக்கைக்குச் செல்லும் வேளை தவிர முழு நேரமும் இங்குதான்.

மகள் வாணியுடன் சேர்ந்து கூத்தும் கும்மாளமுமாக ஒரே விளையாட்டு.

முற்றத்துக் கதிரையில் அமர்ந்திருந்து நூல் ஒன்றை நான் வாசித்து கொண்டிருக்கின்றேன்.

அவளுக்கும் மகளுக்கும் ஒரு போட்டி.

ஓடிப்போய் எதிரில் நிற்கும் மாமரத்தைத் தொட்டு விட்டு, திரும்பி ஓடிவந்து அப்பாவை முதல் தொடுகிறது ஆர்?

போட்டி ஆரம்பமானது.

"ஆ...நான்தான் முதலில் அப்பாவைத் தொட்டனான். சொல்லிக் கொண்டு மகள் தொட்டனான்." ஓடிவந்து என் மடிக்குள் விழுகின்றாள்.

"அடுத்த முறை பாப்பம்" அவள் ஓடுகின்றாள்.

மகளை முந்தி, பாய்ந்து வந்து எனது மடிக் குள் விழுகின்றாள்.

"அன்ரி அப்பாவை நான்தானே முதற் தொட்டது... நான்தானே முதற் தொட்டது."

ஆனந்தத்தில் அவள் துள்ளிக் குதிக்கின்றாள்.

"ஆ... ஆ... ஆ..."

"தாசன் ஏன் அழுகிறாய்?" மனைவி மகனைக் கேட்கின்றார்.

"அக்கா அடிச்சுப் போட்டாள்."

“எந்த அக்காள்?”

“மதி அக்கா...”

“அன்ரி, தம்பி தான் முதல் அடிச்சவன்“, அவள் முந்திக் கொள்ளுகின்றாள்.

“தம்பி, அக்காவுக்கு அடிக்காமல் ஒற்றுமையா விளையாடு.”

காலை நேரம் நான் பள்ளிக்கூடம் புறப் பட்டுச் செல்லும் சமயம் வாணிக்கும், மதிக்கும் ஒரு போட்டி.

அப்பாவின் சயிக்கிளில் பின்னால் ஏறி உட்காருவது யார்? முன்னால் ஏறுவது யார்? பின் புறம் ஹரியரில் ஏறி அமர்ந்து பிரயாணம் செய்வது அவர்களுக்கு ஓர் உல்லாசப் பயணம். இருவரும் அதற்காக அடம்பிடிப்பார்கள்.

அவர்கள் சச்சரவு தீர்ப்பதற்கு ஒரு மார்க்கம். ஒருநாள் விட்டு மறு நாள், தவணை வைத்து ஒவ்வொருவராகப் பின்புறம் அமர வைத்து ஏற்றிச் செல்வேன்.

பள்ளிக்கூடத்தில் இருவரும் ஒரே வகுப்பில் படித்தார்கள். ஓய்வு வேளைகளில் தினமும் என்னைத் தேடிக்கொண்டு இருவரும் ஒன்றாக வருவார்கள்.

நான் எதுவும் கேட்க மாட்டேன். காசை எடுத்து இருவர் கையிலும் கொடுப்பேன்.

ஐந்தாவது வகுப்புப் படித்து இருவரும் சித்தி அடைந்தார்கள். அடுத்த ஆண்டு பெண்கள் கல்லூரி ஒன்றில் மகளைச் சேர்த்துப் படிக்க வைக்க விரும்பினேன்.

பெண்கள் கல்லூரி அனுமதிப் பத்திரம் ரண்டு வாங்கி, அவைகளை நிரப்பிக் கொடுத் தேன்.

இருவரையும் அந்தக் கல்லூரியில் சேர்த்து விடுவதற்கு நான் அழைத்துச் சென்றேன். அதிபர் முன்னரே எனக்கு அறிமுகமானவர். என்றா லும் புதிய மாணவிகளைப் பேச வைப்ப தற்காக இவர்களிடம் வினவினார்:

“பெயரென்ன?”

“கலைவாணி”

“யாருடன் வந்திருக்கிறியள்?“

“அப்பா”

“உங்களுடைய பெயரென்ன?”

“பாமதி.”

“யாரோடு வந்திருக்கிறியள்?”

“அன்ரி அப்பாவோடை.”

“குட்... குட்... நன்றாகப் படிக்க வேணும்” அதிபர் உற்சாக மூட்டினார். பின்னர் என்னைப் பார்த்து, “பெற்றோரின் பொறுப்புகளை

எல்லாம் நீங்களே பார்த்துக் கொள்ளுகிறீர்கள் போல இருக்கு...” என்றார்.

நான் மெல்லச் சிரித்துக் கொண்டேன்.

“மதி...!” சில சமயம் அம்மா அழைக்கின்ற குரல் கேட்கும்.

“வாறனம்மா...“ துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிப் போவாள்.

அடுத்த கணம் பார்த்தால் அவள் இங்கு வந்து நிற்பாள்.

என் மகளும் அவளும் ஏ. எல். வகுப்பு வரை வந்துவிட்டார்கள். கல்லூரிக்குப் போவதற்கு முன்னர் அதிகாலை வேளையில் தனியாள் ரியூசன் வகுப்பு. வீட்டில் இருந்து புறப்பட்டுச் செல்லும் சமயம் இருள் முற்றும் கலையாத வைகறைப் பொழுதாக இருக்கும். இருவரையும் அழைத்துச் சென்று வகுப்பில் விட்டு நான் திரும்புவேன்.

அவள் படிக்கும் போது பாடத்தில் சந்தேகம் எழுந்தால் புத்தகமும் கையுமாக என்னைத் தேடிக்கொண்டு வந்து விடுவாள்.

“அன்ரி அப்பா... இதை ஒருக்கால் விளங்கப்படுத்துங்கோ!“

“வாணி எங்கே?”

“தனக்கு விளங்குதெண்டு பொய் சொல்லுகிறாள்.”

“ஏன் அந்தப் பொய்?”

“நீங்கள் ஏசிப்போடுவியள் எண்டு பயம். எனக்கு விளங்கப் படுத்துங்கோ... நான் பிறகு சொல்லிக் குடுக்கிறேன்” என்பாள் இரகசிய மாக, தாழ்ந்த குரலில்.

பின்னர் அவர்கள் இருவரும் போட்டுக் கொள்ளும் செல்லச் சண்டை எனக்குச் செவிகளில் வந்து விழும்.

“அப்பாவுக்கு என்ன கோள் சொன்னனீ?”

“நான் ஒண்டும் சொல்ல இல்லை.“

“நீ பொய் சொல்லுகிறாயெடி.”

“அன்ரி அப்பா...! உங்களுக்கு இவளைப் பற்றிச் சொன்னனானே!” அவள் குரலைச் சற்று உயர்த்தி, எனக்குச் செவிகளில் வந்து விழ வேண்டும் என்பதற்காகக் கூறுவாள்.

“இல்லை... நீங்கள் சண்டை போடாமல் இருந்து படியுங்கோ!” நான் சமாதானம் பண்ணி வைப்பேன்.

இருவரும் ஒரே அறையில் இருந்து ஒன்றாகப் படித்தார்கள். ஒன்றாகப் படுத்தார்கள்.

“மதி... சாப்பிட்டு விட்டுப் போய் இருந்து படி!” இரவு நேரங்களில் அவள் அம்மா மெல்லக் குரல் கொடுப்பார்.

“அன்ரியிட்டைச் சாப்பிட்டு விட்டேன். நான் இஞ்சை படுக்கப் போறன். நீங்கள் கேற்றைப் பூட்டிப் போட்டுப் படுங்கோ!”

வாணி, மதி இருவரும் இரட்டைச் சகோதரிகளா! நண்பிகளா!

அவர்களை அறியாதவர்களுக்கு வேறு பாடு தெரியாது.

ஒரே சூழலில் இருவரும் ஒன்றாக வளர்ந்தார்கள். அவர்களின் சிறுபிள்ளைப் பருவத்தில் இருந்தே இருவருக்கும் இடையில் மெல்லிய இழை போலத் துல்லியமாக வெளிப்பட்ட தனி யாள் வேறுபாடுகளை நான் அவதானித்து வைத்திருந்தேன். அவர்கள் வளர்ந்து வரும் காலத்தில் அந்த வேறுபாடுகள் துலாம்பரமாக வெளிப்படத் தொடங்கின.

அவள் றோஸாப் பூப்போல மென்மையான பெண். உள்ளமும் றோஸாப் பூத்தான். வாய் திறந்து அதிர்ந்து பேசி அறியாள். ஒருவரைச் சினந்து கோபிக்கத் தெரியாதவள். எல்லோருடனும் இணக்கமாக இனிமை யாகப் பேசுவாள். அவள் பாதம் வைத்து நடந்து சென்றால் பூமி நோகாது.

காலையில் எழுந்து முதல் வேலையாகத் தோய்ந்து குளித்து, அருகில் இருக்கும் முருகன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு முடித்து வீடு திரும்பிய பிறகுதான் மற்றக் காரியங்கள். நெற்றியில் பளீச்செனத் துலங்கும் விபூதி, அதன் நடுவில் மணக்கும் சந்தனத் திலகம். அவள் மேனியில் விசேஷ மாக எப்பொழுதும் கமகமக் கும் கோயில் அபிஷேகக் கலவை வாசம்.

அவள் தினமும் ஏதோ ஒரு விரதம் அனுஷ் டித்துக் கொண்டிருந் தாள். வெள்ளிக்கிழமை விரதம்,காப்பு விரதம், நவராத்திரி விரதம், தொண்டைமானாறு சந்நிதி முருகன் மகோற் சவம், வீட்டுக்கு அண்மையில் எழுந்தருளி இருக்கும் முருகன் வருடாந்த உற்சவம், கந்த சஷ்டி விரதம்... இப்படி வருடம் முழுவதும் அவளுக்கு விரதம் இருந்து கொண்டே இருக்கும்.

அவள் நடவடிக்கைகளைப் பார்த்து வாணி அவளைக் கேலி பண்ணிக்கொண்டே இருப்பாள்.

ஒருநாள் திலகவதியார் என்பாள்.இன்னொரு நாள் மங்கையர்க்கரசி யார் என்பாள். வேறொரு நாள் ஆண்டாள் என்பாள்.

என்ன சொன்னாலும் அதற்கெல்லாம் அவள் பதில் வழமையான மெல்லிய ஒரு புன்சிரிப்பு.

இருவரும் சயிக்கிள் வண்டிகளில் கல்லூரி போகும் பாதையில் கற்பூரம் எரித்த கல் அவள் கண்ணிற் பட்டால் போதும், மெல்லத் தரித்து நின்று அதைக் கும்பிடுவாள். சூலம் நாட்டிய ஒதி,பூவரசு, வேம்பு... மரங்கள் எதுவாக இருக் கட்டும் அவள் வணங்காமல் வரமாட்டாள்.

அவள் பாடக் கொப்பியைத் திறந்தால், யௌவன முருகனின் அழகொளிரும் படங் களை நேர்த்தியாக ஒட்டி வைத்திருப்பாள்.

வாணியின் நெருக்கமான இன்னொரு தோழி லில்லி.

ஒரு விடுமுறை நாளில் வாணி அவள் வீட்டுக்குப் புறப்படும்போது கேட்டாள்,

"மதி வா, லில்லி வீட்டுக்குப் போய் வருவோம்."

"நான் வரயில்லை."

"ஏன்?"

*“அவள் வேதக்காரி வீட்டிலே எனக் கென்ன வேலை!”*

*வாணி திகைத்துப் போனாள்.*

*ஒருதினம் அவள் பற்றி ஒரு செய்தி. அவள் குடும்பத்துக்குள் இருந்து மெல்லக் கசிந்து, மனைவிக் கூடாக எனக்கு வந்து சேர்ந்தது.*

*“நான் உள்ளம் அதிர்ந்து போனேன்.“*

*“அவளுக்குத் திருமணப் பேச்சுவார்த்தை நடைபெறுகிறதாம்.”*

*நன்றாகப் படித்து முன்னுக்கு வரக்கூடிய நல்ல பிள்ளை. அவளை எனது மகள் போல மனதில் நினைத்து வைத்திருந்தேன்.*

*அவள் தாய் தந்தை ஒரு வார்த்தை என்னிடம் கேட்கவில்லை. நான் உள்ளம் சாம்பிக் குமைவது தவிர வேறென்ன செய்ய முடியும்!*

*அவர்கள் மூத்தவர்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து, அங்கு வாழ்வுச் சுகம் கண்டவர்கள். அவளை விட்டு வைப்பார்களா!*

*“வெளிநாட்டு மாப்பிள்ளையை விரும்பியா அவள் போகின்றாள்?” மனைவியிடம் வினவினேன்.*

*“ஐயோ... துண்டற அவளுக்கு விருப்பமில்லையாம். தாய், தகப்பன் விடாப்பிடியாக நிற்கினமாம்” என்றார், மனைவி.*

*அவள் முகத்தில் பழைய மலர்ச்சி இல்லை. முற்றாக வாடிப் போனாள். இப்போது வீட்டுக்கு வந்து போவதும் குறைந்து போனது.*

*ஒருதினம் புறப்பட்டு வந்தாள். ஒருதினம் கொழும்பு சென்று, அங்கிருந்து வெளிநாடு செல்வதற்குத் தயாராக*

*“அன்ரி போயிட்டு வாறன்”*

*மனைவி கட்டி அணைத்துக் கொண்டு தேம்பினார்.*

*“மதி...”*

*இருவருக்கும் வார்த்தைகள் இல்லாத இறுக்கமான துயரம். கட்டி அணைத்துக் கொண்டார்கள்.*

*“தம்பீ...”அவனை அணைத்து கன்னங்கள், தலையில் மாறி மாறி முத்தமிடும் போது, அவன் “அக்கா...” எனக் கதறி அழுதான்.*

*“அன்ரி அப்பா...” என அழைத்த வண்ணம் எனக்கு முன்னே வந்து நின்றாள்.*

*நான் ஒருகணம் ஆடிப் போனேன். என் மகளைப் பிரிவது போன்ற உள்ளுணர்வு உள்ளத்தை உலுக்கியது.*

*எனது இரண்டு கரங்களையும் மேலே உயர்த்தி, அவள் தலையைப் பற்றிச் சற்று முன் தாழ்த்தி நெற்றியில் முத்தமிட்டு விழிகள் கலங்க “போய் வா அம்மா” எனக் குரல் தள தளத்து நின்றேன்.*

*எங்களிடம் சொல்லிக் கொண்டு அன்று போனவள், போனவள் தான்.*

எங்கள் எல்லோரையும் வெறுத்து நிராகரித்து விட்டாளோ… என எண்ணிக் கொண் டேன்.

அவள் இப்பொழுது எனக்கொரு கடிதம் எழுதி இருக்கின்றாள். நான் வீட்டுக்குள்ளே வந்து கதிரையில் சௌகரியமாக அமர்ந்து கடித உறையைப் பிரிக்கின்றேன்.

முதலில் புகைப்படம் ஒன்று கண்ணில் படுகின்றது.

அவள், கணவன், இருவருக்கும் நடுவே மகன். மகன் வளர்ந்து நிற்கும், இருபது வயது மதிக்கத் தகுந்த ஒரு வாலிபன்.

அவனுடைய அந்த வளர்ச்சி, அவளும் நானும் தூரத் தூர இருந்து விட்ட இடை வெளியின் அளவு.

அவளைக் குறிப்பாக நோக்குகின்றேன். அவள் தோற்றத்தில் பெரிதாக ஒரு மாற்ற மில்லை.

சுருள் சுருளான அழகான கூந்தலைப் பின்னே விரித்து விட்டுக் கொண்டிருக்கிறாள்.

தமிழ்ப்பண்பாடு பேணும் பெண்ணாக சேலை அணிந்திருக்கின்றாள்.

ஆனால், நெற்றி… அந்தத் திருநீறு சந்தனம் ஒன்றுமில்லாது வெறிச்சோடிக் கிடக்கிறது.

பிரான்சு நாட்டில் சைவக் கோயில், முருகன் கோயில் இல்லாமலா போகும்?

யாழ்ப்பாணத் தமிழன் எங்கு சென்றாலும் கட்டிக் காக்கத் தவறமாட்டான், சைவக் கோயில், சாதி இரண்டையும்.

நான் மெல்லச் சிரித்துக் கொண்டு கடிதத்தை விரித்துப் படிக்கின்றேன்.

பலரும் எழுதுவது போலச் சுக நலம் விசாரிப்பு முதலில். அதுவும் நெஞ்சில் வந்து ஒட்டாத ஒரு சம்பிரதாய எழுத்து.

தொடர்ந்து தான் மனதில் நினைத் திருந்தும் கடிதம் எழுத, தொலைபேசியில் பேச நேரம் இல்லாது போனதாக ஒரு சால் சாப்பு.

இப்பொழுதாவது எழுதுவதற்கு முடிந் திருக்கின்றதே… என்னும் எண்ணத்துடன் தொடர்ந்து வாசிக்கின்றேன்.

“அன்ரி அப்பா, இந்தக் கடிதம் எழுதத் தூண்டியவர் நான் விசுவாசிக்கின்ற என்னுடைய இயேசப்பா.

அன்ரி அப்பா, இப்பவும் நீங்கள் கதைகள் எழுதிக்கொண்டு இருக்கிறீர்களா? ஏனென்றால், இன்னுமொரு கதை எழுத வேண்டு மென்று உங்களைக் கேட்கப் போகிறேன். நீங்கள் எவ்வளவு கதைகள, அறிவுள்ள புத்தகங்களை வாசித்திருந்தாலும், எழுதியிருந்தாலும் நீங்கள் ஒரு புத்தகத்தைப் படிக்கத் தவறி விட்டீர்கள். அதுதான் என்னுடைய ஆண்டவர் மனிதர்களுக்காக, அவர்களின் வழிகாட்டியாக இந்த உலகத்தில் உள்ள

எல்லோருக்காகவும் எழுதித் தந்த பரிசுத்த வேதாகமம் பைபிள். உலகத்தி லுள்ள எந்தப் புத்தகமும் இதற்கு நிகரில்லை.

நான் இலங்கையில் இருக்கும் போது நீங்கள் கோயிலுக்குப் போனதை ஒருநாளும் காணவில்லை. இப்பொழுது எப்படியோ தெரியாது!

அன்ரி அப்பா, நீங்கள் இந்த வேதத்தை ஒருதரம் படிக்க வேண்டு மென்று என்னுடைய ஆசை. படிப்பது மாத்திரமல்ல, உங்கள் கருத்தை மக்களுக்கு அறிவிக்க வேண்டும். ஏனென்றால் எல்லோருக்கும் பைபிள் என்றால் ஏதோ கிறிஸ்தவப் புத்தகம். அதற்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்பார்கள். உங்கள் மூலமாக அவர்கள் அதைப் படிக்க வேண்டு மென்ற ஆவல் வரும்படியாக நீங்கள் அவர்களுக்கு ஒரு சிறுகதை எழுத வேண்டும்...

அவள் கடிதம் இப்படி நீண்டு கொண்டு செல்கின்றது. எனக்கு அவள் தந்த ஏமாற்றத்தினால் உண்டான மன அவேசத்துடன், அந்தக் கடிதத்தை மனைவி கையில் கொடுத்து விடுகிறேன்.

இரண்டு மாத காலம் மெல்லக் கழிந்து போனது.

அவள் எழுதிய கடிதம் பற்றிய நினைவுகள் மனதில் நில்லாது மறைந்து போயின.

"மதி எழுதின கடிதத்திற்கு மறுமொழி எழுதியாச்சே!" மனைவி கேட்கின்றார்.

"இல்லையப்பா"

"ஆரும் கடிதம் எழுதினால் உடனே பதில் எழுதுவியள். அந்தப் பிள்ளைக்கு இன்னும் எழுதாமல் இருக்கிறியள்?"

மனைவி சொல்வதில் ஒரு நியாயம் இருக்கிறது. பதில் எழுதாமல் இருப்பது ஒரு நாகரிக மான செயலல்ல.

அவளுக்கு ஒரு கடிதம் உடனே எழுதி அனுப்பி வைத்தேன்.

என்ன ஆச்சரியம்! அந்தக் கடிதம் போய் அவள் கையில் கிடைத்த வுடன், இன்னொரு கடிதம் எனக்கு எழுதியிருக்கின்றாள். அது இப்படி. . . .

"அன்ரி அப்பா, 1960 ஆண்டளவில், நான் பிறப்பதற்கு முன்னர் நீங்கள் வேதம் படித்ததாக எழுதியிருந்தீர்கள். அது இப்போ எத்தனை வருடங்களாகி விட்டது. இப்ப படியுங்கள். உங்களுக்கு நன்றாக விளங்கும்... நீண்டு செல்கிறது.

அவள் கடிதத்தை நான் கீழே போடுகின்றேன். இனி, அவளுக்கு நான் என்றுமே எழுதப் போவதில்லையென உள்ளத்தில் உறுதி யாகத் தீர்மானித்துக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது மிகத் துல்லியமாக இவளை நான் விளங்கிக் கொண்டேன். நான் எண்ணி இருந்த அவள் அல்ல, இவள்.

மல்லிகை 47 ஆவது ஆண்டுமலர்

# உறவுகளைத் தேடும் ஆவிகள்

*வாய்விட்டு அழ வேண்டும் போலத் தோன்றுகிறது.*

*இதுவரை இப்படியொரு நெருக்குவாரம் யாருக்குமே வந்து நேர்ந்ததில்லை.*

*வீட்டில் இருந்து அவள் புறப்படும் போது எவ்வளவு அக்கறை எடுத்து நேர்த்தியா உடுத்திக் கொண்டு வந்தாள்!*

*இறுதியாக முந்தானைச் சேலையைப் பிடித்து ஒசியும் இடுப்பில் லாவகமாகச் சுற்றி, மேல் தொங்கல் முனையைத் தூக்கி அரையில் ஒயிலாகச் சொருகி விட்டுக் கொண்டாள்.*

*அந்த அக்கறைகள் எல்லாம் அவளுக்கு இப்பொழுது இல்லாமற் போயிற்று.*

*கன்னங்களில் வழிந்தோடும் வியர்வை, காதோர சுருள் மயிரில் வந்து தொங்கித் துளித் துளியாகக் கீழே சொட்டுகிறது.*

*தன்னை அறியாது அநிச்சயாக முந்தானையை இழுத்து அவசரமாக வியர்வையைத் துடைத்துவிட்டுக் கொள்ளுகின்றாள்.*

*நேர்த்தியாக, அழகுற, முக்கோண வடிவில் இடுப்பில் கைக்குட்டை தொங்குவது அவளுக்கு முற்றாக மறந்து போயிற்று.*

*எல்லாவற்றையும் மறக்கடித்த, அப்படி ஒரு அந்தரம்! அப்படி ஒரு பதற்றம்!*

*இரண்டு மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய போட்டி கள். ஒருமணி நேரம் கடந்தும் தொடங்க முடியவில்லை. மேலும் தாமதமானால் போட்டிகளை முற்றாக நடத்தி முடிக்க இயலாது போய்விடும்.*

*பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் எனப் படிமுறையான மதிப்பளித்து*

அழைக்கப்பட்டிருக்கும் அனைவரும் வருகை தந்து ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றார்கள். நடுவர்களாக அழைக்கப் பெற்ற அயல் முன் பள்ளி ஆசிரியைகளும் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

முன்பள்ளி மண்டபத்து வாசலில் அமைக்கப் பெற்ற தகரப் பந்தலின் கீழ், கதிரைகளில் வரிசையாக எல்லோரும் உட்கார்ந்து இருக் கிறார்கள். பந்தலுக்கு முன்பாக உள்ள சிறிய மைதானம் வட்ட வடிவமாக வளைத்து கயிற்றினால் கட்டப்பட்டிருக்கிறது. பார்வையாளர்கள் வந்து கயிற்றுக்கு வெளியே குழுமி நிற்கின்றார்கள்.

எல்லோருடைய பார்வையிலும் தான் பட வேண்டும் என்னும் நோக்கத்துடன் பிரத்தியேகமா உடுத்திக் கொண்டு வந்திருக்கும் நிலையத் தலைவர், பிரதம விருந்தினருக்கு அருகே முன் வரிசையில் வீற்றி ருக்கின்றார்.

அவர்களுக்கு முன் மேசையின் மீது பூரண கும்பம் வைக்கப் பட்டிருக்கின்றது.

தலைவர் பார்வை இடையிடையே மோகனா ரீச்சரைத் தேடிக் கொண்டிருக்கிறது.

மோகனா ரீச்சர் வடியும் வியர்வையைத் துடைத்து விட்டுக் கொண்டு, அங்குமிங்கும் ஓடியோடி யாவையும் ஒழுங்குபடுத்திக் கொண்டி ருக்கின்றாள்.

“ரைம் எண்டால், ரைமாக இருக்க வேணும்!” தலைவர் பிரதம விருந்தினரைப் பார்த்துச் சலித்துக் கொள்ளுகின்றார்.

பிரதம விருந்தினர் தமது உணர்வினை வெளிக் காட்டிக் கொள்ளாது, வெள்ளைச் சிரிப்பொன்றை மெல்ல உதிர்த்து விடுகின்றார்.

எல்லாம் தயார் என்ற நிலையில் போட்டிகளை ஆரம்பிப்பதற்கான உடன்பாடு ரீச்சரிடம் இருந்து இன்னும் கிடைக்கவில்லை.

“திருமகள் பாலர் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் இன்னும் சிறிது நேரத்தில் ஆரம்பமாக இருக்கின்றன” ஒரு மணி நேரமாக ஒலிபெருக்கியில் இடையிடையே அறிவித்துக் கொண்டி ருக்கின்றார்கள்.

தலைவருக்கு, அந்த அறிவித்தல் எரிச்சலை மூட்டுகிறது.

“இன்னும் ஆரம்பிக்கவில்லை எண்டதைத் தான் இப்பிடி அறிவிக்கிறார்கள்” ஏளனமாகச் சொல் லிச் சிரிக்கின்றார்.

ஆரம்பிக்கத் தாமதமாகும் இந்தக் குறைபாட்டுக்குத் தான் காரணமல்ல என்பதை, பிரதம விருந்தினருக்கு எப்படியும் உணர்த்திவிட வேண்டுமென நிலை யத் தலைவர் துடிக்கின்றார்.

பார்வையாளர்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றார்கள். ஆண்கள், பெண்கள், முதியவர்கள், குழந்தைகள், குஞ்சு குருமன்கள் எல்லோரும் வந்து அந்தச் சிறிய மைதானத்தை நிறைத்துக் கொண்டிருக் கின்றார்கள்.

போட்டிகள் தொடங்குவதற்கு ரீச்சர் இன்னும் சம்மதம் தெரிவிக்க வில்லை.

முன்னாயத்தங்கள் இன்னும் முற்றாக நிறைவு பெறவில்லை. முப்பத்தைந்து சின்னஞ்சிறு பாலர்களை வைத்து ஒழுங்குபடுத்தி வழி நடத்தும் பொறுப்பு ரீச்சருக்கு.

மோகனா ரீச்சர் தனி ஆளாக நின்றுழைத்து நன்றாகக் களைத்துப் போய்விட்டாள்.

கடந்த ஆண்டுகளில் இப்படி ஒரு நெருக்குவாரம் ரீச்சருக்கு வரவில்லை. கனகச்சிதமாக யாவும் செய்து மிகச் சிறப்பாக நடத்தி முடிப்பதில் பெயர் பெற்றவள். அனைவராலும் பாராட்டப் பெறும் திறமைசாலி. இந்த ஆண்டு தனக்கிருந்து வரும் நல்ல பெயரை, இந்த விளையாட்டு விழா, கழுவிப் போடுமோ என அச்சமுற்றிருக்கின்றாள்.

விளையாட்டுப் போட்டி நடத்துவதற்கான ஆயத்தங்களை இரண்டு மாதங்களுக்கு முன்பே அவள் ஆரம்பித்து விட்டாள்.

வன்னியில் போர் நிலைமைகள் மிக உக்கிரம் அடைந்த போது, பால களின் பெற்றோர்கள், முன் பள்ளி நிர்வாகிகள் போட்டி நடத்துவதை விரும் பார்த்து அறிந்து, அவள் யாவையும் இடைநிறுத்தி வைத்து விட்டு இருந்துவிட்டாள்.

திரும்ப அவர்களே பேசத் தொடங்கிவிட்டார்கள். “இஞ்சை எல்லாந்தானே நடக்குது! விளையாட்டுப் போட்டியை நடத்தினால் என்ன?” என்றார்கள்.

போட்டிகள் நடைபெறுவதற்கு வேண்டிய எல்லா ஒழுங்குகளை யும் அவசர அவசரமாக ரீச்சர் செய்து முடித்து விட்டாள்.

பாலர்களின் போட்டிகளைக் கண்டு மகிழ இப்படிப் பெரிய ஒரு சனக் கூட்டம் வந்து கூடும் என்று இன்றைய நிலையில் எதிர்பார்க்கவில்லை. வன்னிப் புதர்க் காடாகத் துன்ப இருள் மண்டிக் கிடக்கும் இதயங்கள், அதற்கு ஒரு வடிகால் தேடி வந்தி ருப்பது போல, இன்று தோன்றுகிறது.

எவ்வளவு காலம் உறவுகளை எண்ணி இதயத் தால் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்க முடியும்? வாழும் மனிதன், துயரங்களில் இருந்து விடுபட்டெழுந்து நிற்பது தானே வாழ்வு!

அதற்கான முன்னாயத்தங்களில் ஒன்று தான் பாலர்களின் இந்த விளையாட்டுப் போட்டியோ?

தலைவர் இனிமேலும் காத்திருக்கத் தயாராக இல்லை. அவர் பொறுமை இழந்து போகின்றார்.

முகம் கறுத்துக் கடுகடுத்துக் கொண்டு எழுந்து ரீச்சரைத் தேடுகின்றார்.

மோகனா ரீச்சர் எல்லா ஏற்பாடுகளையும் ஒருவாறு செய்து முடித்து விட்டு, முந்தானையால் முகத் தைத் துடைத்த வண்ணம் முன்பள்ளிக்

*கட்டடத்துக்குள் இருந்து வெளியே வருகின்றாள்.*

*தலைவர் வாய் திறப்பதற்கு முன், “இனி தொடங்கலாம், ஸேர்” எனப் பணிவாக அவரிடம் தெரிவிக்கின்றாள்.*

*தலைவர் தனது அதிருப்தியை ஒரு பார்வையால் அவள் முகத்தில் வீசிவிட்டு, திரும்பி வந்து இதுவரை காத்திருந்த சந்தர்ப்பம் தற்பொழுது வந்து வாய்த்துவிட்ட கம்பீரத்துடன் மைக்கின் முன் நிற்கின்றார். இடது கையினால் ஸ்ரான்டை மெல்லப் பிடித்த வண்ணம், வலது கைச்சுட்டு விரலை மடித்து மைக்கில் இரண்டொரு தடவைத் தட்டி ஒலி எழுப்பு கின்றார். ஒரு தடவை செருமிக் குரலைச் சரி செய்து கொண்டு பேச ஆரம்பிக் கின்றார்.*

*“எல்லோருக்கும் பணிவான வணக்கம் திரு மகள் பாலர் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த மெய் வல்லுநர் போட்டிகள் ஆரம்பமாகின்றன. முதலில் மங்கள விளக்கேற்றல் இடம்பெறும். இந்த விழாவின் பிரதம விருந்தினராக இங்கு வருகை தந்திருக்கும் பிரதேச சபைச் செயலாளர் பெரு மதிப்புக்குரிய உயர்திரு. வே. கோபாலரத்தினம் ஐயா அவர்கள் முதலில் மங்கள விளக்கினை ஏற்றுவார்கள்”*

*பிரதம விருந்தினர் மெல்ல எழுந்து, மேசை மீதுள்ள பூரண கும்பத்தருகே வந்து, தீப்பெட்டியைக் கையில் வாங்கி, குச்சி ஒன்றை வெளியே எடுத்து, பெட்டியில் உரசி தீபத்தினை ஏற்றும் சமயம்...*

*“மரண அறிவித்தல். கரணவாயைப் பிறப்பிடமாகவும், முல்லைத் தீவை வதிவிடமாகவும் கொண்ட செல்வி வளர்மதி பொன்னம்பலம் **11. 8. 2009** இல் காலமானார். அன்னார்...”*

*ஒலி பெருக்கி மூலம் மரண அறிவித்தல் ஒன்று காற்றலையில் மிதந்து வருகின்றது.*

*விளையாட்டரங்கு ஒரு கணம் ஸ்தம்பிக்கிறது.*

*பிரதம விருந்தினர் சற்றுத் தடுமாறி மங்கள விளக்கேற்றுவதை நிறுத்தி, அமைதியாக விழிகளை மூடி, தலைகுனிந்து மௌனமாக நிற்கின்றார்.*

*மரண அறிவித்தல் ஒலிபெருக்கியில் அறிவித்து முடிகிறது. பிரதம விருந்தினர் மங்கள விளக்கினை ஏற்றி வைக்கின்றார்.*

*சிறப்பு விருந்தினர் பெயர்கள் வரிசையாகத் தொடர்ந்து அறிவிக் கின்றார், தலைவர்.*

*சிறப்பு விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றி வைக்கின்றார்கள். அடுத்து ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல்.*

*மாணவத் தலைவன் வலது கரத்தில் ஒலிம்பிக் தீபம் தாங்கி, இடது கரத்தைப் பின்புறமாக மடித்து மைதானத்தைச் சுற்றி மெல்ல ஓடி வந்து தீபத்தை ஏற்றுகின்றான். பின்னர் வலது கரத்தை முன்னே நீட்டி, பிரதம விருந்தினர் முன் சத்தியப் பிரமாணம் செய்ய முற்படுகையில்...*

“மரண அறிவித்தல். கரணவாயைப் பிறப்பிடமாகவும், முல்லைத் தீவை வதிவிடமாகவும் கொண்ட...”

மீண்டும் அரங்கில் மரண அமைதி. அறிவித்தல் ஒலிபரப்பி முடிகிறது.

மாணவத் தலைவன் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளு கின்றான்.

“மாணவத் தலைவனாகிய நான் இன்றைய இந்த விளையாட்டு நிகழ்வினை ஒழுங்காகவும் சிறப் பாகவும் நடத்தி முடிப்பேன் எனச் சத்தியப் பிரமா ணம் செய்கின்றேன்”

மாணவத் தலைவனின் சத்தியப் பிரமாண நிகழ்வினைத் தொடர்ந்து, “இந்த விளையாட்டுப் போட் டியை நான் தொடங்கி வைக் கின்றேன்” எனப் பிரதம விருத்தினர் சம்பிரதாய பூர்வமாக அறிவிக் கின்றார்.

போட்டிகளுக்கு நடுவர்களாகக் கடமையாற்ற வந்திருக்கின்றவர் களின் பெயர்கள் குழுக்களாக ஒலிபெருக்கியில் அறிவிக்கப்படுகின்றன.

நடுவர்கள் எழுந்து மைதானத்துக்குள்ளே வரு கின்றார்கள்.

மோகனா ரீச்சர் ஒவ்வொரு போட்டியிலும் பங்குபற்றும் மாணவரை ஒழுங்குபடுத்தி அனுப்பிக் கொண்டிருக்கின்றாள்.

விளையாட்டுக்கள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கின்றன.

பார்வையாளர்கள் விளையாட்டுக்களில் பங்குபற்றும் பாலர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

வெற்றி ஈட்டிய மாணவர்கள் வெற்றிப்பீடத்துக்கு அழைக்கப் பெற்று, அங்கிருக்கும் பிரமுகர்களின் கரங்களினால் பரிசில்கள் வழங்கப் பெற்று, கௌரவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆர்வத்துடன் புகைப் படங்கள் எடுக்கின்றார்கள்.

போட்டிகள் விரைவாக நடந்து முடிந்து கொண்டி ருக்கின்றன.

“பெற்றோருக்கு ஒரு வேண்டுகோள்! விநோத உடைப் போட்டியில் கலந்து கொள்ளும் உங்கள் பிள்ளைகளைத் தயார் பண்ணுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம்!” ஒலிபெருக்கியில் இடையிடையே அறிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

விளையாட்டுக்கள் யாவும் நடந்து முடியும் தறு வாய் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அடுத்த நிகழ்வு விநோத உடைப் போட்டி.

மீண்டும் அறிவித்தல்:

“விநோத உடைப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் மைதானத்துக்கு வருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்”

*விநோத உடை தரித்த மாணவர்கள் ஒவ்வொருவராக மைதானத் துக்குள் வருகின்றார்கள்.*

*விநோத உடை தாங்கிய பாலர்களை இன்னாரென இனங் கண்டு கொள்ள இயலவில்லை.*

*பெற்றோர் மிகுந்த அக்கறை எடுத்துத் தங்கள் பிள்ளைகளைத் தயார் பண்ணி விட்டிருக்கின்றார்கள்.*

*பெற்றாரின் விருப்பதுக்கிணங்கிப் புகைப்படக் காரர்கள் சுழன்று சுழன்று படங்கள் பிடித்துக் கொண்டு நிற்கின்றார்கள்.*

*விநோத உடை தரித்தவர்கள் மைதானத்துக்குள்ளே ஒரு தடவை சுற்றி வந்து பின்னர், நடு மைதானத்தில் வரிசையாக நிற்கின்றார்கள்.*

*விளையாட்டுப் போட்டியை இதுவரை கண்டு களித்த பார்வை யாளர்கள், நாடகக் காட்சியைக் கண்டு இரசிப்பது போல, ஆர்வத்துடன் நோக்குகின்றார்கள்.*

*விநோத உடைப் போட்டிக்கான நடுவர்களாகப் பிரதம விருந்தின ரும், சிறப்பு விருந்தினர்களுள் இருவரும் கடமை ஆற்றுவார்களென ஒலிபெருக்கியில் அறிவிக்கின்றார்கள்.*

*பிரதம விருந்தினரும், சிறப்பு விருந்தினர்களும் புள்ளி வழங்குவதற் கான காகிதம், பேனா என்பவற்றைக் கையில் கொண்டு, விநோத உடை தரித்த மாணவர்கள் எதிரில் வந்து நிற்கின்றார்கள்.*

*விநோத உடை தரித்தவர்களை அறிமுகப்படுத்துவதற்கும், அவர் களுடைய ஆளுமையை வெளிப்படுத்துவதற்குமாக, நடுவர்களுள் ஒருவர் கையில் மைக்குடன் அவர்களிடம் வருகின்றார்.*

*வரிசையில் முதல் இடத்தில் நிற்கும் மாணவரிடம் மைக்கைத் தனது வாயருகே பிடித்துக் கொண்டு முதல் வினாவைத் தொடுக்கின்றார்.*

*"நீங்கள் யார்?"*

*பின்னர் மைக்கை மாணவர் வாயருகே பிடிக்கின்றார்.*

*மாணவர் பதில் கூறுகின்றார்.*

*"நான் ஔவையார்"*

*மீண்டும் முன்போலக் கேட்கின்றார்.*

*"எங்கிருந்து வருகிறீர்கள்?"*

*"தமிழ்நாட்டில் இருந்து"*

*கேள்வி பதில் தொடர்கிறது.*

*"இங்கே ஏன் வந்தீர்கள்?"*

*இங்குள்ள மாணவர்களுக்கு என்னுடைய பாடல்களைச் சொல்லிக் கொடுக்க"*

*"நன்றி ஔவையாரே! மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும்*

சொல்லிக் கொடுங்கள்”

நடுவர் அடுத்த மாணவரிடம் நகருகிறார்.

“நீங்கள் யார்?”

“நான் டொக்ரர்”

“எங்கிருந்து வருகிறீர்கள்?”

“யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் இருந்து வருகிறேன்”

“ஏன் இங்கே வந்திருக்கிறீர்கள்?”

“நோயாளர்களுக்கு வைத்தியம் செய்து சுகப் படுத்த”

“நன்றி, டொக்ரர். இங்கே பலபேருக்கு நோய் இருக்கு. அதை நீங்கள் தான் சுகப்படுத்த வேண் டும்”

“நீங்கள் யார்?”

“ரீச்சர்”

“ரீச்சருக்கு என்ன பெயர்”

“மோகனா”

பார்வையாளர் மத்தியில் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

“இங்கே ஏன் வந்திருக்கிறீர்கள்?”

“நேசறியிலே படிப்பிக்க”

“நன்றி, பிள்ளைகளுக்கு நன்றாகப் படிப்பிக்க வேணும்”

அறிமுகம் தொடர்கிறது.

ஐயர், தபாற்காரன், நேர்ஸ், ஞானசம்பந்தர், பிச்சைக்காரன்...

இறுதியாக......

ஒரு கரிமுண்டம் நிற்கிறது.

தலையில் வரிந்து இறுகக் கட்டிய கறுத்தத் துணி. அரையிலும் அதுபோன்ற சிறு துண்டு. உடல் முழுவதும் தடிக்கப் பூசிய அட்டைக் கரி. சிவந்த கொவ்வைப் பழ கலங்கும் விழிகள். எரிந்து நூர்ந்த கரிக் கட்டையைப் போல உருவம்.

பாதங்கள் பூமியில் படாதவாறு அந்த உருவம் பதறித் துடித்துக் கொண்டு நிற்கிறது.

அறிமுகம் செய்து வைத்துக் கொண்டு நிற்கும் நடுவர், அந்த உருவத்தை நெருங்குகின்றார்.

“நீங்கள் யார்?” நடுவரின் வினா.

“நான் ஆவி”

அங்கு கூடி இருக்கும் அனைவரின் கவனமும் அந்த உருவத்தின் மேல் திடீரென வந்து கவிகின் றது.

“நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?” அடுத்த வினா.

*“வன்னியில் இருந்து”*

*மைதானம் சலசலப்பேதுமின்றிச் சட்டென்று அடங்குகிறது.*

*“நீங்கள் மட்டுமா, வந்தீர்கள்?”*

*“இல்லை, கண்களை நன்றாகத் திறந்து பாருங்கள்! ஆயிரம் ஆயிரம் ஆவிகள் அலைந்து கொண்டிருப்பது தெரியும்!”*

*“நீங்கள் எப்படி வந்தீர்கள்?”*

*“அலைந்தலைந்து களைத்துக் கடைசியில் ஒருமாதிரி வந்து சேர்ந்து விட்டேன்”*

*“எங்கே வந்தீர்கள்?”*

*“நான் இங்கே தான் வந்தேன்”*

*“இங்கே ஏன் வந்தீர்கள்?”*

*“ஐயோ....! என் உறவுகளைத் தேடியல்லவா நான் வந்திருக்கிறேன்!”*

*அந்த மைதானம் உயிர்ப்பின்றியே உறைந்து போகிறது.*

மல்லிகை - 45 ஆவது ஆண்டுமலர்

# வெளியில் எல்லாம் பேசலாம்

*வீட்டில் இருந்து புறப்படும்போது மனதில் ஒரு திருப்தி இருக்கவில்லை. ஏன் என்றும் விளங்கவில்லை. சில சமயங்களில் இப்படி நேர்ந்து விடுகிறது. அடிமனதில் உறைந்துபோன வாழ்வு அனுபவங்களின் வெளிப்பாடாக இருக்கலாம். மனதில் திருப்தியீனத்துடன் வெளியே செல்வ தற்கு விருப்பமில்லை. அப்படிச் செல்லாமல் இருப்பதற்கும் இயலவில்லை. மிக முக்கியமான காரியம். அதனை எப்படித் தவிர்த்துவிட இயலும்? வெளியில் எல்லாம் தவிர்த்து விட்டுப் பின்னர் அதற்கென்ன நியாயம் பேசலாம் சொல்லிக் கொள்ளலாம்!*

*அவன் மனம் அவனுக்குப் புரியவில்லை. மனதின் விந்தை விளையாட்டு இதுதான். இதனை விளையாட் டென்று சொல்ல விளையாட்டென்று சொல்ல இயலாது. மனதின் எச்சரிக்கையாகவும் அது இருக்கக் கூடும். அந்தச் சமிக்ஞை, முன்னெச்சரிக்கை என்ன என்று உணராது, மீறி நடந்து, ஆபத்தில் போய் வீழ்ந்துவிடவும் நேரலாம். "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்பது வாழ்வு அனுபவந்தான். ஆனால், எங்கும் அது பொருந்திவரத் தகுந்ததல்ல. வெளியே போகும்படி ஏவிக்கொண்டிருப்ப தும் இந்த மனந்தான். அதேசமயம் புறப்படுவதில் அதிருப்திப்பட்டுச் சலித்துக் கொள்வதும் இந்த மனந்தான். இந்த மனதுக்கு எத்தனை முகங்கள்! எந்த முகம் உண்மை யான முகம்! எது சத்தியத்தின் முகம்!*

*ஒன்றும் புரியவில்லை! எல்லாம் புரியாத குழப்ப மாகத் தோன்றியது. புரியவில்லை என்பதால் புறப்படாமல் இருந்துவிட முடியவில்லை. மோட்டார் சயிக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே செல்லத் தயாராகின்றான். வீட்டில் இருந்து வெளிக்கேற் வரை வளுவளுப்பான சிவந்த சிமெந்துத் தரை. அதன் இரண்டு பக்கங்களிலும் செழித்துப் பூத்துக் குலுங்கும் பூஞ்செடிகள். குளுகுளுத்து நிற்கும்*

வண்ண வண்ணக் குறோட்டன்கள். அவைகள் எல்லாம் அவன் கவனிப்பின் பூரிப்புகள். மலர்ச்சிப் புன்னகைகள். நித்தமும் மாலை நேரம், விடுமுறை நாட்கள் அவன் அவைகளுடன் கழிப்பான். அவைகள், அவனுக்கு, அவன் செல்லக் குழந்தைகள் போல. அவன் புறப்பட்டு வெளியே போகும் சமயங்களில் மெல்ல மெல்ல நகர்ந்து நகர்ந்து அந்தப் புஷ்ப எழிலை ஆவலுடன் கண்டுகளித்த வண்ணம் செல்வான்.

வீடு விட்டுப் புறப்படுகையில் மனம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். மனம் நிறைந்திருக்க வேண்டும். அதுதான் அவன் மனதின் நாட்டம். அந்த மகிழ்வு, நிறைவுகளை அவன் வளர்க்கும் அந்தப் பூஞ்செடிகள் அவனுக்குத் தரும். அதற்கு அப்பாலும் அவன் மனம் நாடுவது இன்னொன்றை. மனதின் அந்தரங்கம் அது. மனைவி வெளியே வர வேண்டும். அவள் கேற்றைத் திறந்து, மலர்ந்து நின்று வழியனுப்பி வைக்க வேண்டும். அவள்தான் மனதின் முழு நிறைவு. மனதுக்கு நிறைவு பூஞ்செடிகளா? அல்லது அவளா? அவளாகத்தான் இருக்க வேண்டும்.

அவன் மோட்டார்ச் சயிக்கிள் மெதுமெதுவாக ஏன் நகர்ந்து கொண்டிருக்கின்றது? வேலையும் கையுமாக உள்ளே இருக்கும் அவள் வந்துசேர வேண்டுமல்லவா! மலர்களை, செடிகளை இரசிப்பதாக உண்மையில் அவளை மனம் தேடுகின்றது. அவள் மலர்ந்து மனதில் மணம் பரப்பும் பூஞ்செடியா? அல்லது பூங்கொடியா?

அவள் இன்னும் வந்து சேரவில்லை. அவள் வருகையை எதிர்பார்த்து மலர்களை அனுபவிப்ப தாக எவ்வளவு நேரம் பாவனை பண்ணிக் கொண்டு நிற்கலாம்? சில சமயங்களில் அவள் அப்படித்தான். அவனோடு பிணக்கு என்றால் அவள் வீட்டுக்கு வெளியே வராமல் இருந்து அவனைப் பழிவாங்குவாள். அந்த நாள் அவன் முற்றாகக் குழம்பிப் போவான். அது கரிநாள். அவனுக்கு அப்படியொரு மனம்.

அவள் வந்து கேற்றைத் திறந்து விடுகின்றாள். அவள் முகத்தில் வழமையான மலர்ச்சி இல்லை. அதிகாலை புலர்ந்து பனித்துளியில் நனைந்து சொட்டும் புஷ்பமாக அவள் வதனமில்லை. காங்கை தாங்காது ஈரம் உலர்ந்த பூவாக அவள் தோன்றுகின்றாள். அவன் குறிப்பாக அவள் முகம் நோக்குகின்றான். அவள் உதடுகள் லேசாகப் பிரிகின்றன. அது மகிழ்ச்சியின் மலர்வல்ல. அவள் உதடுகளில் செத்துக் கிடந்தது அந்தச் சிரிப்பு. அவளுக்கு மனம் மலரா முகம். செத்துப் போன புன்னகை தான் அவள்.

விடுமுறை தினம் என்றால் அவளுக்கு ஒரே குஷி. மோட்டார் சயிக்கிளில் அவன் பின்னால் அவள் ஏறி அமர்ந்திருக்க வேண்டும். நகைக் கடை, சேலைக்கடை, மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக்கடை... இடையிடையே கோவில்கள் ஏற்றிச் செல்ல வேண்டும். அதில் அவளுக்கொரு உல்லாசம், ஆனந்தம். சமையல் சாப்பாடு என்று குடும்பத்துக்காக வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்ணுக்கு இவை

யெல்லாம் வேண்டும் தேவைகள்தான். கணவனுடன் இணைந்து ஒன்றாக வெளியில் செல்வதில் மனதுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! அவன் சில சமயம் சோம்பல் பட்டால் அவள் விட்டு வைக்க மாட்டாள். அவளை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காவே அவன் சலிக்காமல் புறப்படுவான்.

அந்த மகிழ்ச்சி இன்று தனக்கில்லை என்பதனாலா அவள் முகம் சற்று வாடிப் போனது? அல்லது அவள் மனதில் வேறென்ன தான் இருக்கிறது? ஒரு மனதின் சாகசங்களை எல்லாம் எப்படி இன்னொரு மனது ஊகித்து; உணர்ந்து கொள்ளலாம்?

எதற்கும் ஒரு வார்த்தை அவளிடமே கேட்டு வைக்கலாம். ஆனால், அவள் உள்ளத்தைச் சீண்டி அவளுக்குள் இருப்பதை வெளிக்கொண்டு வருவதில் என்ன இலாபம்? வலிந்து போய் வீண் தொல்லைகளைத் தேடிக் கொள்ளக் கூடாதென மனம் எச்சரிக்கிறது. அவன் எப்பொழுதும் அப் படித்தான், பிரச்சினை கண்டு விலகிக் கொண்டு விடுவான். இப்பொழுது மனமகிழ்ச்சியுடன் வீட்டில் இருந்து போக வேண்டும். அதற்கு அவளை மகிழ்விக்க வேண்டும். அவளை நோக்கி உயிர்ப்புடன் ஒரு புன்னகை அவளுக்குக் கொடுத்துவிட்டு, கேற்றைத் தாண்டி அவன் ;வெளியே வருகின்றான்.

அவன் பிறந்த வீடு நோக்கி மோட்டார் சயிக்கிள் ஓடிக் கொண்டிருகின்றது. ஆனால் அவன் மனம் அவனைப் பின் தள்ளிவிட்டு அவளது காய்ந்த முகம்... செத்த சிரிப்பு என ; நினைவுச் சூழலில் அலைகிறது.

அவன் சகோதரி குடும்பத்துடன் வாழுவதற்குப் போதுமான குடிநிலம் வேண்டும். அவர்கள் வீட்டோடு சேர்ந்த நான்கு பரப்பு நிலம் பணம் கொடுத்து வாங்க வேண்டும். அந்த நிலத் தில் வசதியாக அவளுக்கு வீடொன்று கட்டிக் கொடுக்க வேண்டும். சுவிசில் இருந்து வந்து வீட்டில் தங்கி நிற்கும் அண்ணா அதற்கான செலவுகளைச் செய்யத் தயாராக இருக்கின்றார்.

இந்த நிலத்தின் உடைமையாளனை முதலில் போய்ச் சந்திக்க வேண்டும். விலைவாசி பேச வேண்டும். அண்ணா அதற்காக அவனை வரச் சொல்லி இருக்கின்றார். அவளுக்கும் அது தெரியாமலில்லை. ஆனால், அதுதான் அவள் முக வாட்டத்துக்குக் காரணமோ! அந்தச் செலவுகளில் ஒரு பகுதி அவன் தலையில் வந்து விழுந்து விடக் கூடுமென அவள் மனம் அஞ்சி இருக்கக் கூடும். அவள் மன அச்சம் நியாயமானது. மூன்றும் ஒன்றுமாக நான்கு வாரிசுகளுடன் வாழுகின்றவள். மூன்று பெண்களைக் கரை சேர்க்க வேண்டுமென்ற கவலை இருக்காதா அவளுக்கு!

ஓ... வல்லை வெளிவந்து விட்டது. இளம் பருவ வாலிப வனப்பில் நண்பர்களுடன் சேர்ந்து வல்லைப் பாலத்தின் மேல் நின்று தூண்டில் போட்டு மீன் பிடித்ததும், தென்னந் தோப்பில் களவாக இளநீர் பறித்துக் குடித்ததும், உப்பு விளையும் காலத்தில் உப்பள்ளிச் சேர்த்ததும்... என

உல்லாச மாகத் திரிந்த இடம். தொண்டமான் உப்பாறு ஊடறுத்து நீண்டு கிடக்கும் பரந்து விரிந்த பொட்டல் வெளி. இந்த வெளிக்குள்ளும் இத்தனை உல்லாசங்கள் கொட்டிக் கிடந்தனவா? அவையாவும் இப்பொழுது எங்கே? யாவும் தொலைந்து போயின? வாலிப வனப்புடன் அவைகளும் மறைந்து மங்கிப் போய் விட்டனவா? வாலிபம் அழிந்து போன இடைக்காலத்தில் இந்த வெளியில் எத்தனை பயங்கரங்கள். எப்பொழுதும் உயிர் அச்சம்! யுத்தக் கெடு பிடியில் மடிந்தபோன மனித உயிர்கள்.

இப்பதான் என்ன! வாகனங்கள்... வாகனங்கள் எனப் போக்கு வரத்து நெரிசல். கரணந் தப்ப வேண்டாம். கவனம் தப்பினால் போதும் நிச்சயம் அது மரணம். சோதனை இல்லாத காவலரண்கள் மீது வெறுப் பில்லை. மானமாக, மரியாதையாக மனிதன் போய் வரலாம். புதிய வல்லைப் பாலத்தின் மேலே மோட்டார்ச் சயிக்கிளில் ஏறி சிலுசிலு என ஓடிச் செல்வதில் புதுமை யான ஓர் இதம்.

அண்ணா அவனை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றார். அவன் படலை திறந்து மோட்டார் சயிக்கிளை உள்ளே கொண்டு செல்ல இயலவில்லை. வளவுக்குள் போவதற்கு இயலா இட்டு முட்டு. கையளவு நிலத்தில் ஒரு வீடு. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த இடம். அவர்கள் பிறந்த வளர்ந்த மண். அண்ணா சுவிசில் இருந்து வந்து ஒருவார காலமாக அங்கு தங்கி இருக்கின்றார். அவர் இங்கிருந்து சுவிஸ் போய்ப் பத்தாண்டுகள். அவர் குடும்பத்தை அங்கு அழைத்துக் கொண்டு விட்டார். இப்ப தன் உறவு களைப் பார்த்துப் போக, சகோதரிக்கொரு வீடு கட்டிக் கொடுக்க இங்கே வந்திருக்கின்றார்.

மோட்டார் சயிக்களைப் படலைக்கு வெளியில் தெரு ஓரத்தில் நிறுத்திவிட்டு அவன் போகின்றான். அந்த ஓலைக் குடிசைக்குள் அண்ணா மலர்ந்த முகத்துடன் மகிழ்ச்சியாக இருக்கின்றார். அவருக்கு எந்த அசௌ கரியமும் இருப்பதாகத் தெரியவில்லை. பிறந்த மண்ணில்... சொந்த வீட்டில்... வாழ்வதில்தான் என்ன சுகம்! அந்த இன்பம் அவர் அனுபவித்துக் கொண்டிருப்பது அவரது முகம் சொல்லாமல் சொல்கிறது.

அவனைக் கண்டு "போவமா?" எனப் புறப்படுகின்றார். காலை ஒன்பது மணி பிந்தாமல் நிலச் சொந்தக்காரனைப் போய்ச் சந்திக்க வேண்டும். ஒன்பது பிந்தினால் அடிவளவுக் கள்ளில் கொஞ்சம் கொஞ்சமாக அவர் மூழ்க ஆரம்பித்து விடுவார். அதன் பிறகு அவரைக் கண்டு பேசப் போனால் அவர் குலப் பெருமை.. அரச உத்தியோகம் துறந்த தமிழ்ப் பெருமை எல்லாம் அவர் வாயினால் சொல்லச் சொல்லப் பொறுமையாக் கேட்டாக வேண்டும். கள்ளுக்கு இசைவு கதை என்பார்கள். அந்த உண்மையை அவர் சொல்லிச் சொல்லி நிரூபித்துக் கொண்டிருப்பார். அந்தக் கதைகள் எல்லாம் அவர்கள் ஏன் கேட்க வேண்டும்?

அவன் மோட்டார் சயிக்கினை எடுக்கின்றான். அவன் பின்னால் வந்து அண்ணா அதில் ஏறிக்கொள்கிறார். அவர்கள் வீட்டு ஒழுங்கைப்

புழுதி, கல், மேடு பள்ளம் எல்லாம் தாண்டி ஓடிச்சென்று சற்று நேரம் கழிந்து நேர்த்தியானதார் போட்ட தெருவில் அந்த வீட்டுப் படலையில் வந்து தரித்து நிற்கிறது. அந்தப் படலை கோயில் கதவுபோல. வைரம் பாய்ந்த மரத்தினால் செய்யப் பெற்ற பழைய காலச் சங்கடப் படலை. சராசரியான ஒரு மனிதனால் இழுத்துத் திறக்க இயலாத கனதியான படலை. படலையின் இரு பக்கங்களிலும் கறுத்துப் பாசி படர்ந்த தெரு ஓரக் கற்சுவர்கள். அந்தச் சுவர்களுக்குப் பின்னே பரந்த வளவு. அந்த நிலப் பரப்பின் மத்தியில் அந்தத் தெருவோரச் சுவர் போலப் வீடு. அந்த வீட்டுக்கும் வெளி மதிலுக்கும் இடையே பரந்த முற்றம். முற்றத்தில் இரண்டு மாமரங்கள், ஒரு பலாமரம். வீட்டுக்குப் பின்புறமான அடிவளவில் மா, பலா, கொய்யா, தென்னை, பனை எனச் செறிந்து வளர்ந்த பயன்தரு தாவரங்கள், பறவைகள் மத்தியில் அந்த வீடு பழைய காலக் கோட்டை போலக் காட்சி அளிக்கிறது.

வீட்டுச் சங்கடப் படலைக்கு வெளியே தெருவில் சற்று நேரம் இருவரும் தாமதித்து நிற்கின்றார்கள். மோட்டார் சயிக்கிள் வந்து தரித்து நிற்கும் சத்தம் கேட்டு வீட்டு முற்றத்தில் நின்று நாய் ஒன்று குரைக்க ஆரம்பிக்கின்றது. நாயின் குரைப்பொலி கேட்டு வீட்டுக்குள் இருந்து யாரும் வெளியே வந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் இருவரும் தொடர்ந்து தெருவில் நின்று கொண்டிருக்கிறார்கள். நாய் ஓயாமல் குரைத்துக் கொண்டு நிற்கிறது. இப்ப என்ன செய்யலாம்? தெருவில் நின்று கொண்டிருக்க இயலாது. உள்ளே பார்த்துக் குரல் கொடுக்க வேண்டியதுதான். எப்படி அழைப்பது? “ஸேர்” என்று ஆங்கிலத்தில் யாரையும் அழைக்கலாம். ஆனால் “ஐயா” என்பதன் பரிமாணங்கள் பல! யாழ்ப்பாணத்து “ஐயா“ சாமானியமானவரல்ல. பாரம் பரியமான “ஐயா”வைச் சொல்லி அழைப்ப தற்குத் தயக்கமாக இருக்கிறது. இப்ப உள்ளே பார்த்துக் குரல் கொடுப்பது யார்? இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துச் சுணங்கி நிற்கின்றார்கள். இனி வேறு வழியில்லை என்ற நிலை. அண்ணா குரல் கொடுக்கின்றார். ”ஐயா…ஐயா…” நாய் தொடர்ந்து குரைக்கிறது. “ஐயா…ஐயா…ஐயா” ஓர் அசுகையுமில்லை. சற்றுப் பலமாக மீண்டும் குரல் கொடுக்கின்றார். நாய் ஆதாளி போடுகிறது. அங்கும் இங்கும் பாய்ந்து ஓடுகிறது. என்ன செய்வது! காரியமாக வேண்டுமே.“வா… உள்ளே போவம்” அண்ணா சங்கடப் படலையைப் பிடித்து மெல்ல இழுக்கின்றார்.

“ஆரது…? அங்கே… வெளியிலே நில்லுங்கோ வாறன்!” வீட்டுக் கதவைத் திறந்தவண்ணம் மிடுக்கான அவர் குரல் உள்ளே இருந்து ஒலிக்கிறது. “டேய் போ உள்ளுக்கு!” நாயை அதட்டுகின்றார். அது வாலை மடக்கிக் கொண்டு திறந்து கிடக்கும் கதவுக் கூடாக வீட்டுக்குள்ளே ஓடுகிறது. அவர் விறுவிறுவென்று நடந்து வந்து சங்கடப் படலையை இழுத்துத் திறந்து கொண்டு தெருவுக்கு வருகின்றார். அவர் அரையில் கறுத்த கரையிட்ட நான்கு முழ வேட்டி, தோள் மீது பச்சை வண்ணக் கைத்தறிச் சால்வை, நெற்றியில் அழுந்திப் பூசிய திருநீறு என்பவற்றோடு

*முகத்தில் விழுந்த சுருக்கங்களுமாய்த் தோன்றுகின்றார்.*

*தெரு ஓரத்தில் இருவரும் நின்று கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் இருவரையும் விழிகளை அகலத் திறந்து அதிசயமாக அவர் பார்க்கின்றார். கைமுட்டச் சட்டை, கால்முட்டக் களிசான், காலில் சப்பாத்து, மடிப்புக் கலையாத உடுப்பு, ஒழுங்காக வாரிவிடப்பட்ட கேசம். படித்தவர்கள், பதவிகளில் இருப்பவர்கள், பணவசதி படைத்தவர்கள், பெரிய குடும்பத்தில் பிறந்தவர்களாக இருக்க வேண்டுமென முதல் பார்வையில் அவர் தீர்மானித்து விடுகின்றார். அவர்களை இப்படித் தெருவில் நிறுத்தி இருக்கக் கூடாதென அவர் உள்மனம் குறுகுறுக்கிறது. ஆனாலும் "ஆரென்று அறியாமல்..." என எண்ணிக் கொண்டு கண்களைக் கூசி, உதட்டைப் பிதுக்கி, நெற்றியைச் சுருக்கி, மேலும் கீழும் பார்த்து இருவரையும் நோட்ட மிட்ட வண்ணம் அவர்கள் இருவரையும் படலைக்கு வெளியே தெருவில் நிறுத்தி வைத்துப் பேசுவது தவறாக இருக்குமோ? என ஒருகணம் மனம் விசனப்படுகிறது. இப்ப என்ன வந்து விட்டது? பிறகு உள்ளே அழைத்துக் கொண்டு போகலாம் என மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு "தம்பி யவை நீங்கள் ஆரைத் தேடுகிறியள்?" மிக அன்போடு பணிவாக வினாவு கிறார்.*

*"உங்களைத் தான் தேடி வந்தனாங்கள்"*

*"என்னையோ?" அவருக்கு அதிசயமாக இருக்கிறது. தெளிவாக ஒன்றும் விளங்காமல் அந்தரப்படுகின்றார். "தம்பியவை எங்கே இருக் கிறனீங்கள்?" மிக மரியாதையாக அவர்களை நெருங்கி வந்து நின்று கேட்கின்றார்.*

*"இந்த ஊரிலே தான்"*

*"இந்த ஊரிலேயோ...? புத்தூரி லேயோ... இதென்ன எனக்குத் தெரி யாதா...?" அவர் தன்னை மறந்து அதிசயத்தில் வாயைத் திறந்து கொண்டு நிற்கிறார்.*

*"நான் முந்தி விதானையாராக இருந்தனான்"*

*"எங்கே?"*

*"இந்தப் பகுதிக்கு"*

*"எனக்கு ஒண்டுமாத் தெரியேல்லைத் தம்பி. வரவர மறதி கூடிப் போச்சு" அவர் மேலும் குறுகிப் போகிறார்.*

*"சின்னட்டியின்ரை"*

*"அட... அட... இவன் கள்ளுக் கொட்டில் சின்னட்டியின்ரை மோனே நீ? சட்டென்று அவர் நிமிருகின்றார். இதைச் சொல்லுறதுக்கு ஏன் சுத்தி வளைக்கிறாய்? நீ எங்கே விதானையாக இருந்தனீ? கிராம சேவகர் வேலை பாத்தனீ. சேவகர் வேறை, விதானை எண்டது வேறை. என்ரை பேரன், தாய்மாமன் எல்லாரும் விதானைமார். தகப்பன் வழிப்பேரன் மணியகாரன். அதெல்லாம் உங்களுக்குத் தெரியாமல் இருக்காது. அது சரி...*

*உன்னைக் கனகாலம் கண்ணில காணயில்லை?"*

*அவர் பேசப் பேச அவர்கள் இருவர் முகமும் பட்டென்று கறுத்துச் சோர்ந்து போகிறது. அண்ணா தன் மனதில் உண்டான உளைச்சலை வெளியே காட்டிக் கொள்ளாமல் "சுவிசுக்குப் போயிருந்தனான்" என மெல்லிடுகிறார்.*

*"இதார்? உங்கடை ஆக்கள் மாதிரித் தெரியயில்லை!"*

*"என்ரை தம்பி"*

*"தம்பியோ...? இவன் பொடியனை நான் ஒரு நாளும் காணயில்லை. என்ன செய்யிறான்.?"*

*"பாங் மனேஜர். வடமராட்சியில் கலியாணம் செய்திருக்கிறார்."*

*"உதென்ன உத்தியோகம்? நானுந்தான்; உத்தியோகம் பாத்தனான். அதை உதறி எறிஞ்சு போட்டு வந்தனான். அது போகட்டும்... இப்ப என்னத்துக்கு வந்தனீங்கள்?"*

*"எங்கடை வீட்டோடை சேர்ந்த நிலம்..."*

*"எடேய் தம்பியவை, நான் வித்துத் தின்ற சாதியில்லைக் கண்டியளோ"*

*"நாங்கள் குடியிருக்கிறதுக்கு வசதியில்லை..."*

*"ஓமோம்... நீங்களும் இப்ப வசதி பாத்தி ருக்கத் துடங்கி விட்டியள். அதிலே எங்களுக்கு அஞ்சு பரப்பு நிலம். கொப்பன் பாவமெண்டு ஒரு பரப்பு நிலம் மலிவான விலைக்கு என்ரை தகப்பன் குடுத்தவர். அது போகட்டும். நீங்களும் வந்து நிற்கிறியள். நான் இப்ப என்ன செய்ய வேணும்?"*

*"வீட்டோடை சேர்ந்த நாலு பரப்பையும் தந்தால்..."*

*"அதுதான் சரி. நீங்கள் எங்கடை பிள்ளை யள். அந்தக் காணியை உங்களுக்குத்தான் தர வேணும். வேறை பக்கத்தாலேயும் கேள்வி வந்தது. குடி இருக்கிற உங்களை ஒரு சொல்லுக் கேட்க வேணுமெண்டுதான் நினைச்சிருந்தனான். அதுசரி விலை தலை என்ன மாதிரி?"*

*"நீங்கள்தான் ஒருமாதிரிப் பாத்துச் செய்யுங்கோ!"*

*"ஊர் உலகத்திலே போற விலையைத் தந்தால் சரி"*

*"உள் ருக்கே நாப்பது நாப்பத்தைஞ் செண்டு போகுது"*

*"உதென்ன சூடை விலை பேசுகிறாய்?"*

*"நாங்கள் ஒரு ஐம்பது தரலாம்"*

*"ஓம் ஐயா"*

*"ஒரு தருவன். வாங்கினமன்று லெட்சப்படி எண்டால் தருவன். வாங்கினால் நாலு பரப்பும் வாங்க வேணும். வேறை கதைக்கு இடமில்லை" அவர் அறுதியாகச் சொல்லி முடிக்கின்றார்.*

*அண்ணாவும் அவரும் பேசப் பேச அவன் எல்லாவற்றையும்*

*கவனித்துக் கொண்டு நிற்கின்றான். அவன் மௌனமாக அப்படி நின்று கொண்டிருப்பது அவர் மனதில் எரிச்சலை மூட்டுகிறது. "நீ என்ன பேசாமல் நிக்கிறாய்?" அவனைப் பார்த்து அலட்சியமாக முகத்துக்கு நேரே கேட்கின்றார். அவரை விழித்துப் பார்த்த வண்ணம் அவன் வாய் திறக்காமல் நிற்கின்றான்.*

*அவன் வீட்டில் இருந்து புறப்பட்ட சமயம் அவன் மனதில் தோன்றிய அந்தத் அதிருப்தி இப்பொழுது பெருகிக் கொண்டிருக்கிறது. அவன் வாய் திறந்து ஏறுமாறாக எதனையாவது சொல்லி விடக்கூடா தென்னும் எச்சரிகை உணர்வு மனதில் எழ, "நான் மூத்தவன் தானே கதைக்க வேணும்" என அண்ணா முந்திக் கொள்ளுகின்றார்.*

*"சரி...சரி...வீட்டுக்குப் போய் யோசிச்சுக் கொண்டு வாருங்கோ! எல்லாம் பேசலாம் முடிவாக அவர் சொல்லிக் கொண்டு அந்தச் சங்கடப் படலையைப் பிடித்திழுத்து உள்ளே புகப் போனவர், திடீரென்று அது நினைவுக்கு வர, படலையைக் கைவிட்டு விட்டு, மீண்டும் அவர்கள் பக்கம் திரும்பி, "நீங்கள் வந்து படலை யிலே நிண்டு கூப்பிடுங்கோ, நான் வருவன்" எனக் கண்டிப்பாகச் சொல்லி வைத்து விட்டு அந்தப் படலையைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்துத் திறந்துகொண்டு உள்ளே போகின்றார்.*

*அவர்கள் இருவர் பாதங்களுக்குக் கீழுள்ள நிலம் மெல்ல மெல்ல நழுவிப் போய்க் கொண்டிருப்பது போல அவர்கள் இருவரும் உணரு கின்றார்கள்.*

மல்லிகை - 41 ஆவது ஆண்டுமலர்



கதாசிரியர் தெணியான்

சாகித்திய ரத்னா தெணியான் அவர்கள் ஈழத்து கலை இலக்கிய உலகின் உன்னதமான படைப்பாளிகளில் ஒருவர். 150 இற்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சொத்து, மாத்துவேட்டி, இன்னொரு புதியகோணம், ஒடுக்கப்பட்டவர்கள், தெணியானின் ஜீவநதிச்சிறுகதைகள் என்னும் ஐந்து சிறுகதைத்தொகுதிகளை வெளியிட்டுள்ளார். தெணியானின் கதைகளில் மனிதாபிமானம் முன்னிலைப்படுத்தப்பட்டு இருக்கும். ஒடுக்கப்படுகின்ற மனிதர் களுக்கான குரலாக தெணியான் குரல் கொடுத்து வந்தார். இவரது கதைகள் வாயிலாக இதனை தெளிவாக தரிசிக்கக் கூடியதாக இருக்கின்றது.



தொகுப்பாசிரியர் க. மதன்

ஈழத்துத் தமிழ் இலக்கியங்களை ஆழ நேசிக்கும் கனகரத்தினம் மதன் - கைதடியில் பிறந்து கனடாவில் வசித்துக் கொண்டிருப்பவர். தெணியான் அவர்களின் தீவிர வாசகன். அவரது படைப்புகளை நேசிப்பதோடு ஒடுக்குமுறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழும் மனங்கொண்டு அந்தத் தளத்தில் நின்று தனது பங்களிப்புகளை நிறைவாக வழுங்கியதோடு புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பினும் மண்ணின் மீதான பற்றுதலோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்.

ISBN 955524963-6